
223387
223387

ஆனந்த போதினி.

மலர் 16. பகுதி 2. ஆக 17. 1930.

JL
M211, N15AB.
N30.16.2
[illegible]

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்

வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின்

# - இரகசியங்கள். -

## (மூன்றும் பதிப்பு)

அழகிய சிலைம கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடையதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளி

யிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக ஜோதிஷசாஸ்திரத்தின் சாரங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும்; நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், வியன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாசிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அநுசரித்தால்தான் அனைத்து ஆனந்தமும் அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலாமென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய மூஷிகக்காம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையானாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுயஉருவைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பலகொலைகளைவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், மூஷிகக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

## MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துச் சரக்குகளின் முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளதை செவ்விக்கணிமேல் விஷயமாக நன்கு விளக்குகிறது. இன்னின்ன ரோகங்களுக்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து உபயோகிக்கவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக்கு உதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அநுபவமிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் வியாதிகளுக்குத் தாங்களே கூடியவரையில் ரோகங்களுக்குப் பரிகாரம் செய்துகொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** நைனியப்பேட்டை, நெ. 187, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலம் கற்றுக்கொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(மூன்றாம் பதிப்பு) விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

எம்.ஏ., எல்.டி., பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல இடர்ப்பாடுகளை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற்கு உதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதில் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறு உதவி, கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புஸ்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிசீக்கிரத்தில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்படிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் விலாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நைனியப்பேட்டை நெ. 187, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த நாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவர்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத்பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல்விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 8 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

[illegible] சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.





## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

(இரண்டாம் பதிப்பு)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந்திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வாம்பாள் (5-பாகங்கள்) 9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் ,, ,, 1 10 0
ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு
ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் ,, ,, 8 0 0

**பவளத்தீவு 2 பாகம் 3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனகாலப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா. 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகிகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியனவென்னமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 3-8-0.

# மதனம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் வஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும். 2 பாகமும் விலை ரூபா 3.

அற்புதமர்மங்கள் அல்லது
ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடையவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

அமராவதி 2 பாகம் 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அ[illegible] ளாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

இரத்தினபுரி இரகசியம் 2 பாகம் 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

குசேலோபாக்கியான வசனம் 1 0 0

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின் சிறப்பு, அவந்திக்கத்தே மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செய்தல் முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

# மூவர் அடங்கன் முறை.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் பாடிய தேவாரங்கள்
முழுமையும் அடங்கிய பெரிய புத்தகம்.

இவ்வருமையான புத்தகம் ஒவ்வொரு சைவர் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய தொன்று. இவ்வடங்கன் முறையினது பிரபாவமும் அருமையும் அளவிடுதற் கரியது. இதனை ஒவ்வொருவரும் அன்றாடம் விதிப்படி சிரத்தையோடு பாராயணம் பண்ணி வருவாராயின் இஷ்டகாமியார்த்தங்களை எளிதில் அடையக்கூடு மென்பது பெரியோர் துணிபு.

பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கு ஓர் அரும் பெரும் தெப்பமாயும் சைவசமயத்துக்கோர் திலகமாயும் விளங்கும் இத்துணை அரிய பெரிய நூலை அச்சிடாது வாளா இருத்தல் சைவ சமயத்தினருக்கே மிகவும் இழிவைத் தருமென்று கருதி அதிகச் செலவிட்டு ராயல் 8-பேஜ் சைசில் புதிய எழுத்துக்களால் சரித்திரக் குறிப்பு, ஸ்தலக்குறிப்பு, இராகம் முதலியன பிரித்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிட்டிருக்கிறோம். கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டதால் சீக்கிரம் முந்திக்கொள்வோர்க்கே கிடைக்கும். பிறகு கிடைப்பது அரிது. இதன் விலை ரூபா 5.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| கற்பகச்சோலையின் அற்புதக் | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன் 2பாகம் | 3 | 4 |
| மதனும்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 8 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள்அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 8 | 0 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தீனகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்னபுரி ரகசியம் 2-பாகமும் | 4 | 0 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 |
| மின்சாரமாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தஸிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனஸிங், சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் | 4 | 0 |
| விவேகாநந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாளபகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீதரம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |
| துயரானன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மிகதை ... | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளினசுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயணசங்கிரகவசனம் | 2 | 0 |
| குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 10 |
| உதயணன் ... | 0 | 8 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன்வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மூப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 8 |
| பரசுராமன் ... | 0 | 8 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரிகதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 8 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோச விளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணைகானன்ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| கமலமதி ... | 0 | 8 |
| காமசேன ரசிகா ... | 0 | 8 |
| பூர்ணவல்லி ... | 0 | 6 |
| ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல் | 0 | 8 |
| தாலிகட்ட மறந்த கதை ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | பிரமோதூத ஹு ஆவணி மீ கஉ | பகுதி |
|---|---|---|
| 16 | 1930 ஹு ஆகஸ்டு மீ 17வ. | 2 |


## கடவுள் வணக்கம்.

கன்னலமு தெனவுழக் கனியெனவும் வாயூறு
கண்டெனவு மடியெடுத்துக்
கடவுளர் கடந்ததல வுழதழுது பேய்போற்
கருத்திலெழு கின்றதெலாம்
என்னதறி யாமையறி வென்னுமிரு பகுதியா
லீட்டுதமி ழென்றமிழினுக்
கின்னல்பக ராதுலக மாராமை மேவிட்
டிருத்தலா வித்தமிழையே
சொன்னவனி யாவனவன் முத்திசித் திகளெலாம்
தோய்ந்தநெறி யேபடித்தீர்
சொல்லுமென வவர்நீங்கள் சொன்னவவை யிற்சிறிது
தோய்ந்தகுண சாந்தனெனவே
மின்னல்பெற வேசொல்ல வச்சொல்கேட் டடிமைமனம்
விகசிப்ப தெந்தநாளோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

கன்ம மேது கடுநர கேதுமேற்
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ
என்ம னோத மெய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்க ணுதை னிருக்கவே.

உனக்குவமை யாக்கருணை யுள்ளவரும் வன்மைக்
கெனக்குவமை யானவரு மில்லை பராபரமே.

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் தம்முடைய தமிழ் மாலையைச் சித்தர்கணம் பாராட்ட வேண்டும் என்று அடிகள் விரும்புகிறார்.

(இ-ள்.) வேதாந்த சித்தாந்தங்களைச் சமரஸமாக உணர்ந்து, சிறந்த நிலையில் விளங்குகின்ற ஞானச் சித்தர்கணமே! கருப்பஞ்சாறு, முக்கனி, நாவூறச் செய்யும் கற்கண்டு ஆகிய இவைகட்கு நிகராகிய அடியைக் கடவுளர் எடுத்துக் கொடுக்கவில்லை. என் தமிழ் மாலை நானே பேயைப்போல் பல காலும் அழுது பிதற்றிச் செய்ததாகும். இன்னதுதான் கூறவேண்டும் என்ற நியதியை நான் மேற்கொள்ளவில்லை. உள்ளத்தில் தோன்றியவற்றை யெல்லாம் கூறி யிருக்கின்றேன். எனது தமிழ் அறியாமை—அறிவுடைமை என்னும் இருதன்மையாலும் அமைந்ததாகும். அத்தகைய என் தமிழை, பேரன்பு மேலிட்டிருத்தலால் உலகம் குற்றம் கூறாது. நிற்க, முத்தி சித்திகளெல்லாம் அமைந்த மார்க்கத்தைக் கற்ற பெரியீர்! இத்தமிழ் மாலையைச் சொன்னவன் யாவன்? தயை கூர்ந்து கூறுங்கள் என்று அவ்வுலகத்தார் வினவின், நீங்கள் அதற்கு விடை யிறுப்பீர்களன்றோ? அவ்விடை மொழிகளில் "அவன் சாந்த குணம் சிறிது அமைந்தவன்" என்று ஒளி உண்டாகுமாறு புகழ, அடியேன் அப் புகழ்மொழி கேட்டு மனமகிழ்ச்சி கொள்ளுவது எக்காலமோ? என்பதாம்.

கன்னல்—கரும்பு. முக்கனி—மா, பலா, வாழை. கண்டு—கற்கண்டு. தமிழ்—தமிழ் மாலை. இன்னல்—குற்றம்.

(2) இதனால் ஒருவனுக்கு இறைவனது திருவருள் இருந்தால் கன்ம முதலியன தொடரா என்று கூறுகின்றார்.

(இ-ள்.) என் விருப்பத்தை யெல்லாம் நான் அடையுமாறு கிருபை செய்கின்ற, நன்மை மிகுந்த மூன்று கண்களையுடைய இறைவன் எனக்கு ஆதரவா யிருக்கும்போது தீவினை ஏது? கொடிய நரகம் ஏது? மேல் உண்டாகும் பிறவி ஏது? இவைகளுள் ஒன்றேனும் என்னைப் பற்றக் கடவதோ? இல்லை என்பதாம்.

(3) (இ-ள்.) தேவரீருக்கு நிகராகக் கருணை வாய்ந்தவரும், கடின சித்தத்தில் எனக்கு நிகரானவரும் இல்லை என்பதாம். பராபரமே என்பது விளி.

---

கணவனும் வ[illegible]த்திற்கு மேல் [illegible] செய்து; மனைவியும் அவ்வழியையே பின்பற்[illegible]ல் கஷ்டம் எவ்வாறு நீங்கு[illegible]

---

" தன்ன[illegible]-நீங்கப் பயமும் நீங்கும் "

2:23387

ஆனந்தபோதினி
பிரமோதூத
௵ ஆவணி ௴ 1௳

## வறுமை நிலை

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

உலக வாழ்க்கையில் வறுமைக்கு நிகராகிய துன்பம் வேறொன்று இல்லை. இல்லாரை எல்லாரும் எள்ளுவர். இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாயும் வேண்டாள். அவன் வாயிற் சொல் செல்லாது. அவனுக்கு இம்மை இன்பமும் இல்லை மறுமை இன்பமும் இல்லை. மக்கட்குச் சிறந்த அன்பும் அருளும் அறனும் வறிஞனிடம் அருமையாகும். வறுமைத் துன்பத்தால் எல்லாத் துன்பங்களும் வளரும்.

பண்டைக் காலத்தில் நமது பாரதநாடு செல்வங் கொழிக்கும் சீரிய நாடாக விளங்கியது; இந்திய மக்கள் இந்திரபோகம் நுகர்ந்தனர் என்று கூறலாம். நமது நாட்டில் முற்காலத்தில் பொருட் செல்வம் சிறந்து விளங்கியமையால் இம்மை மறுமைக்குரிய கல்விச் செல்வமும் தலைசிறந்து விளங்கியது. இப்பொழுதோ? வறுமையும் அறியாமையும் நோயுமே நம் கண்கட்குக் காட்சி அளிக்கின்றன. ஒரு காலத்தில் உலகத்துக்கே உண்டியும் உடையும் அறிவும் அளித்த நம் பாரத அன்னை, இப்பொழுது தன் மக்களைக் காக்கும் ஆற்றல் அற்று, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏழைகள் தம் பெண்டு பிள்ளைகளோடு அந்நிய நாடுகட்குக் கப்பல் ஏறும் கொடிய காட்சியைக் கண்டு வருந்துகின்றாள்.

---

" சோம்பலே சோறின்மைக்கு வழி "

நமது நாடு செல்வத்திலும் கல்வியிலும் சிறந்து நாகரிக வாழ்க்கை மேற்கொண்டிருந்த காலத்தில், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றிக் காட்டு விலங்குகட்கு நிகராகக் காலங் கழித்து வந்த பிறநாட்டு மக்கள் எல்லாரும், இப்போது, சீரும் சிறப்பும் பெற்று இறுமாப்புடன் வாழ்கின்றனர். நம் நாட்டின் ஈன நிலையைக் கண்டு எள்ளி நகையாடுகின்றனர். காரணம் என்னை? அவர்கள் எல்லாரும் விவசாயத்தில் வீறுகொண்டு விளங்குகின்றனர். விஞ்ஞான அறிவில் விஞ்சி நிற்கின்றனர். கைத்தொழில் முறையில் கனங்கொண்டு வாழ்கின்றனர். வியாபாரத் துறையில் வெற்றி கொண்டு திகழ்கின்றனர். நாம் என்ன செய்கின்றோம்? உண்டிக்கும் உடைக்குமே பிறரை எதிர்நோக்கி வாழ்கின்றோம்! நீர் நில வளங்களிற் சிறந்த நமது பாரத நாட்டில்—முப்பத்து முக்கோடி மக்கள் வாழ்கின்ற நமது பாரத நாட்டில்—உழவுத் தொழில் மழுங்கியது! கைத்தொழில் கையற்றுப் போயிற்று! வணிகச் சிறப்பு வாடி வதங்கிற்று! விஞ்ஞானம் விளங்காததாயிற்று! இந்நிலையில் மக்கள் எங்ஙனம் ஈடேற்றம் பெறுவர் என்று கேட்கின்றோம்?

இக்காலத்தில் ஒவ்வொரு நாடும் பொருளாதாரத் துறையில் போட்டி போட்டுக்கொண்டு முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நமது நாடோ செயலற்று வாளா உறங்கிக் கிடக்கின்றது. பிறநாடுகளில் வாழும் மக்கள் ஒவ்வொருவருக்கும் நாடோறும் கிடைத்து வரும் சராசரி வருமானத்தையும் நமது நாட்டில் ஒவ்வொருவருக்கும் கிடைத்துவரும் வருமானத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது கன்னெஞ்சும் கரையும் என்பதில் ஐயம் இல்லை. அமெரிக்காவில் தினசரி ஒவ்வொருவருக்கும் சராசரி வருமானம் ரூ 3, ஆஸ்திரேலியாவில் ரூ 2—4—0, கிரேட் பிரிட்டனில் ரூ 2—1—4, கானடாவில் ரூ 1—10—8, இந்தியாவில் ஒரு அணா ஏழு பைகளே. நேயர்களே! மேற் குறிப்பிட்ட புள்ளி விவரங்களைச் சற்றே கூர்ந்து நோக்குங்கள்! ரூபாக் கணக்கில் சம்பாதிக்கும் பிறநாட்டார் ஒரு அணா ஏழு பைகளைச் சம்பாதிக்கும் இந்தியரை இழிவாய்க் கருதுவதில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்? நாம் இன்னும் பழம் பெருமைகளைச் சொல்லிப் பாராட்டிக்கொண்டே காலங் கழிக்கின்றோம். அப்பெருமைகளைப் பன்னிபன்னிப் பேசுவதாற் பயன் என்? நமது தற்கால நிலை என்ன என்பதை அன்றோ சிந்தித்தல் வேண்டும்?



நமது வறுமை நிலைக்கு அந்நிய ஆட்சியே காரணம் என்று சொல்லப்படுகிறது. இவ்வுண்மையை மறுக்க யாரும் முன் வரமாட்டார் என்பது உறுதி. ஆனால் முழுப் பழியையும் அந்நிய ஆட்சியின் தலையில் போட்டுவிடவும் முடியாது. “செய்தக்க வல்ல செயக் கெடுஞ் செய்தக்க, செய்யாமை யானுங் கெடும்” என்னும் பொய்யா மொழிக் கிணங்க நாம் இன்னும் சில செய்யத்தகாத காரியங்களைச் செய்துகொண்டிருப்பது, செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல் இருப்பது ஆகிய இவ்விரண்டும் நம் நாட்டின் வறுமையை வளர்க்கின்றன என்பதையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். நாம் பொருளற்ற வழக்க வொழுக்கங்கட்காக ஆண்டுதோறும் ஏராளமான பொருளைச் செலவு செய்கின்றோம். தேர்தல் வேட்டையாடுவதில் ஆயிர மாயிரமாகத் தொலைக்கின்றோம். இப்பொருள்களையெல்லாம் ஏன் தக்க முறையிற் பயன்படுத்தக் கூடாது?

தற்காலக் கல்வி முறையும் நமது வறுமைத் துன்பத்தைப் போக்குவதா யில்லை. மிகுந்த பொருட் செலவுசெய்து அல்லும் பகலும் அல்லற்பட்டுப் படித்துப் பெரிய பெரிய பட்டம் பெற்ற பட்டதாரிகள் எல்லாரும் உத்தியோகத்தையே நாடி நிற்கின்றனர். இவர்கள் கற்ற கல்வி விவ்சாயத்திலோ, வியாபாரத்திலோ, கைத்தொழிலிலோ நுழைந்து வேலைசெய்ய இவர்களைத் தூண்டுவதா யில்லை; அடிமை மனப்பான்மையையே உண்டாக்கி விடுகின்றது. எத்தனை பேருக்கு உத்தியோகம் கொடுத்துவிட முடியும்? இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. நமது நாட்டில் கற்றவர்களை விட, கைத்தொழில்—வியாபாரத் துறைகளில் உள்ள கல்லாதவர்களே நல்ல நிலைமையில் காலங் கழிக்கின்றனர் என்று கூறலாம். இக்காலக் கல்விக்காகச் செலவு செய்துவிட்டு வறுமைக் கொடுமை அநுபவிப்பதை விட, அப்பணத்தை வியாபாரத்திலோ, கைத்தொழிலிலோ போட்டால் நல்ல வருவாய் பெற்றுக் கவலையின்றி வாழலாம் என்பதிற் சந்தேகம் இல்லை. எந்த முன்னேற்றம் அடைந்துள்ள நாடும் உத்தியோகங்களினாலே தன் பொருளாதார நிலையைப் பெருக்கிக்கொண்டது என்று கூறமுடியாது. ஒரு நாட்டின் பொருளாதாரச் செழுமை அந்நாட்டின் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றின் செழுமையையே பொறுத்திருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சியானது பொருளை வளர்ப்

“உத்தமனுக்கும் தப்பிலிக்கும் உடன்படிக்கை வேண்டாம்”

பதற்குப் பெருந்துணையாக விளங்குகின்றது. மேனாடுகள் எல்லாம் விஞ்ஞானத் துறையில் விசேஷ வளர்ச்சி பெற்றிருக்கின்றன. கீழைத் தேசங்களுள் ஜப்பான் தற்காலத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்த நாடாக விளங்குகிறது. எல்லாத் துறையிலும் அது மேனாடுகளோடு போட்டிபோட முனைந்து நிற்கின்றது. சில ஆண்டுகட்கு முன்னர் ஜப்பான் தேசம் என்று ஒன்று இருந்ததாகவே யாருக்குந் தெரியாது. அவ்வளவு கீழ் நிலைமையில் இருந்தது. பின்னர் வியக்கத்தக்க முறையில் முன்னேறிவிட்டது. அதற்குக் காரணம் என்னை? விஞ்ஞான சாஸ்திரத்திலும், கைத்தொழிற் கல்வியிலும் தேர்ச்சி பெற்றதே அதன் முன்னேற்றத்துக்குக் காரணம் ஆகும். ஜப்பானிய இளைஞர்கள் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகட்கு அனுப்பப் பெற்றனர். அவர்கள் விஞ்ஞான சாஸ்திரத்திலும், கைத்தொழிற் கல்வியிலும் சிறந்த புலமை பெற்றுத் திரும்பினர். அவர்களைக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவி கைத்தொழில்கள் வளர்ச்சி செய்யப்பெற்றன. வியாபாரம் விருத்தி செய்யப்பட்டது. இதனால் ஜப்பான் தீவிரமாக முன்னேறத் தொடங்கி விட்டது.

நமது நாட்டில் இன்னும் இத்தகைய உணர்ச்சி தோன்றியிருப்பதாகக் கூறமுடியவில்லை. வறுமைப் பிணியைத் தீர்க்க மேற்கூறிய கல்வி முறையே தக்க மருந்தாகும். நமது நாட்டு மக்கள் எல்லாரும் வெறுங் கல்வியில் வைத்திருக்கும் மோகத்தைச் சற்றே விலக்கிவிட்டு விஞ்ஞான சாஸ்திரத்திலும், கைத்தொழில்—விவசாயக் கல்விகளிலும் சிந்தை செலுத்தல் வேண்டும். ஜப்பான் இளைஞர்களைப் போலவே இந்திய இளைஞர்களும் மேனாடுகட்குச் சென்று புதிய கல்வி முறைகளில் தேர்ச்சிபெற்று வரவேண்டும். அவர்களைக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவவேண்டும். இந்தியா விவசாய நாடு. இப்பொழுது இந்திய விவசாயிகளிற் பெரும்பான்மையோர் கடனில் மூழ்கி யிருக்கின்றனர். சாஸ்திரீய முறையில் விவசாயத்தை வளர்ச்சி செய்யும் புதிய முறைகள் இவர்கட்குத் தெரியாது. இன்னும் பழைய முறைகளையேதான் கையாண்டு வருகின்றனர். இதனால் போதிய ஊதியம் கிடைப்பது அருமையா யிருக்கிறது.

---

"உடல் உள்ளவரையிற் கடல்கொள்ளாக் கவலை"



அமெரிக்கா முதலிய நாடுகளில் விவசாயம் விசேஷ அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அவர்கள் நூதன முறைகளால் பாறைகளிலும் பலன் கண்டுவிடுகின்றனர். நாமும் ஏன் அம்முறைகளைக் கைக்கொள்ளக் கூடாது என்று கேட்கின்றோம்.

நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு நாம் அரசாங்கத்தாரை மாத்திரம் முழுதும் எதிர்பார்ப்பதில் பயன் உண்டாகாது. பொதுஜனத் தலைவர்கள் இவ்விஷயத்தில் தீவிர சிரத்தை காட்ட வேண்டும். ஒரு பொதுநிதி ஏற்பாடு செய்து நமது இளைஞர்களை மேனாடுகட்கு அனுப்பிப் புதிய கல்விப் பயிற்சிபெறச் செய்யவேண்டும். நமது நாட்டில் ஏராளமான ஆலயங்களும் மடங்களும் இருக்கின்றன. இவைகட்கு இலட்சக்கணக்காக வருவாயுள்ள மானியங்களும் உண்டு. இந்த மானியங்கள் எந்த நன்னோக்கத்தோடு முற்காலத்தில் விடப்பட்டனவோ அந்நோக்கத்தை இப்போதுள்ளவர்கள் சரியான முறையில் நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. மானிய வருவாயெல்லாம் பெரும்பாலும் துர்விநியோகம் செய்யப்படுகின்றன. அன்னசத்திரத்தின் போரால் ஒரு சிலருக்கு இரண்டொரு வேளை சாப்பாடு போட்டுவிடுவதால் என்ன பயன் விளைந்துவிடும்? நாடு முழுதும் வறுமை நீங்கி நலம்பெற்று வாழ்தலே முறைமையாகும். நாடு வறுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது மக்கட்கு மறுமை இன்பத்தில் மனம் செல்லுமோ? ஒரு நாளும் செல்லாது. ஆதலால் இம்மை மறுமை இன்பங்களைப் பயத்தற் கேதுவாகிய கல்விப் பயிற்சியின் பொருட்டு மேற்கூறிய மானிய வருவாயைப் பயன் படுத்துவதில் எத்தகைய இழுக்கும் இல்லை என்பதே எமது எண்ணம். ஆதலால் பொதுஜனத் தலைவர்களும், தர்மகர்த்தர்களும், மடாதிபதிகளும், சர்க்காரும் நமது நாட்டின் பொருள் வளர்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மக்களுடைய வறுமை நோயை நீக்க விரைந்து முற்படுவார்களாக. எல்லாம் வல்ல இறைவனது திருவருள் நம் முன்னின்று துணைசெய்வதாக.

ஓம் தத் ஸத்

# ஆனந்த சந்திரோதயம்

தமிழாசிரியர் S. V. வாதராஜையங்கார்

"பட்டர் பெருமை பகர்வதற் கருமை" ஒவ்வொரு மதத்தின் சிறந்த கொள்கைகளையும், உயர்ந்த அனுஷ்டானங்களையும் மனம்பற்றி ஆராயும்போது, அந்தந்த மதஸ்தாபகர்களென்ன, நல்வழி காட்டிச் சித்தாந்தங்களைப் பரவச் செய்த பிரவர்த்தகர்களென்ன, ஆகிய இவர்களின் நினைவு உண்டாகின்றது. இவர்கள் சரித்திர வைபவத்தைப் படித்தறிவதும் ஆத்மஞான வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றது. இன்னோரில் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தை ஸ்தாபித்தவரான இராமாநுஜாசாரியரின் அந்தரங்க சீடர்களுள் கூரத்தாழ்வான் என்பவர் முதன்மை பெற்றவர். காஞ்சீபுரத்திற்குச் சமீபத்தில் மேற்றிசையிலுள்ள கூரம் என்னும் ஊரில் திருவவதரித்து ஸ்ரீ பாஷ்யகாரரிடம் ஆழ்ந்த பக்தியுடன் ஒழுகியவராதலால் கூரத்து ஆழ்வான் என்ற பெயர் பெற்ற இவர், தமது ஆசாரியன் ஸ்ரீரங்கத்திலே வாஸம் புரிந்தமையால், அவருடனேயே தாமுமிருந்து தமது வாழ்நாட்களைக் கழிக்கக் கருதித் தமது பொருளனைத்தையும் ஏழைகட்கு வழங்கிவிட்டுத் தாமும் தமது மனைவியுமாகப் புறப்பட்டுத் திருவரங்கத்தை யடைந்து, நாள்தோறும் திருவீதியிலே உபாதான மெடுத்துச் சீவனத்தை நடத்திவந்தார். அன்றன்று உபாதானஞ் செய்துகொண்டு வருவதை நாளைக்கென்று சிறிதும் வைக்காமல் அன்றே செலவிட்டு வாழ்ந்துவரும் நாளில், ஒரு தினம் மழை விடாது பெய்தமையால் ஆழ்வார் உபாதான நிமித்தம் ஏக முடியாதவராய், வேறு உணவின்றிப் பட்டினிகிடந்து, வெறுந் தீர்த்தமாத்திர முட்கொண்டு சிறிதும் கவலையின்றித் திருவாய்மொழி ஓதிக்கொண்டிருந்தார். அன்றிரவு வழக்கம்போல் திருவரங்கன் அக்காரவடிசில் அமுது செய்யும்போது ஊதப்படும் திருச்சின்ன ஒலி கேட்டது. கேட்டதும், ஆழ்வானின் தேவியாரான ஆண்டாள் "பெருமானே! உமது அடியார்களாகிய யாங்கள் பட்டினிகிடக்க நீர் மட்டும் குலாவி அக்காரவடிசில் அமுது செய்வீரோ?" என்று பக்தி வாத்ஸல்யத்தால் நினைத்தாள். நினைக்கவே, முற்று முணர்ந்த முழுமுதற் கடவுளான எம்பெருமான், அர்ச்சக முகமாகக் கோயில் பரிபாலகரிடம் தமக்கு அமுதான வடிசிலைக் குடை, கொடி, சாமரம் முதலிய மரியாதைகளுடன் கொண்டுபோய், ஆழ்வான் திருமாளிகையிற் சேர்ப்பிக்கக் கட்டளையிட்டருளினர். அங்ஙனமே





தர்மகர்த்தா சென்று அரங்கன் பணித்ததை யுரைத்து ஏற்றுக்கொள்ளும்படி ஆழ்வானை வேண்டினர். அடியார் பக்கலில் அவ்வற்புதமூர்த்தி கொண்டுள்ள அருளை வியந்த ஆழ்வான், ஆண்டாளை நோக்கி "இன்று பட்டினி கிடக்க நேர்ந்தது பற்றி நீ ஏதேனும் நினைத்ததுண்டோ?" என்று வினவ, அவளும் தான் நினைத்ததுண்மையென்று கூறினள். "எம்பெருமானிடம் இங்ஙனம் நிட்டூரம் பேசலாமோ" என்று கூறிப் பின்னர், அவளுடன் அவ்வக்கார வடிசிலை உண்டார். அதே காரணமாக, ஆண்டாள் கர்ப்பவதியாகி இரண்டு குமாரரை ஈன்றாள். இவ்விருவரும் பராசராம்சமும் வியாஸாம்சமுமாவர். ஆழ்வான், பாகவத சேவைக்குப் பாத்திரமாகப் பிறந்த தம்மிரு குமாரர்களுக்கும் தமது ஆசாரியரான உடையவரே நாம கரணம் செய்யக் கடவரெனக் கூறியிருக்க, இவ்விஷய மனைத்தையும் அறிந்த ஸ்ரீ பாஷ்யகாரரும் குழந்தை பிறந்த பதினோராம் நாளன்று தமது சீடர்களுடன் எழுந்தருளினர். எழுந்தருளியவர் தமது பிரதம சீடருள் ஒருவரான எம்பாரை நோக்கி அக்குழந்தைகளை எடுத்துவரச் சொல்ல, அவரும் கையிலெடுத்து, அவற்றிற்குத் திருஷ்டி முதலான தோஷங்கள் சம்பவிக்காதிருக்கக் காப்பாக த்வய மென்னும் மந்திரத்தால் ரக்ஷைசெய்து கொண்டுவர, அக்குழவிகளைக் கண்டதும் இராமாநுஜர் பரவசராகி "என்ன! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே" என்று வினவ, எம்பாரும் தாம் திருஷ்டி தோஷ நிவர்த்தியின் பொருட்டு ரக்ஷைசெய்து எடுத்துவந்ததாகக் கூறினர். இது கேட்ட, பாஷ்யகாரர் அக்குழந்தைகளுக்கு எம்பாரையே ஆசார்யராக நியமித்து, தமது திருக்கரத்தாலே பஞ்சாயுதத் திருவாபரணத்தைப் பூட்டி மூத்த குழந்தைக்கு 'பராசர பட்டர்' என்றும், இளைய குழந்தைக்கு 'வேதவியாஸ பட்டர்' என்றும் நாமகரணம் செய்தருளினர். இவ்விருவருள் மூத்தவரைப் பெரிய பட்டர் என்றும் பட்டர் என்றும் அழைப்பதுண்டு.

ஸ்ரீரங்கநாதன் குழந்தைப் பருவத்திலிருந்தே பட்டரைத் தமது புத்திரராகப் பாவித்து, தமது சந்நிதியில் திருமணத் தூணருகே கொணர்வித்துத் தொட்டிலிட்டுத் தாமும் தம் தேவியுமாகச் சீராட்டி வளர்த்து வருவாராயினர். இவ்வாறு வளர்ந்துவந்த பட்டர், அரங்கன் திருவமுது செய்ய அமுதுபாறையில் கொண்டுவந்து வைக்கப்படுகின்ற அமுதையெல்லாம் தமது சிறு செங்கரத்தால் அளாவி விளையாட, அமுதனும் அக்குழந்தையின் சிறுகை யளாவிய அடிசிலை மிகவும் விரும்பி ஏற்றருளி வருவாரானர். இதுபற்றி பட்டருக்கு " ஸ்ரீரங்கநாத புத்திரர்" என்ற மற்றொரு பெயரும் வழங்கப்படலாயிற்று. பகர்வதற்கு மிகவும் அருமையான இப்பட்டரின் சரித்திர வைபவத்தில் மிகவும் ரசமான அநேக சம்பவங்களும் ருசிகரமான திருவாய்மொழி வியாக்யானங்களும், அன்பருள்ளத்தைப் பரவசமாக்கும் தன்மையனவாயுள்ளன.

"கருவிலே திருவுடையார்" பருத்துக் களைத்துச் செழித்து வளர்ந்துள்ள எத்தனையோ செடிகளை நாம் பார்க்கின்றோம். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறைபாடு உடையனவா யிருக்கின்றன. ரோஜாச் செடி முளைக்கும் பொழுதே முள்ளுடன் தோன்றுகின்றது. அதன் மலரோ மணமுள்ளதாயும் மனோகரமானதாயு மிருக்கின்றது. ஆனால் அம்மலர் செடி முளைத்த பல நாட்களுக்குப் பின்னரே தோன்றுகிறது. சில மணமற்ற மலருடனும், பயனற்ற கிளைகளுடனும் தோன்றிப் பருத்து வளர்ந்து பயனேதுமின்றி யிருக்கின்றன. இவைபோல, நாம் எத்தனையோ மனிதர்களைக் காண்கின்றோம். ஒவ்வொருவரிடத்திலும் ஏதேனு மொரு துர்க்குண மிருக்கின்றது. சிலர் பிறந்ததிலிருந்தே தீயராயிருக்கவும் காண்கிறோம். பின்னர், அத்துணை துஷ்டச் செய்கைகளுக்கிடையில் இரண்டொரு நற்செயல்களும் புரியப் பார்க்கிறோம். பலர் தமக்கும் நன்மை தேடாதவராய், பந்து நண்பர் முதலான கிளைஞருக்கும் பயனற்றவராய், உடல் பருத்து, உதியமரம்போல வளர்ந்து பூமிக்குச் சுமையாய் மிருகத்தினும் தாழ்ந்த குணமுடையவராயிருந்து அழிகின்றனர். ஒரு செடியின் புஷ்பம் ஒருவித மணத்துடனும், தண்டு முதலியன வெவ்வேறு வாடையுடனு மிருக்கக் காண்கிறோம். இது போன்ற வேறுபாடு மனிதவர்க்கத்திலும் காணப்படுகின்றது. ஆனால் சிறு செடியான துளவியைக் கவனித்தால், அது முளைக்கும் பொழுதே வாஸனையுடன் கிளம்புகின்றது. வளர்ந்த பின்னரும் வேர் முதல் தளம் வரையில் யாவும் ஒரே மணமும் ருசியுமுடையனவாயிருக்கின்றன. இதனால்தான் இதற்கு ஒரு ஏற்றம். மனிதர் தன்மை இவ்வாறிருக்க வேண்டுமென்று உணர்த்தவும், "இத்துளவியைக் கொண்டு என்னை அருச்சிப்போர் இதன் தன்மையுடையவராகி சகல உயிர்களிடமும் ஒரு நிலையான அன்பு கொண்டு, பக்தி செய்வதில் ஆதிமுதல் இறுதி வரையில் ஒரே சித்த சுத்தியுடனிருக்கக் கடவர்" என்றுணர்த்துவது போல எம்பெருமான் அதனைத் தனக்குச் சிறந்ததொரு பொருளாகக் கொண்டுள்ளார். அதுபோல, பரமனது ஆணையால் பாரினில் திருவவதரிக்கும் பக்தசிகாமணிகளனைவரும் தாயின் வயிற்றில் கருப்பத்திற் பொருந்தியது முதலே ஞான நிஷ்டராய் குழந்தைப் பருவத்திலேயே குவலயத்தில் அருள்திறத்தால் அருஞ்செயல் பல புரிந்து, தமது வாழ்நாள் முழுவதும் உலகினரை உய்விக்கும் கருத்தே மேலிட்டவராய் நின்று திகழ்வர். இவர்களைப் பெரியார் "கருவிலே திருவுடையா" ரென்று கூறுவர். கருவிலே திருவுற்றமையால் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது மூன்றும் பிராயத்தில் "தோடுடைய செவியன்" என்றெடுத்து ஓதினாரன்றோ. பிறந்தது முதல் பிரகலாதன் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்யவில்லையா? இத்தகைய கருவிலே திருவுடையாரில் நமது பட்டரும் ஒருவராவர்.

---

"சொல்லிக்கொடுத்த சொல்லுங் கட்டிக்கொடுத்த சோறும் எது வரையில் நிற்கும்"

# கம்பர் கவிநயம்.

(பண்டிதர், ரா. திம்மப்ப ஐயர்.)

உலகெலாம் போற்றும் உத்தமக்கவிஞரின் உட்கருத்துக்கள் காரணத்துடன் தொடர்புண்டு ஆயுந்தொறும் மனத்திற்குப் பெரிதுமின்பம் பயப்பனவாமென்பது ஆன்றோரின் அனுபவ சித்தமாம். இதனாலன்றோ கவிஞர்பிரானாகிய கச்சியப்பமுனிவரும் தணிகைப்புராணம் களவுப் படலத்து 'ஆயுந்தொறும் இன்பந் தருங்கலை' எனக் கூறுவாராயினர். இதற்கெடுத்துக் காட்டாகக் கம்பரது இராமாவதாரத்திற் பல செய்யுட்களைக் காணலாம். அவற்றுள் ஒன்றை யீண்டெடுத்துக் காட்டுவாம்.

இராமலக்குமணர் தந்தை சொற்படி வனம்புகுந்து தெய்வநதியாகிய கங்கைக்கரையை யணுகிப் பிராட்டியாரோடு வசித்துவந்தபோழ்து அப்பிரானின் திருமேனி யழகை வருணிப்பான் புக்க கம்பர்,

'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ?வெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ?
ஐயோ! இவன் வடிவென்பதொர் அழியாவழகுடையான்

எனப் பல நயங்களும் அமையச் சமத்காரமாகக் கூறினர். இனி இதன் பொழிப்புரையை வரைந்து பின் மற்றிதன்கணுள்ள அரிய நயங்களையுமாராய்ந் தெழுதுவாம்.

(பொ-ரை.) இவனது திருமேனியின் நிறம், அஞ்சனத்தைப் போலுமோ? மரகத இரத்தினத்தைப் போலுமோ? அலைமடங்குந் தன்மையுள்ள கடலைப் போலுமோ? மழைபொழியும் நிலைக்கணுள்ள வானத்தைப் போலுமோ? ஐயோ! என்று சொல்லத்தக்க நிகரின்றி மாறாத வனப்பைப் படைத்தவனாகிய இராமபிரான், வெப்பமான கிரணங்களையுடைய சூரியனது ஒளி, தனது திருமேனியினின்று வெளிப்பட்டுப் பரவுகின்ற ஒளிக்குள் மறைந்திட, இல்லையென்று சொல்லும்படி (மிக நுட்பமாக) உள்ள இடையையுடையவளான சீதாபிராட்டியோடும், இளையபெருமாளுடனும் செல்லலானான். (எ-று.)

பகவத்கீதையில் பதினொன்றும் அத்தியாயத்துப் பன்னிரண்டாஞ் சுலோகத்தில் 'ஆயிரம் சூர்யர்களுடைய ஒளியானது ஆகாசத்தில் ஒரேகாலத்து உண்டாவதாயின், அது அந்தப் பெரிய பொருளின் ஒளிக்கு ஒப்பாகும்' என

---

"எல்லா வுடலும் இறைவன் ஆலயமே"

எம்பெருமானது திருமேனியின் பொலிவு வருணிக்கப்பட்டுளது. இக் கருத்தையே

'பல்லாயிரமிருள் கீறிய பகலோனென ஒளிரும் வில்லாளன்'

என்று கம்பர் ஆரணியகாண்டத்துக் கூறியுள்ளார். அதனினும் அதிகமாகப் புனைந்துரைப்பான் புகுந்து தனது திருமேனியிலிருந்தெழுந்து விரிகின்ற பேரொளியிற் கதிரவனது காந்திமறையும்படியாக ஸ்ரீராமபிரான் விளங்கினானென்பதை முதலடியிலழகாகக் குறிப்பிட்டார். அளவு காணப்படாத அப்பிரானது அதிசௌந்தர்யத்தை மீட்டும் புனைந்துரைப்பான் தொடங்கிக் கருநிறக்கோலத்தை நோக்கி, 'மையோ' என்றார். கருநிறத்துடன் பச்சையிரத்தினவர்ணமும் காணப்படுதலின் கேவலம் கருநிறமொன்றே மிக்குள்ளமை அவரது திருமேனிக்கு முழுது முவமையாகா தென்பான் அதற்குமேல் 'மரகதமோ' என்றார். பிரானது திருமேனியில் நீல உருவும் புலனாகின்றதாகலின் பசுமை மிக்குக் கருநிற மொருசிறிதுகொண்ட மரகதமு மதற்கீடாகாது. அதற்கு மேலும் ஒரு பொருளிருத்தல் வேண்டும். அளவு காண்டற்கரிய பிரானது அழகுக்கு அப்பொருளே ஒப்புமையாயிருத்தல்வேண்டும்; அதுவுங் கடலே என நினைந்து, 'மறிகடலோ' என்றார். மின்னையும் பல நிறங்களுக்கிடனாகிய வான வில்லையுந் தன்னகத்தே கொண்டு உயர்விட முற்றுக் கைம்மாறு வேண்டாது பிறர்க்குதவுதல், உவர்நீர் நன்னீராகிய உலகநீரை வேற்றுமை பாராட்டாது கொண்டு மீட்டும் நன்னீராயே பொழிந்துபகரித்தல் ஆதியகுணங்களினுஞ் சிறந்து பெரிதும் போற்றத்தக்க கார்மேக மொன்றே, கடலினுஞ் சிறந் துவமையாதற் குரியதாம் எனத் துணிந்து 'மழைமுகிலோ' என்றார். கோதண்டமாகிய வில்லையும் பிராட்டியாகிய மின்னையுங்கொண்டு உலகங்கட்கெல்லாம் உயரியதாகிய வைகுண்டத்தே அடியார்க் கருள் சுரக்க வீற்றிருந்து ஜீவர்களிடத்துக் கைம்மாறு வேண்டாது குணகுற்றங்களை யாராய்ந்து அருளாகிய குணத்தையே பொழிகின்ற எம்பெருமான் கார்மேகத்துக்கேற்ற உவமையாதல் ஈண்டு நோக்கத் தக்கதாம். ஆயினும் அப்பெருமானது ஆணையினடங்கித் தனக்கென்று இயல்பிலே வலிமைகொண்டிராத மேகம், சர்வ வல்லமைகளையும் இயல்பிலேயேயுடைய பெருமானது சக்தி வல்லபத்தை நோக்குங்கால் முற்றும் உவமையாகாதே, அதனினுமேலாக வருணிக்க ஓர் பொருளை நாடலாமெனின் மற்றெதுவுமில்லையே யென்றிரங்கி 'ஐயோ' என்றார். 'கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோ ரெழில், நீலமேனி ஐயோ! நிறைகொண்ட தென்னெஞ்சினையே' என்ற அமலனாதிபிரான் 9-ம் செய்யுளில் 'ஐயோ' என்ற பதத்திற்கு ஆன்றோர் அருளிய வியாக்கியானங்கள் ஈண்டுக் கவனிக்கற் பாலனவாம். 'ஐயோ—பச்சைச்சட்டை யுடுத்துத்தனக்குள்ளதை யடையக்காட்டி எனக்குள்ளதை யடையக்கொண்டானே' என்பர் பெரிய வாச்சான்பிள்ளை. 'நான் எல்லாவற்றையும் நின்று நின்று அநுபவிக்க வேணுமென்றிருக்க என் நெஞ்சைத் தன் பக்கல் இழுத்துக்கொள்வதே? ஐயோ என்கிறார்' என்பர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். 'ஐயனார் அணியரங்கனார் அரவினணை மிசைமேய மாயனார், செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே' என்ற பாசுரத்திலுள்ள 'ஐயோ' என்றதற்குப் பெரியார் அருளியுள்ள வியாக்யானமும் ஈண்டுணரத் தக்கதாம். 'எம்பெருமானை முழுக்க அநுபவிக்கப் பாரித்திருக்கையில் இடையிலே நெஞ்சைக் கொள்ளைகொண்டு



விட்டதே அதரம்! இதற்கென் செய்வேன் என்பார் 'ஐயோ' என்கிறார். 'பண்டே நெஞ்சுபறிகொடுத்த வென்னை அநியாயம் செய்வதே! என்று கூப்பிடுகிறார்' என்பர் பெரிய வாச்சான்பிள்ளை. 'ஐயோ என்றது—ஆச்சர்யத்தையாதல், அநுபவிக்க அரிதான படியையாதல், அநுபவ ரஸத்தையாதல் காட்டுகிறது' என்பர் தூப்புற்பிள்ளை. 'ஐயோ—அதிசயமுற இரங்குதலைக் குறிப்பிக்கும் இடைச்சொல். "அச்சோ ஐயோ, என்னே யெற்றெவனெனுஞ் சொல் அதிசயமுற விரங்கல்" என்பது சூடாமணி நிகண்டு. மைம் முதலியவை என்றும் மாறாது ஒரு படிப்பட அழகுடையன வல்லவாதலாலும் ஞாயிற்றினொளியும் தம்முன் மறையும்படி பேரொளி படைத்தன வல்லவாதலாலும் இராமபிரானது திருமேனிக்கு அவை ஒருபடியாக ஒப்பாவனவன்றி முற்றுவமையாகா வென்க. இங்ஙனம் அஞ்சனம் முதலியவற்றில் எதுவும உவமையாகாமையால்தான் 'மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ? என ஐயப்பட வேண்டியதாயிற்று,' என்று நயம்பட உரைத்தனர் உரையாசிரியர் ஸ்ரீமத் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர். 'வெய்யோன் ஒளி—சூரியனது ஒளிக்காக (சூரியவெப்பத்துக்கு அஞ்சி), தன்—இராமபிரானின், மேனியின் விரிசோதியின் மறைய—பரந்த ஒளிவடிவான திருமேனி நிழலிலொதுங்க; (அங்ஙனம் மறைந்த) பொய்யோவெனும் இடையாளொடும்' என்று பொருள்பட ஒரு சாரார் உரை கூறுவது அத்துணைப் பொருட் சிறப்பின்றாம். இம்மேக உவமையும் வேறு சில நயங்களும் அமையச் சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் திருவேங்கடத் தெம்பெருமானது வைபவநிலையை வருணித்திருப்பது பெரிதும் இன்பம் பயக்கின்றதாகலின் அக்கவியினை யீண்டுத் தருகின்றோம். அது,

'வீங்குநீ ரருவி வேங்கடமென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்க
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்'

என்ற பாசுரமே யாம்.

இவ்வாறே இல்பொரு ளுவமையணி பொருந்தக் கருடவாகனத்தின் மீது எம்பிரான் எழுந்தருளிய வைபவத்தை கம்பநாட்டாழ்வாரும்,

'கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்'

எனப் பாலகாண்டத்துக் குறிப்பிட்டனர்.

எம்பிரானுக் குவமையாதற்குரிய உலகப்பொருள்களுள் தலைமை படைத்தது மேகமே யென்பதைத் திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்தை' யடுத்து, 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தை யமைத்துள்ள அடைவினாலு முணரலாம். இவ்வுவமையைத் தவிர்த்து உலகப்பொருள்களுள் முற்றும் உவமையாதற்குரிய பொருள் பிறிதொன்றில்லாமையை மேற்காட்டிப் போந்த விவரங்களான் இனி துணரலாம். எம்பிரானது சக்தி வல்லபத்தை நோக்குங்கால் உலகப்பொருள்கள் யாவும் அவனுக்கு ஒரு சார் உவமையாதற் குரியவாயினும் முற்றும் உவமையாதற் குரியவாகாவாம். இவ்வுண்மையை 'தனக்குவமையில்லாதான்' 'தன்னொப்பாரில்லப்பன்' என்ற ஆன்றோர் வாக்குக்களான் நன்குணரலாம். இது கருதியே யாமெடுத்துக்கூறிய செய்யுளில் புலவர் 'ஐயோ' என்றிரங்கிக் கூறியதும்.

பெருந்தகைமை வாய்ந்தவரும் செந்தமிழ் அபிவிருத்தியைக் கருதுபவருமாகிய நம் 'ஆனந்தபோதினி' பத்திராதிபர் திரு. முனிசாமி முதலியார் அவர்கள் இத்தகைய ஆராய்ச்சி வியாசங்களை யெழுதும்படி தூண்டி யெம்மை யூக்கப்படுத்தி வரும் விஷயத்தில் யாமவர் திறத்துப் பெரிதும் நன்றி யறிதற் கடப்பாடுடையேம்; நம் 'ஆனந்தபோதினி' இத்தகைய வியாசங்களுடன் மிகச் சிறப்பாக உலகின்கண் வந்துலவி யபிவிருத்தி யடையும்படி எல்லாம் வல்ல இறைவனைத் திரிகாரணங்களாலும் இறைஞ்சுகின்றோம்.

காலையில் பழையது புசித்தால் சரீரமே மந்தப்பட்டுப் போகிறது என்று கூறுகின்றனர். அப்படியானால் கிராம வாசிகளெல்லாம் தூங்கிக்கொண்டாயிருக்கிறார்கள்?

***

ரயில் சரக்கு! ரயில் சரக்கு!! என்றால் சிலருக்கு ஒன்றுமே விளங்குவதில்லை. அப்போது "மூட்டைப்பூச்சி" என்றால், ஓகோ அதுவா என்று வியப்படைகின்றனர்.

***

ஆண்பாலார் மட்டிலுமே மும்முரமாகக் காய்ந்துகொண்டிருக்கும் வெய்யிலிற் சென்று வந்து "அப்பாடா உஸ், புஸ்" என்று கூறுகிறார்களென்பதற்கில்லை. வீட்டிலேயே உட்கார்ந்திருக்கும் பெண்களும் அதே கூச்சலே.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.



# லைப் (ஜீவிய) இன்ஷூரன்ஸ்.

(எ. ஆர். ராஜகோபாலன்.)

சென்ற சுமார் 150-வருஷங்களாக நமது பாரத நன்னாட்டில் ராஜீய, பொருளாதார, சமூக முன்னேற்றங்களில் அஞ்ஞானம் நீங்கி, பொது ஜனங்களின் கண்கள் திறக்கப்பட்டு எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு ஓர் விதமான புதிய ஆர்வமும், ஆற்றலும், சுறுசுறுப்பும், பரவிவருகின்றன வென்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை. கால வித்தியாசத்தால் எல்லாவித ஸ்திரமான முன்னேற்றத்திற்கும் நாம் மேல் நாட்டாரையே எதிர்பார்த்து அவர்களின் கெட்ட வழக்கங்களையும், கோட்பாடுகளையும் நமது ஜீவியத்தில் புகுத்துகின்றோம். அவர்களுடைய நல்ல குணங்களைக் கைப்பற்றப் பின் வாங்குகின்றோம். நாட்டின் கண் நடைபெறும் மானிட வாழ்க்கை இருவகைப்படும். ஒன்று அவரவர் அடைகின்ற தனிவாழ்வு, மற்றொன்று அனைவரும் ஒருங்குகூடிச் செலுத்தும் பொது வாழ்வு. தனிவாழ்வு சுத்தமாகவும், சிக்கனமாகவும், சிறப்பாகவும் இருக்குமாயின் நாட்டின் பொது வாழ்வும் சுத்தமாகவும், சிக்கனமாகவும், சிறப்பாகவும் இருக்குமென்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

பொருளாராய்ச்சி முறையில் பார்க்குமிடத்து ஒரு நாடு மென்மேலும் சிறப்புற்று ஓங்குவதற்கும், இதர நாடுகளுடன் சமத்துவ அந்தஸ்தில் இருப்பதற்கும் அதின் செல்வ நிலைமையே காரணமாகும். நிற்க நம் நாட்டின் செல்வ நிலைமைக்கும், லைப் (ஜீவிய) இன்ஷூரன்ஸ் என்னும் புனிதமான இயக்கத்திற்கும் என்ன சம்பந்த மென்பதையும் தனிப்பட்ட ஒரு நபருக்கு அவ் வியக்கம் எவ்வளவு, எவ்வாறு பயன் தரக்கூடும் என்னும் விஷயத்தையும் இங்கு விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"ஆனமுதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் எழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு" என்றார் ஆன்றோரும்.

வறுமைப் பிணி நம் நாட்டில் தாண்டவம் ஆடும் இந்நாட்களில், ஒரு மனிதனின் சராசரி வருமானம், ஒரு அணா, ஏழு பைசாவென்று பக்ஷபாதமில்லாத பொருளாதார ஆராய்ச்சி நிபுணர்கள் கணக்கிட்டிருக்க, எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் காட்டுத் தீப்போல் பரவிவர, மிதமான ஜீவனோபாயத்தில் அமர்ந்திருப்பவர்களோ, அசட்டு நாகரிக மாயையில், ஊருக்குப் பால் குடிப்பது என்னும் முறையில் ஈடுபட்டு, புது வழக்கங்கள், புதுவிதமான அனாவசியமான செலவுகள் செய்யத் தலைப்பட்டு, வறுமைப்பிணியை

விலைக்கு வாங்குவதைக் கண்ட எவர் மனம்தான் கரையாது. மிகுந்த பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து, வரவிற்கு மிஞ்சிச் செலவு செய்து, பிறகு சம்பாதிக்கச் சக்தி அற்று, அங்கங்கள் தளர்ந்து வீட்டில் ஓய்ந்து உட்காரும் நாட்களில் மனைவி, மக்கள், மாதா, பிதா, சுற்றத்தார் முதலியோரைக் காப்பாற்றும் தவிர்க்க முடியாத ஒரு பெரிய பொறுப்பைப் புறக்கணித்து விட்டதின் பயனாய் எத்தனையோ குடும்பங்கள் தத்தளிப்பதை நாம் அனுபவத்தில் பார்க்கின்றோம்.

எந்த நாட்டிலும், எக்காலத்திலும், எல்லோரும் தனவந்தர்களாய்ப் பிறப்பதில்லை. பெரும்பான்மையோர் ஏழை ஜனங்களே. கடைசிக் காலத்தில் சிரமமின்றி வாழவும், தன்னை அண்டினவர்களைக் கண் கலங்காமல் இருக்கச் செய்யவும், கேவலம் வயிற்றின் கொடுமையால் ஈன விருத்திக்குப் போகாமல் மரியாதையா யிருக்கவும், உதவியாயிருப்பது லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளே.

குறிப்பிட்ட ஒரு சிறு தொகைக்கு, குறிப்பிட்ட காலவரையறைக்கு உட்பட்டு, சில வருஷங்கள் வரை தவணைக்கெடுத் தவறாது செலுத்திவருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டு அவ்விதமே செலுத்தி, துர் அதிர்ஷ்டத்தால், இறக்க நேரிடின், ஒப்பந்தம் செய்து கொண்ட பெருந்தொகையை, யாதொரு வில்லங்கமும், சிரமுமின்றி ஈடுசெய்யத் தயாராக உள்ளதும் சட்டவரம்பிற்கு உட்பட்டதும், உலக இயக்கமாக உள்ளதும் லைப் இன்ஷூரன்ஸ் ஸ்தாபனமே.

பாமர ஜனங்களில் சிலர், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் அங்கத்தினர்களாக (பாலிஸிதார்களாக)ச் சேர்வதென்றால், உடனே மரணம் நேர்ந்துவிடுமென்றும் "மரண பண்டு" என்றும் தவறாக நினைத்துப் பயப்படுகின்றனர். மற்றும் ஒரு சாரார் பரிஹாஸமாக மரணத்தைத்தடுக்க ஏற்பட்டிருக்கும் கம்பெனிகளோ வென்று விதண்டவாதம் புரிகின்றனர். அகால மரணத்தால் ஏற்படக்கூடிய ஓர் பெரிய விபத்திலிருந்து தப்பச் சகாயம் செய்ய ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய நிதி இயக்கமே இன்ஷூரன்ஸ் இயக்கமாகும்.

சமயத்தில் உதவுவதற்கு இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தானோ, இதர பாங்குகளும், க்ஷேமநிதிகளும், இல்லையோ வென்றால், பாங்குகளும் க்ஷேமநிதிகளும், நாம் அவ்வப்பொழுது செலுத்திவரும் தொகையைச் சொற்ப வட்டியுடன் சேர்த்து கேட்கும்பொழுது திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவைகளாகும். ஆனால் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளோ எனில், அகால மரணம் நேரிடின் ஒப்பந்தம் செய்து கொண்ட பூராத் தொகையையும் செலுத்திவிடுகின்ற சமூக ஊழிய ஸ்தாபனம் என்று கூறுதல் மிகையாகாது. ஜன சமூகத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு அகால மரணம் நேரிடின் ஜன சமூகத்தைச் சேர்ந்த பலர் அவன் பின் இருக்கும் சந்ததியாருக்கு ஈடு செய்ய இருக்கும் பரஸ்பர பொருளாதார இயக்கமே லைப் இன்ஷூரன்ஸ் இயக்கமாகும். இதுகாறும் ஜீவிய (Life) இன்ஷூரன்ஸ் இயக்கம் என்பது என்னவென்பதையும், ஒரு மனிதனுக்குத் தனிப்பட்ட முறையில் அதன் அத்யாவசியத்தைப் பற்றியும் கூறினோம். இனி நாட்டின் செல்வ வளர்ச்சிக்கு அக் கம்பெனிகள் என்ன உதவி செய்ய முடியும் என்பதைப் பற்றியும், அந்நிய நாட்டுக் கம்பெனிகளில் பாலிஸிதாரர்களாக ஏன் சேரக்கூடாது என்பதைப் பற்றியும் மறுமுறை எழுதுவோம்.

"சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்"




## முக்கூடற்பள்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

மாரக் குட்டையில் அடைபட்ட பள்ளன், மானத்தால் மனம் புழுங்கிக் கண்ணீர் உகுத்ததைக் காணப் பொறாத முக்கூடல் மூத்தபள்ளியின் உள்ளம் குழைந்து நெகிழ்ந்தது. பண்ணையாரிடஞ் சென்று பள்ளனது குறையைப் பொறுத்துச் சிறைவீடு செய்யுமாறு முறையிட்டாள்.

"ஐயா பாராக்குப் பாரக் கும்மைக் கும்பிட்டேனாண்டே—உம்மை
அல்லவோ தேடி அடியாள் இங்குவந்தே னாண்டே
கையாரக் கண்ட களவும் பொறுப்பீரோ ஆண்டே—பள்ளன்
காவலைக் கண்ணாலே பார்க்கப் படாதுகாண் ஆண்டே."

என்று பள்ளன் செய்த சிறுமையைப் பொறுக்குமாறு பள்ளி பணிந்து வேண்டினாள். இன்னும் பண்ணை நிலங்களைப் பண்படுத்திப் பயிர்செய்தற்குரிய பருவ காலத்தில் பள்ளனைச் சிறைவைத்திருத்தல் ஆகாதென்று பள்ளி இதமாக எடுத்துரைத்தாள்.

"ஆடிக்காலாவதி வெள்ளாமை நாளாச்சே ஆண்டே—பள்ளன்
அல்லாமலே பயிர் ஆரிடுவார் பண்ணை யாண்டே!
தேடியிடும் பள்ளப் பிள்ளைக்கிணை கண்டீர் ஆண்டே—தேவரீர்
சித்தமென் பாக்கியம்காண் பண்ணை ஆண்டே."

என்று வேளாண்மையின் நலங் குறித்துப் பள்ளனது விடுதலையை இரக்கும் பள்ளியின் மொழிகள் அறிந்து மகிழத்தக்கனவாம். இவ்வாறு பண்ணையார் நலங்கருதிப் பரிந்துரைத்த பள்ளியின் எண்ணம் பலித்தது. மாக்குட்டையிலடைபட்டு மனமழிந்த பள்ளனும் சிறைவீடு பெற்றுச் சிந்தை குளிர்ந்தான். பருவம் செய்தற்குரிய ஏரும், சீரும், செம்மையா யிருத்தலைப் பண்ணையார் அறிந்து மகிழுமாறு பள்ளன் விரிவாக எடுத்துரைத்தான்.

"நட்பை, நட்பை விலையாகக்கொடுத்தே வாங்கவேண்டும்"

நிலத்தில் ஏர் பூட்டி உழுதற்கு ஏற்றகாலமென்று கணிதர் எடுத்துரைத்த முறைப்படியே பள்ளன் நாளேரடிக்கத் தலைப்பட்டான்.

"சத்தமி புதன்சோதி தந்திக்கரணம்
தவறாத சுபயோகந்தரு பஞ்சாங்கம்
மெத்த நன்றெனப் பார்த்து வேதியர்கள்
மிக்கதுலா முழுத்தம் விதித்தாரின்று
பத்தர் தொழும் முக்கூடல் பரமனார் அழகர்
பண்ணைக் கேரிடவேணும் பள்ளாவென்றே
உத்தாரம் பண்ணைகாரனுரைத்தான் உரைத்த
உடன் ஏர்கொண்டு பள்ளன் உழச் சென்றானே."

சோதிட நூலோர் சொல்லிய சுபயோக சுப முகூர்த்தத்தில் பள்ளன் பண்ணையார் நிலத்தைப் பண்படுத்தச் சென்றான். பச்சேரியில் வாழ்ந்த பள்ளரில், சாத்தனையும் போத்தனையும், சங்கனையும் புங்கனையும்; சடையானையும் உடையானையும், அருதனையும் மருதனையும், பூலானையும் வேலானையும், புலியனையும் கலியனையும், வெருகனையும் முருகனையும், கங்கனையும் சிங்கனையும், கப்புக் காலனையும் கருத்த முண்டனையும் அழகக் குடும்பன் கூவி அழைத்தான். இப்பெயரமைந்த பள்ளர் கூடிக் குரவையிட்டு ஏர்பூட்டி உழுத பெருமையை,

"சாத்தன் பெரியான் கொன்னைத் தாண்டி அரியான்
சடையான் உடையான் கட்டைச் சங்கன் புங்கன்
போத்தன் அருதன் கோணப்பூவன் மருதன்
பூலான் வயிற்று வேலான் புலியன் கலியன்
காத்தன் வெருகன் கப்புக்காலன் முருகன்
கண்டங்கறுத்த முண்டன் கங்கன் சிங்கன்
கூத்தன் முதலாய பள்ளரெல்லாம்
குரவையிட்டு ஏரைப்பூட்டிக் கூட்டி உழுதார்."

என்று பள்ளுக் கவிஞர் பாராட்டிப் போந்தார். இவ்வாறு பள்ளர்கள் குரவை யிட்டுக் களித்து மேழிபிடிக்கத் தொடங்கியபோது, வளமார்ந்த அவ்வயலில் வரால் மீன் துள்ளிக் குதித்தது. அதைக் கண்டு கலைந்த ஓர் புல்லைக்காளை, முகத்தை மாறி முறுக்கி முட்டி ஓடத்தலைப்பட்டது. மாட்டின் குறும்பை அடக்கக் கருதிய அழகக் குடும்பன், அதன் முன்னே ஓடி மறித்தான். அந் நிலையில் துள்ளி யெழுந்த புல்லைக்காளை பள்ளன்மேற் பாய்ந்து கோட்டுமுனை யால் அவனைக் குத்திற்று. குடும்பனும் சற்றே மயக்கங்கொண்டு சேற்றில் விழுந்தான்.

இவ்வாறு பள்ளன் மயங்கி விழுந்ததை யறிந்த முக்கூடல் மூத்த பள்ளி யும் மருதூர் இளைய பள்ளியும் விரைந்தோடிவந்து பள்ளனது நிலைகண்டு பதறி யழுதார்கள். மதயானைக் கஞ்சாத பள்ளன் ஒரு மாட்டுக்கு ஆற்றாமல் விழுந்த மாயத்தை நினைந்து மனங் குழைந்தார்கள். மலையின்மே லுறையும் பூலாவுடையார் செயலோ வென்று புலம்பி அழுதார்கள்.

"சோம்பலே எல்லாத் தீமைகட்கும் மூலகாரணம்"



"ஏங்கி யிருபள்ளியரும் இவ்வாறிரங்கி நிற்கும்
தேங்குதலை வார்த்தை செவியிற் புகுதலுமே
தாங்கு துயர் நீங்கித் தலையசைத்துத் தோள்குலுக்கி
பாங்கி னுடன் முக்கூடற் பள்ளன் எழுந்தானே."

என்று பள்ளுக் கவிஞர் கூறுமாறு பள்ளன் மயக்கந் தீர்ந்து தலையசைத்துத் தோள் குலுக்கி யெழுந்தான்.

சோர்ந்து நின்ற பள்ளியர் முகம் பார்த்துச் சிரித்தான். பட்டதுயரை மறந்து மீண்டும் பணி செய்யத் தொடங்கினான்.

"பள்ளன் எழுந்து நிலைதரித்தான்—நின்ற
பள்ளியர்கள் முகம் பார்த்துச் சிரித்தான்
மெள்ளப் புருவங்கொட்டி நெரித்தான்—மாட்டை
மீண்டும் பூட்டி உழத்தரித்தான்"

இவ்வாறு நிலம் முழுமையும் உழுது முச்சாலடித்துத் திருத்திய முறை கண்டு பள்ளன் மனங்களித்தான். பணியாற்றிய பள்ளரை யெல்லாம் பண்புடன் அழைத்தான். தெய்வக் கடனை முறையாய்க் கழித்தான். அப்பால் தொளி யில் விதைகளைத் தெளித்தான்.

"உழுத உழவைக் கண்டு களித்தான்—பள்ளர்
உள்ளபேரை யெல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான்—பள்ளன்
தொளியில் விதைகளெல்லாம் தெளித்தான்"

என்று பள்ளன் பணிசெய்த முறையினைப் பள்ளுக் கவிஞர் தெள்ளிதில் எடுத் துரைத்தார். அப்பால், விதைத்த வயலைக் குடும்பன் கண்ணுங் கருத்துமாய்க் காத்துவந்தான். வேண்டிய பொழுது வயலில் தண்ணீரைத் தேக்கியும், மிகுந்த நீரை வெட்டி வடித்தும், கண்ணினைக் காக்கும் இமைபோல் பள்ளன் பழனத்தைப் பாதுகாத்தான்.

"முளைத்த முளைக்குத் தண்ணீ ரடைத்தான்—கொல்லை
முழுதும் மறுநாள் வெட்டி விடுத்தான்
வளைத்து வேலிசூழ நட்டான்—நாற்று
வளர நாளும் எருவிட்டான்"

வயலில் முளைத்த முளை வீறுபெற்று வளரக் கண்ட பள்ளன் மனம் துள்ளி மகிழ்வதாயிற்று. நாற்று முளையை நாள்தோறும் பார்த்துவந்த பள்ளன், அதன் திருந்திய முகம் கண்டு திளைத்தான்.

"முழு வன்மையோடு உழைப்பாயாக, உனக்கு எல்லா நலமும் சித்தி யாகும்"

" வளர்ந்த நாற்றுமுகம் கண்டான்—சேரி
பள்ளர்கூட மதுவுண்டான்
அளந்திடா மகிழ்ச்சி கொண்டான்—பண்ணை
ஆண்டவர்க்குச் செய்தி விண்டான் "

நாற்று நன்றாய் வளர்ந்து செழுமையுற்றுத் தழைத்த நிலைகண்டு பள்ளன் மட்டற்ற மகிழ்ச்சியுற்றான். பச்சேரிப் பள்ளருடன் சேர்ந்து கள்ளுண்டு களித்தான். நாற்றின் செழுமையைத் தன் நாயகனுக் கறிவித்தான். நாயகன் பணியைத் தலைக்கொண்டு நாற்றைப் பறித்து மற்றை வயல்களில் நடத் தொடங்கினான். வளமார்ந்த நாற்று முடியைக் கையாலெடுத்து, நெற்றியில் வைத்து, அழகர் தாளை நினைந்து, நாற்றிசையும் நோக்கி வாழ்த்தி வணங்கி பரவை ஒலி போல் குரவை யெழுப்புமாறு பள்ளியரை நோக்கிக் கூறும் பள்ளனது மொழிகள் பண்பு வாய்ந்தனவாம்.

" மூந்தத்தரிசை யடித்து முறித்து முச்சாலடித்திட் டுழவுநாலும்
முழுதும் உழுது திருந்தப்பரம்பு மூன்றுந் தடவியே
அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை அடுத்த வயலிற் பிடுங்கி வேரை
அடுக்கிமுடிந்து வட்ட வட்டங்கள் ஆகக் குவித்தபின்
வந்தித்தழகர் பதத்தைத் துதித்து வைத்த நாற்றையெடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி வாழ்த்திக் கும்பிட்டே
பந்திப்படுத்தி நிரையை வகுத்துப் பரவை ஒலிபோல் குரவை யெழுப்பி
பயிர் நெருங்காமல் கலந்துபோகாமல் பதியும் பள்ளியரே."

என்று பள்ளுக் கவிஞர் பள்ளன் வாயிலாகக் கூறும் மொழிகளில் வேளாண்மையின் முறை விளங்கக் காணலாம். அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் உண்மையை இனிது அறிந்த பள்ளர், இறைவனை மனமாரவந்தித்து வாயார வாழ்த்தி நடுகை தொடங்கும் முறை இன்றும் தமிழ்நாடெங்கும் வழங்கக் காணலாம். இன்னும் நாற்று நடும் பள்ளியர்கள் பரவை ஒலிபோற் குரவையிட்டுப் பயிர் அணுகாமலும் அகலாமலும் பதிக்கும் அழகுபார்த்து மகிழத் தக்கதாகும்.

கலியாண வீட்டுப் போஜனமானாலும், அந்த வேளைக்குப் புசித்தாலே சாப்பிட்டமாதிரியாம். அகாலத்தில் புசித்தால் திருப்தி இருக்கிறதில்லை! குறைந்த அளவையே புசிக்க நேரிடுகிறது.

அன்னியர் வீட்டுச் சாப்பாடென்றால், அடி வயிற்றைத் தடவித் தடவிப் புசிக்கின்றனர். தன்வீடேயாகின் சிறிதளவை வைக்கும்போதே போதும், போதும் என்று தலையாலும் கையாலும் சைகை செய்கின்றனர்.

" உன்னுடைய நாவைப் பற்களுக்குள்ளேயே வைத்துக்கொள் "

223387

# சிவத்தியானம்

(தெல்லிப்பழை. கா. சின்னப்பா.)

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே எழில்மிக்க தென்பது எக்காலத்தும் எச்சாதியாரும் எம்மதத்தினரும் ஏற்றுக்கொண்ட ஓர் மறுக்கொணா உண்மை. முற்பிறவிகளிற் செய்த சிவபுண்ணியங்களின் பயனாகவே ஒருவன் மானிடப்பிறவி வாய்க்கப்பெறுகிறானென்று சமய சாஸ்திரங்கள் எடுத்துக்கூறும். உலகத்திலேயுள்ள சகல சிருஷ்டிகளையும் உற்றுநோக்கு மிடத்து மக்கட்பிறவியின் உன்னத நிலை உணரத்தக்கதா யிருக்கும். பூர்வபுண்ணிய பூஜாபலத்தினாலே பொருந்திய இம்மானிட தேகத்தைக்கொண்டு நாம் செய்யவேண்டிய சேவைகள் பலவுள. திரிகரணங்களாலேயே நாம் பல தொழில்களையும் செய்கின்றோம். இவைகள் செவ்வனே செய்யப்படுவதற்கு எல்லாவற்றிற்கும் மேலாய்த் திரிகரண சுத்தி அத்தியாவசியமாகும். திரிகரணங்களுள் மனம் மிகவும் மாட்சியுடைத் தென்பதை மறுத்தலரிது. ஏனெனில் வாக்காலும் காயத்தாலும் நாம் செய்வன அனைத்தும் மனத்திற்றோன்றும் எண்ணங்களின் பயனேயன்றி வேறல்ல. நாம் வாக்காலும் காயத்தாலும் செய்யுங் கன்மங்கள் நம்மாலும் மற்றவர்களாலும் மெச்சப்படத் தக்கவைகளாயும், குற்ற மற்றவைகளாயும், புண்ணியம் நிறைந்தவைகளாயு மிருக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் நமது மனம் மிகவும் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்.

செம்பிலிருக்கும் களிம்பை நீக்கித் திகழ்வித்தற்குப் புளி முதலிய பதார்த்தங்கள் புரியும் சேவை போன்று, நம்முடைய மனத்திலிருக்கும் மாசு நீங்கி மகிழ்வெய்தற்குச் சிவத்தியானம் ஓர் சிறந்த சாதனமாகும். பூரணராகும் பெருமான் ஒருவரிருக்கிறா ரென்பதும், அவரைத் தேடியடைந்து அவர் மயமாவதே பேரின்பம் பெறுவதற்குரிய பெறற்கரும் வழி யென்பதும் எம்மதத்தினருக்கும் சம்மதமான வோர் கொள்கையாகும். மனம் பூரண நிலை அடையும் வரையும் ஏதாவதொன்றை எண்ணியபடியே யிருக்குமென்பதை நாம் ஒவ்வொருவரும் அனுபவத்திற் கண்டிருக்கிறோம். துன்பமற்று இன்பமுற்று வாழ நாம் விரும்பினால் நம் மனதில் நிகழும் நிகழ்ச்சிகளொவ்வொன்றையுங் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். மனதிற்கு அடிமைப்பட்டு அதன் போக்கின்படி ஒழுகுபவர்களின் கதி அதோகதியாகவே

" அறியாமை எனக் கூறுவது ஒரு சமாதானம் அல்ல "

முடியு மென்பதை ஒருவரும் மறுக்கத் துணியார். நித்திய வின்பத்தை நாடி நிற்பவன் மனம் போன போக்கெல்லாம் போகாமல் அறிவின் வழி நின்று மனத்தை யடக்கி நித்திய வின்பத்தைப் பெறுதற்குரிய வழி வகைகளைக் குறித்து யோசித்தபடியிருப்பான்.

அஞ்ஞான அந்தகாரத்துள் அமிழ்ந்திருப்பவர்கள் அவ்விருளை யகற்றி ஞானத்தை அடைவதற்குச் சிவத்தியானத்தைப் போன்ற சிறந்த வழி பிறிதொன்றில்லை. குஷ்டம், சிரங்கு, காய்ச்சல் முதலிய நோய்கள் தேகத்தைப் பீடிப்பதுபோல கொலை, களவு, கள், காமம், குரு நிந்தை யென்னும் பஞ்சமகா பாதகங்களையும் செய்ய மக்களை ஏவும் துர்க்குணங்களை மக்களுடைய மனத்தைப் பற்றியிருக்கும் பிணிகளென்று சொல்வது பிழையாகாது. மனதை வருத்தும் பல துர்க் குணங்களையும் தொலைப்பதற்கு இடைவிடாச் சிவத்தியானம் இன்றியமையாதது. சிவத்தியான மென்ற திவ்விய பயிர் மனமென்னும் வயலிலே செழித் தோங்கி வளர்வதற்குப் பொறாமை, வெகுளி முதலிய் களைகள் அவ்வயலினின்றும் அகற்றப்படுதல் அவசியம். ஆகவே துர்க் குணங்களைப் போக்குவதற்குச் சிவத்தியானமும், இத்தியானம் நிலைபெறுவதற்கு பலவித துர்க் குணங்களை நீக்குவதும் அவசியமாதலால் ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்கும்.

ஒருவனுடைய மனம் எத்தன்மை யுடையதோ அத்தன்மையைச் சார்ந்ததாகவே அவனுடைய சொல் செயலிரண்டு மிருக்கும். நாம் விழித்திருக்கும் பொழுது நமது மனம் ஒன்றையும் பற்றாதிருப்பது ஒருபோதும் முடியாத காரியம். ஆனபடியால் இடைவிடாது நித்தியமான ஓர் வஸ்துவை மனம் எப்பொழுதும் பற்றியிருக்கச் செய்தல் இப்பிறவியின் உண்மையான பயனை யடைய விரும்புபவர்கள் ஒவ்வொருவரும் அவசியம் கவனிக்க வேண்டிய ஓர் கடமையாகும். இக்கடமையை மறக்குந்தோறும் நித்திய வின்பத்திற் கருகராகாது அற்ப வின்பத்தைப்பெற்று அல்லலுறுவது நிச்சயம். மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் சதுரங்க சேனைகள் முதலிய சகல பாக்கியங்களும் வாய்க்கப்பெற்று ஒப்புயர்வற்ற ஓர் சக்கரவர்த்திதானும் சிவத்தியான மின்றிப் பவத்தியானத்திலே பயின்றவனாயிருந்தால், அவன் மானிடப் பிறவியின் மதித்தற்கரும் மகிமையை மறந்தவனாகி மனச் சஞ்சலம் நிறைந்த மதியிலோனாவான். ஒருவன் உண்ண உடுக்க ஒன்றுக்கும் வழியற்றவனாய் உற்றாருறவினரற்ற ஓர் பரம ஏழையாயிருந்தாலும், எந்த நேரமும் ஈஸ்வர தியானமே யன்றி வேறோர் சிந்தையு மற்றவனாயிருந்தால் அவன் நித்திய வின்பம் நிரம்பப் பெற்றவனாய், புத்திசாலி யென்று பலராலும் போற்றப்படுவான்.

அழியும் பொருட்களில் ஆசை வைத்து அவைகளையே அல்லும் பகலும் அடைய வேண்டுமென்னும் அற்ப சிந்தையுடையவனுக்குச் சிவத்தியானத்தாலடையப்பெறும் திவ்விய கதி ஒருபொழுதுங் கிடையாது. மனத்தின் தன்

“பிறர் நலம் பேணுவதில் உன் வாழ்நாளைக் கழிக்க”



மையதாகவே மக்கள் வாழ்வு மிருக்கு மென்பது நாம் சரித்திரங்கள் மூலமாகவும் அனுபவ மூலமாகவும் கண்டறிந்த சாற்றற்கரும் சத்தியம். இதை முற்றுமறிந்திருந்தும் உண்மையான வழியில் உள்ளத்தைச் செலுத்தாது பயனற்ற வழியில் ஊக்கஞ் செலுத்துவது ஊழின் பயனே யன்றி வேறல்ல. விண்ணுறுவார்க்கு விதியில்லை யென்ற பிரகாரம் இறைவனுடைய தியானம் நமது இருதயத்தை முற்றாய்க் கொள்ளை கொண்டவுடன் பிறவிகள் தோறுஞ் செய்த பிழைகளெல்லாம் வலியற்று நம்மை வருத்தாதொழியும். உலகத்தின் பல பாகங்களிலும் காலத்திற்குக் காலம் அனேக ஞானிகளும் துறவிகளுந் தோன்றி உலக முய்யும் பொருட்டும் தாங்கள் கடைத்தேறி நித்திய இன்பம் நிலைபெறச் செய்வதற்காகவும் “சிவனை வணங்கிற் பவமணுகாது” என்பதை முற்று யுணர்ந்து, நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் சச்சிதானந்த சொரூபியாகிய எம்பெருமானுடைய எண்ண மொன்றே யுடையவர்களாய், இப்பிரபஞ்சத்திலுள்ள அழியுந்தன்மை வாய்ந்த அனைத்திலும் அன்பற்றவர்களாய்ச் சீவித்து உலகத்தவர்களுக்கு ஒப்பற்ற நன்முன்மாதிரி காட்டியிருக்கின்றனர்.

எப்பொழுதும் களவே தொழிலாகக் கொண்டவ னொருவன் கள்வனாவதுபோலவும், ஓயாமற் பொய் சொல்லும் பழக்கமுடையவன் பொய்யனாவது போலவும் இடைவிடாது சிவத்தியானம் ஒன்றே யன்றி வேறோர் தியானமுமில்லாதவன் சிவத்தன்மை யடைவது நிச்சயம். இத்தன்மை வாய்க்கப்பெற்றவர்கள் மற்றவர்களைவிட விசேஷமானவர்க ளென்பதை சமய குரவர்கள், பட்டினத்தடிகள், தாயுமான சுவாமிகள் முதலிய புண்ணிய புருஷரத்தினங்களின் ஜீவிய சரித்திரங்களால் நன்கு விளங்கிக்கொள்ளலாம். சிவத்தன்மை பெறுவதற்குரிய வழிவகைகளைக் கொஞ்சமேனும் சிந்தியாது பஞ்சப் புலன்களின் வழியில் நின்று பரிதபிக்கும் பாவிகள் கூடச் சிவத்தன்மை யடைவதைவிட வேறோர் உசித நிலை இல்லை யென்பதை முழுமனதோடும் ஒத்துக்கொள்வர். இந்த அரிய உண்மையை விளங்காதவர்கள் இவ்வுலகத்திற் சிலரிலுஞ் சிலரேயாம். விளங்கியிருந்தும் நம்மிலனேகர் இந்த உசித நிலை பெறுவதற்கு ஒரு சிறிதும் முயற்சிக்காது அநித்தியப் பொருட்களை அவாவி அவற்றைப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பதைக் காண்பது எவ்வளவு பரிதாபமான காரியம். பிழையான வழிகளிலெல்லாம் போய்ப் பெருங் கஷ்டப்பட்டுப் பித்தரைப்போற் றிரிந்து பின்பு நல்ல வழியை நாடுவதைவிட கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்த கண்ணியம் மிக்க கனவான்களின் கட்டளைகளைக் கடவாது எந்தத் தொழிலைச் செய்யும் பொழுதும் எல்லாம் வல்ல எம்பெருமானை ஏக சிந்தையோடு எண்ணி எதையும் அவருக்கே அர்ப்பணமாகச் செய்தால் அல்லலனைத்தினின்றும் அகன்று எம்மதத்தினருமேத்தும் எம்பெரு

“தைரியம் புருஷ லக்ஷணம்”

மானை எய்தலெளிதாகும். அழியா இன்பமும் அளப்பரும் மனவமைதியும் சொலற்கரும் மனத்தூய்மையும், பகரும் சிவப்பான்மையும் தவருது கைகூடும். இத்தன்மைகள் வாய்ந்த எழிலுறு மாண்பினர் மயல் நிறை வாழ்விற் சிக்காது எக்காரியத்திலும் சித்தி யெய்துவர். திரிகரண சுத்தியைப் பெற்று அதன் வாயிலாய்த் திருவருளைத் தேடியடைந்து திவ்யகதி சேர்வர். உலக மாயையிற் சிக்கி மங்கி உழலுபவர்களுக்கு உன்னத நிலை இன்னதென்றுணரும்படி ஒப்பரும் உபதேசஞ் செய்வர். இவர்களினுதவியால் இன்னலுற்றிருப்போர் அனேகர் இறைவனின் இணையடிகளை எண்ணியெண்ணி இன்புறுவர். பாவத்தைப் பகைக்கும் பாக்கியத்தைப் பெற்றுப் பல பொருட் பாசமற்று நித்திய வஸ்துவை உள்ளவாறுணர்ந்து ஓங்காரத்துள்ளொளியைக் கண்டுய்வர்.

ஆதலால் நாமனைவரும் இம்மானிடப் பிறவியின் மகிமையை மறவாது சிவத்தியான மொன்றே திவ்விய கதியிற் சேர்க்கும் சீலம் வாய்ந்ததென்பதைத் திண்ணமா யெண்ணி, மண்ணிலும், பெண்ணிலும், பொன்னிலும் மயங்கி மாழாமல் 'நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யுந்தோறும் அகண்டாகார சிவபோகத்தின் அனுபவம் அணையப் பெறுவோம். இதைவிட்டு நித்திய துன்பத்தை நிலைக்கச் செய்யும் நிலையிலாச் சிற்றின்பத்தில் மனதை நிறுத்தினுல் இன்னும் அனேக பிறவிகளையெடுத்து அறத்தை மறந்து மறத்தில் மயங்கி வருந்துவோ மென்பதற்கையமில்லை. உலகப் பொருட்களை அடைதற்கிருக்கும் ஊக்கத்திலும், பரமபதியின் பாதார விந்தங்களைப் பற்றும் பாக்கியத்தைப் பெறுவதற்குப் பன்மடங்கதிகமான ஊக்கம் இருத்தல்வேண்டும். மனைவி மக்கள் சுற்றமித்திரர் காணி பூமி முதலியவைகளிலேயே முற்றுகப் பற்றுவைத்திருப்பவன் கடவுளின் கருணைக்காளாய்க் கலக்கமிலாக் கதியுறுவது மிகக் கஷ்டமாகும். ஆதலால் நாமெல்லோரும் எப்பொழுதும் எத்தொழிலைச் செய்யும் பொழுதும் சிவத்தியானத்தை மறவாமல் சிறப்புற்று விளங்கும் வண்ணம் சிவபெருமானின் திருவருளைத் தேடியடைந்து திண்மை யுறுவோமாக.

---

அண்டை வீட்டானை வேண்டுமானுல் வாங்கின கடனை நான்கைந்து மாதங்கள் வரையிலும் கொடாமல் இழுத்தடிக்கலாம். அப்படியே வரி வசூலிப்போனையும் செய்ய முடியுமா ?

---

கோர்ட்டுக்குப்போய் செலவுடன் கட்டிக்கொடுத்தாலும் கொடுக்கிறேனென்று கூறுகிருர்களே யொழிய வீட்டு வாடகையை வீட்டிலேயே மரியாதையுடன் கொடேன் என்கின்றனர்.



# காஞ்சீபுர உற்சவ விநோதம்

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

இப்பாத கண்டத்தில் முத்திதரும் நகரங்களாக போற்றப்பட்டு வரும் தலங்கள் ஏழாம். அவை அயோத்தி மதுரை மாயை காசி காஞ்சி அவந்திகா துவாரகை எனப்படுவன. அவ்வேழில் இத்தென்னுட்டில் இலங்குவது காஞ்சிமாநகரம் ஒன்றே; ஏனைய ஆறும் வடநாட்டில் இருப்பனவாம். 'க' எனும் பிரமனுல் பூசிக்கப்பட்ட தலமாதல்பற்றி, இஃது 'காஞ்சீ' எனும் பெயர்பெற்றதென்பர். நாயன்மாரால் பாடப்பட்ட ஐந்து சிவாலயங்களையும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற பதினுன்கு விஷ்ணு ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இக்கச்சிப்பதியின் மாண்பு வருணித்தற்கு அரியதே. அத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்பு, இத்தென்னுட்டிலுள்ள திருப்பதிகளுள் வேறு எதற்கும் இல்லை. இங்கு காணப்படும் வைணவத் திருக்கோயில்கள் பலவற்றுள், சரித்திர சம்பந்தமாகவும், புராண சம்பந்தமாகவும், செல்வாக்கிலும் தலைமைபெற்று விளங்குவது 'அத்திகிரி' எனப்படும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமியின் ஸந்நிதியே யாம். பேருளாளன் என்று பெரியோரால் போற்றப்படும் வரதராஜஸ்வாமிக்கு வருஷந்தோறும் நடைபெற்று வரும் பல திறப்பட்ட திருவிழாக்களுள், வைகாசி மாதத்தில் திருவோணம் இறுதியாகக்கொண்டு பத்து நாள் நடைபெறும் பிரமோற்சவமே தலை சிறந்ததாகும். பிரமன் முதன் முதலாக உற்சவம் நடத்திய இடம் இதுவே என்பர் பெரியோர். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள உற்சவமூர்த்தியாகிய வரதர், நான்முகன் இயற்றிய வேள்வியினின்றும் எழுந்தவராவர். அக்காரணத்தினுல், அப்பெருமாள் வடுக்கள் நிரம்பப்பெற்ற திருமுகம் உடையவராய் விளங்குகின்றுர். இவ்வுற்சவரிடம் இருக்கும் மகாத்மியம், மூலவரிடம் காணப்படவில்லை; இவ்வுற்சவ மூர்த்தியிடம் காஞ்சிநகர் வாசிகள் அனைவர்க்கும் பேரன்பு உண்டு. இவரது பிரமோற்சவம், முன்னேர் காலத்தில் காண்போர் பக்தி பரவசமாகுமாறு நடத்தப்பட்டு வந்திருக்கவேண்டும். ஆனுல் இக்காலத்திலோ ?—

கடந்த வைகாசித் திங்களில், காஞ்சியம் பதிக்குச் சென்றிருந்த சிறியேற்கு, வரதரது பிரமோற்சவத்தை முதலிலிருந்து முடிவுவரை ஸேவித்து மகிழும் பேறு வாய்த்தது. அதில், அடியேற்கு ஓரளவு இன்பமும் ஓரளவு துன்பமும் உண்டாயிற்று. வரதனது ஸேவையில் இன்பமும் தற்காலத்தில் உற்சவம் நடத்தப்படும் விதத்தில் துன்பமும் விளைந்தது என்னலாம். எனவே, அவ்வுற்சவத்திற் காணப்பட்ட குறைபாடுகளை தமிழகத்தினர்க்கு எடுத்து விளக்குவது அடியேனது கடமையெனக் கருதுவதனுலேயே இக்கட்டுரை எழுத முன்வந்தேன். இதனில் காணப்படும் பிழைகளைப் பொருட்படுத்தாது

இன்றியமையாது செய்யப்படவேண்டிய சீர் திருத்தங்களைச் செய்விக்க முயல்வது, அருளாளர்பால் அன்பு பூண்ட அடியவர்தம் கடமை யாகும.

கொடியேற்ற விழா பிரமோற்சவத்தின் முதல் திருவிழா என்பது அனைவரும் அறிந்ததே. அம்முதல் திருவிழா நடத்தப்பட்ட விதமே, என்னைப் பெரிதும் திடுக்குறச் செய்தது. பெருமாள் மண்டபத்தில் எழுந்தருளிய பின், கருடனது உருவம் வரையப்பட்ட துகிலை கொடிமரத்தின் உச்சியில் ஏற்றுவிக்க வேண்டுவது அர்ச்சகர் செய்யவேண்டிய செயலாகும். அவ்வமயம், அக்கொடிக்கு விசேஷ திருவாராதனம் செய்யப்படும். ஆனால், காஞ்சீபுரத்திலோ—அக்கொடிக்கு தளிகை கண்டருளப் பண்ணுவதையன்றி வேறு விசேஷ திருவாராதனம் எதுவும் செய்யப்படவில்லை. மேலும், சுற்றிலும் பற்பலர் சூழ்ந்து பார்த்துக்கொண்டிருக்கும் போதே ஒரு பிராமணர், தென்னைமரத்தில் ஏறுவதுபோல் புனிதத்தன்மை பொருந்திய கொடிமரத்தில் கால் வைத்தேறியதைக் கண்டதும் என்மனம் பதை பதைத்தது. தென்னை மரத்திற்கும் கொடிமரத்திற்கும் வேற்றுமை யாதாயிற்று? நாடோறும் பலி சாதிக்குங்கால் மந்த்ர பூர்வமாக பூசிக்கப்படும் கொடிமரம்—இறைவனது ஒப்பற்ற வெற்றிக்குறியாக விளங்கும் கொடிமரம்—உடலில் முதுகெலும்பு எவ்வளவு முக்கியமானதோ, அவ்வாறே ஆலயத்துள் நுழைவதற்கு முன் முதன் முதலாக வணங்கப்பட வேண்டிய பெருமை பொருந்திய கொடிமரம்—நாத ஒலியைக் குறிக்கும் நன்மணிகளைத் தன்னுச்சியிற் கொண்ட கொடிமரம்—பலர் பார்த்துக்கொண் டிருக்கும்போதே கால் வைத்து ஏறத்தக்க தாகுமோ? சாதாரண மரங்களின் மீது ஏறுவதைப்போல், கொடிமரத்திலும் ஏறுவதாயின் அதன் மாண்பு என்னாயிற்று? இதுகாறும் சிறியேன் பார்த்த பல தலத்துப் பிரமோற்சவங்களில், ஓரிடத்திலேனும் அவ்வண்ணம் கொடிமரத்தில் கால்வைத்து ஏறும் கொடுமையைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. 'முதற்கோணல் முற்றுங்கோணல்' என்பதாக, பிரமோற்சவத்தின் ஆரம்ப தினத்திலேயே அவ்விபரீத சம்பவம் நிகழ்ந்ததை நினைக்குந்தோறும் நெஞ்சு சஞ்சலமடைகின்றது. கடைசிநாளாய கொடி இறக்க விழாவன்றும், அவ்வண்ணமே கொடிமரத்தின் மீது கால்வைத்து ஏறிச்சென்றே கொடியை அவிழ்த்தனர். கொடிமரத்தின் மீது கால்படாமலே, மண்டபத்தின் மீதேறி அதன் உச்சியருகில் சென்று கொடி கட்டுவதும் இறக்குவதும் ஏனைய இடங்களில் நிகழ்ந்து வருவதாயிருக்க, தென்னாட்டுத் திருமால் திருக்கோயில்களில் தலைசிறந்த—ஒப்புயர்வற்ற வரதன் சந்நிதியிலேயே அவ்விபரீத சம்பிரதாயம் நடைபெறுவது அன்பர்கட்கு பெருந்துயர் விளைப்பதாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கொடி ஏற்றப்பட்ட பின்னர், அவ்வேளையிலேயே-அதிகாலையிலேயே—வீதியுற்சவம் கண்டருளப் பெருமாள் வெளியில் புறப்பட்டுப் போய் விட்டார். பிரமோற்சவத்தைப் பத்து தினங்களிலும் உடனிருந்து நடத்திவைத்துச் சேவித்து மகிழும்பொருட்டு, இந்திரன் முதலிய அமரர்களைத் தம்மிடத்திற்கு வரவழைக்கும் ஐதிகத்தைக் குறிக்கும் "பேரீதாடனம்"—பெருமாள் வீதிப் புறப்பாட்டுக்கு முன்னர் நடத்தப்பட வேண்டியதாயிருக்க, வரதராஜர் சந்நிதியிலே பெருமாள் காலை வீதியுற்சவம் கண்டருளிச் சந்நிதி மீண்ட பின்னர், மாலை—ஒருவாறு ஒப்புக்கு நடத்தப்பட்டது பெரியதொரு விநோதமே யாகுமன்றோ! எவராலும் எதிர் பார்க்கப்படாத அகாலத்தில் நடத்தப்பட்ட 'பேரீ



தாடனம்' எனும் அதிமுக்கியமான வைபவத்தை, பெரும்பாலான அன்பர்கள் சேவியாது ஏமாந்து ஏங்கிச் சென்றது பெரிதும் இரங்கத் தக்கதே.

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வேளையும் பெருமாள் புறப்படுந்தோறும் அவருக்கு முன் அணிவகுத்துச் செல்வோர் யாவர்? கம்புகளையும் தடிகளையும் கைகளிற்பற்றிய போலீஸ் வீரர்களே! அவர்களது கோஷ்டிக்கு அப்புறமே அத்யாபக கோஷ்டி செல்லுகின்றது. அந்தோ! இது என்ன விநோதம்! போலீஸ் வீரர்களின்றிப் பெருமாள் அப்பிரமோற்சவத்தில் ஒருவேளையும் புறப்படுவதற்கில்லை. வடகலையார்க்கும் தென்கலையார்க்கும் இடையே இன்று காணப்படும் பிணக்கை நோக்குமிடத்து, வரதன் பிரமோற்சவம் சச்சரவுகளின்றி நடைபெறுவதற்குப் போலீசார் வேண்டியதும் அவசியமாகத்தான் இருக்கின்றது. தமிழ்நாட்டின் பல ஜில்லாக்களிலிருந்தும் வருஷந்தோறும் டஜன் கணக்கான போலீஸ் வீரர்கள், காஞ்சீ வைசாகோத்ஸவத்திற்கு வரவழைக்கப்பட்டு வருகின்றனர். இவ்வருஷத்தில் சென்ற வைகாசி மாதத் தொடக்கத்தில் நாடெங்கணும் பரவியிருந்த சத்தியாக்கிரக இயக்கத்தை அடக்கப் போலீஸ்வீரர்கள் தேவையா யிருந்தபடியால், காஞ்சிக்குச் சிற்சில போலீஸ்காரர்களே வந்திருந்தனர். போலீஸ் வீரர்கள் பலரைக் காஞ்சிக்கு அனுப்புவதற்கில்லாது போகவே, போதிய பாதுகாப்பு அளிக்கச் சௌகரியப்படவில்லை யென்று வைகாசி மாதத் தொடக்கத்தில் நடத்தப்பட வேண்டிய உற்சவத்தை அம்மாத முடிவில் தள்ளிவைத்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தினர் உத்தர விட்டனராம். அவ்வுத்தரவுகண்டு பெரும் பீதியடைந்த கச்சிநகர் வேதியர்கள், தங்களால் கூடியவரை கலவரங்கட்கு இடமின்றிப் பார்த்துக் கொள்வதாக இருதலைக் கட்சியினரும் அரசாங்கத்தினரிடம் விண்ணப்பித்துக்கொண்ட பின்னரே, வரதன் பிரமோற்சவம் உரிய காலத்தில் துவக்கப்பட அனுமதிக்கப் பட்டதென்று கேள்வி யுற்றேன். இஃது பெரிதும் இரங்கத் தக்கதொரு விநோதமே யன்றோ!

வெட்கம்! வெட்கம்!! போலீஸார் உதவியின்றிக் கலகம் நிகழாது நடத்துவதற்கு இயலாத நிலையில் வரதன் உற்சவத்தைக் கொண்டுவந்து விட்டதற்குப் பொறுப்பாளிகள் யாவர்? கச்சிநகர்ப் பிராமணர்களே யன்றோ! அந்தோ! வரதன் திருவருளை முன்னிட்டு அன்னோர் செய்யும் கைங்கரியம் அஃதேயோ? துஷ்டர்களையும் கலகக்காரர்களையும் அடக்கி அவர்களது கொட்டத்தை ஒடுக்குவதற்கு உரிய போலீஸ் வீரர்கள், அன்பினால் பிணைக்கப்பட்டு இறைவன் அருளுக்கு இலக்காகி உய்வுபெறப் பிரதிபலன் எதிர்பாராது கைங்கரியம் செய்யவேண்டிய பிராமணச் சிரேட்டர்களாகிய அத்யாபகர்கட்கும் வேதபாராயணக்காரர்க்கும் இடையே சண்டை உண்டாகாவாறு பார்த்துக் கொள்வதற்கென்று வருஷந்தோறும் வருவிக்கப்படுவது எவ்வளவு அவமானம்! எவ்வளவோ உயர்ந்த கொள்கைகளுடைய தேசிக ஸம்ப்ரதாயமான வடகலையும், மணவாளமா முனிகளின் ஸித்தாந்தமான தென்கலையும் சண்டைக் கட்சிகளாகப் பாவிக்கப்பட்டு, முறையே 'U' mark (மார்க்) 'Y' mark (மார்க்)—என்று அலட்சியமாகக் கோர்ட்டார் முதலியோரால் பேசப்படுமளவில், பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தைக் கொண்டுவந்து விட்டது எவர் குற்றம்? சகிப்புத் தன்மை சிறிதும் இல்லாத பொறுமைக்குணம் சற்றுமற்ற காஞ்சீ முதலிய நகர்களில் வாழும் பகவத்கைங்கரிய பரர்களான பிராமணர்களது பிழையே யன்றோ! பிறருக்குப் புராண இதிகாசங்களிலிருந்து நன்மொழிகளை எடுத்துக்கூறும் பிராமணர்கள்—'அஹிம்ஸா பரமோதர்ம:' என்றும், 'ஸத்

யம் வத தர்மம் சர' என்றும் ஹிதோபதேசம் பிராமணர்கள்—'கோபம் மஹா பாபம்' என்று கூறும் பிராமணர்கள்—தங்கள் சொந்த விஷயத்தில் மட்டும் இல்லை—பகவத்கைங்கரிய விஷயத்தில் மட்டும் அவ்வறமொழிகளைச் சிறிதும் கவனியாது சகிப்புத் தன்மையையும் தாராள சிந்தையையும் கைவிட்டு விட்டுக் கலகம் செய்து உழல்வது அறத்திற்குப் பொருந்துமோ? அருளாளர்க்குத்தான் ஏற்குமோ? "உள்ளிய எல்லாம் உடன் எய்தும்: உள்ளத்தால்—உள்ளான் வெகுளி எனின்"—எனும் பொய்யிற்புலவர் பொன்மொழிப்படி சீற்றத்தை மட்டும் விட்டுவிட்டால் கச்சிநகர்ப் பார்ப்பனர்கள் செந்தண்மை வாய்ந்த அந்தணர்களாகச் சிறந்து விளங்குவார்களன்றோ? விரிக்கிற் பெருகும். அத்திகிரி அருளாளரது கருணையை அடைய விழையும் அன்பர் எவராயினும், செயலளவில் சகிப்புத் தன்மையையும் தாராள சிந்தையையும் கொண்டு நடவாதவரை, தமது நோக்கம் சற்றும் நிறைவேறப்பெறா தொழிவதோடு பிறரால் பழித்துரைக்கவும் படுவரென்பதை கண்டு எச்சரிக்கின்றேன்—இல்லை—வினயமாக விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன். சென்றன செல்க. இனியேனும் காஞ்சி முதலிய திருப்பதிகளில் வாழும் பகவத் கைங்கரியபரர்களான வடகலையாரும் தென்கலையாரும்—வேதபாராயணக்காரர்களும் அத்யாபகர்களும் ஒருவர்க் கொருவர் தம்மிடையில் எவ்வித கலகத்திற்கும் இடமின்றித் தத்தம் பணிகளைச் செவ்விதிற் செய்துவருமாறு பகவத்ராமாநுஜ ஸித்தாந்திகள் அனைவரையும் பிரார்த்திக்கின்றேன்.

வரதனது பிரமோற்சவம் பத்துநாட்களிலும் சிறப்பாகவே இருப்பினும், மூன்றாம்நாள் பகலில் நடைபெறும் கருடசேவையே மிக்க பிரசித்தி பெற்றதாகும். தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் தமது விளம்பரங்களிலே, மூன்றாம்நாள் பகலில் மட்டும் நடைபெறும் கருடோற்சவத்தைப் பத்துநாள் உற்சவத்திற்கும் பொதுப்பெயராக, "காஞ்சீபுரம் கருடோற்சவம்—11-5-30 முதல் 20-5-30-வரை" என்று விளம்பரப்படுத்தி யிருப்பது சிரிப்புக்கிடமான பெரியதொரு விநோதமாகும். கருடசேவையன்று காணப்படும் அபரிமிதமான ஜனத்திரள், ஏனைய நாட்களில் காணப்படவில்லை. அலங்காரச் சிறப்பிலும் பிறவற்றிலும் காஞ்சீபுரத்தைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்தனவாக ஏனைய தலங்கள் பலவற்றிலும் கருடோற்சவம் நடைபெற்றுவரினும், காஞ்சி கருடோற்சவம் ஒன்றே ஒப்புயர்வற்ற பிரசித்தி பெற்று விட்டது எக்காரணம் பற்றியோ அறியேன். ஸ்ரீ வேதாந்த தேசிகர் இத்தலத்துப் பெருமாளைக் குறித்து,

"புருடன் மணிவரமாக, பொன்றா மூலப்
        பிருகிருதி மறுவாக, மான் தண்டாக,
தெருள் மருள் வாள் மறைவாக, ஆங்காரங்கள்
        சாரங்கள் சங்காக, மனம் திகிரியாக
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்களாக
        இருபூத மாலை வனமாலையாக,
கருடன் உருவாம் மறையின் பொருளாம் கண்ணன்
        கரிகிரி மேல் நின்று அனைத்தும் காக்கின்றானே"

என மங்களாசாசனம் செய்திருப்பதிலிருந்து, இக் காஞ்சீ கருடோற்சவ வைபவ தத்வம் ஓரளவு தெரியவருகின்றது. வேதபுருஷனை—ப்ரணவஸ்வரூபியான கருடாழ்வார் மீது அருளே உருவான அத்திகிரி வித்தகன் ஆரோகணித்து எழுந்தருளிய காட்சி அதியற்புதக் காட்சியாகவே இருந்தது.



இவ்வருடத்தில், இரண்டாம் உற்சவத்தன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மேல், போலீஸ் வீரர்கள் சிற்சிலர் அருளாளர் ஆலயத்துக் கோபுர வாயிலில் நின்றுகொண்டு, கோயிற் சிப்பந்திகளும் 'பெரிய மனிதர்கள்' என்போரிற் சிலருந் தவிர ஏனைய எவரும் தங்களைத் தாண்டி உள்ளே செல்ல முடியாதபடி காவல் புரிந்து நிற்பாராயினர். 'டிக்கட் வைத்திருப்பவர்கள் மட்டுந்தான் சந்நிதிக்குள் இருக்கலாம்' என்று அறிவிக்கப்பட்டது. ஷை டிக்கட்டுகளோ விலைக்கு விற்கப்படுவனவாகவும் இல்லை; தெரிந்தவர்கட்கு மட்டும் அதிகாரிகளால் அவை இலவசமாக அளிக்கப்பட்டன. இரண்டாந் திருவிழாவன்று, அவ்விஷயத்தைக் குறித்து முன் எச்சரிக்கை எதுவுமே செய்யப்படவில்லை. பிரகாரங்களில் படுத்து உறங்கிக் கிடந்தவர்களெல்லாம் எழுப்பப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டனர். அம்மட்டோ! அநந்த ஸரஸில் தீர்த்தமாடிக் கொண்டிருந்தவர்கள் பலரும்—ஆடவரும் பெண்டிரும்—அவசரப்படுத்தப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டனர். மண்டபத்தைவிட்டு கருடாரூடராய்ப் புறப்பட்டருளிய அருளாளப் பெருமாள், நம்மாழ்வாருக்கும் உடையவருக்கும் சேவை சாதித் தருளியபின்னர், சில வருஷங்கட்கு முன்வரை அன்பர்கள் அனைவரும் சேவித்து ஆனந்திக்கும் வண்ணம் கோபுரவாயிலில் ஒரு முகூர்த்தகாலம் தாமதித்து நிற்பதுண்டு. ஆனால், இவ்வருஷம் எண்ண முடியாத ஜனங்கள் கருடாரூடரான வரதனைச் சேவித்துக் களிக்கப் பேரார்வத்தோடு நெடுநேரம் வெளியில் காத்துக்கொண்டு நின்றிருந்தும், கோபுர வாயிலில் பெருமாளை மிகச் சில நிமிஷங்களே எழுந்தருளப் பண்ணியிருந்தபின் வேகமாக வெளியிற் புறப்படச் செய்துவிட்டனர். பெருமாளோடு தொடர்ந்து சென்று சேவிக்கப் போதிய உடல்வலியில்லாதவர்களான வயோதிகர்கள், சிறுவர்கள், பெண்மணிகள் முதலியவர்கட்கு, அவ்வாறு பெருமாள் சில நிமிஷங்களில் புறப்பட்டுவிட்டது பெரும் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் எய்துவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நாடோறும் அனுமார் கோயிலருகில் பெருமாள் நிறுத்தப்பட்டு, இரு பிராமணர்கள் இரு புறமும் குடைபிடித்து வருவது வழக்கம். அவ்வாறே, கருடசேவையன்றும் பெருமாள் அங்கு நிறுத்தப்பட்டார். ஆனால், அந்தோ! என்னென்பேன்! என்னென்பேன்!! அப்பொழுது பெருமாளருகில் நின்று கொண்டிருந்த அர்ச்சக ஐயங்கார், எண்ணிறந்த அன்பர்கள் வரதனையும் அப்பெருமாளைத் தாங்கி நிற்கும் ப்ரணவஸ்வரூபியான கருடாழ்வாரையும் துதித்துக் கொண்டிருக்கும்பொழுதே, அனைவரும் பார்க்க அகக்கூச்சம் சற்றுமற்றுச் சிறிதளவும் அஞ்சாது அக்கருடாழ்வாரது முழங்காலின்மீது தமது காலை வைத்து ஏறிநின்று, குடையை நேராக நிறுத்திவிட்டு இறங்கினார். சிறிதளவும் எதிர்பார்க்கப்படாத அப்பெருங் கொடுமையைக் கண்ட சிறியேன், சடக்கெனத் தரையை நோக்கித் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நின்றேன். இரவு ஹனுமந்த வாகன சேவையின்போதும் அஞ்சாநெஞ்சு படைத்த அப் பார்ப்பனர், அனுமாரது முழங்காலின்மீது தமது காலை வைத்து ஏறலானார். மரங்களின்மீது ஏறுவதேபோல், பலரும் பார்த்துக்கொண் டிருக்கும்போதே பெரிய திருவடிமீதும் சிறிய திருவடிமீதும் பட்டர் கால் வைத்து ஏறுவாராயின், கருட சேவைக்கும் ஹநுமந்த ஸேவைக்கும் என்ன மதிப்பு? மகாத்மியம்

என்ன? கௌரவம் யாது? பார்ப்போர் என்ன எண்ணுவர்? அந்தோ! கொடுமை! பெருங் கொடுமை!!

பெருமாளுக்கு அடுத்தப்படியாகிய வணங்கப்பட வேண்டிய கருட ஆஞ்சநேயர்கள்—பெருமாளது அடியவர்களுள் முதன்மை பெற்ற காரணத்தால் பெரிய திருவடி என்றும் சிறிய திருவடி என்றும் போற்றப்படும் கருட ஆஞ்சநேயர்கள்—பெருமாளுக்கு அத்யந்த அந்தரங்க பக்த சிகாமணிகளாய கருட ஆஞ்சநேயர்கள்—எவ்வளவோ போற்றப்பட வேண்டியவர்களாயிருக்க, பகிரங்கமாக—பலர் பார்த்துக்கொண் டிருக்கும்போதே—ஊனக்கால் வைத்து ஏறத்தக்கவர்களோ? அம்மம்ம! கொடுமை! கொடுமை!! அப்பெரும்பாவம் அர்ச்சகர்களை ஒருபோதும் விட்டுவிடாது என்பதைமட்டும் ஈண்டு விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன். அவ்வளவு அலட்சியமாகவே அவ் வர்ச்சகர்கள் நடந்துகொள்வார்களாயின், கருட ஆஞ்சநேயர்கட்கு அவர்கள் அளிக்கும் மதிப்புதான் யாது? பார்ப்போர் தாம் என்ன நினைப்பர்? இவ்வித முக்கியமான விஷயத்தை அர்ச்சக ஸ்வாமிகளும் கோயிலதிகாரிகளும் போலீசாரும் கவனியாதொழிந்தது, மிகப் பெரியதொரு விநோதமே யாகுமன்றோ! அடுத்த ஆண்டிலேனும் அக்கொடுமை நிகழாவாறு, அருளாளர் அன்னோர்க்கு நன்மதி அளித்தருள்வாராக.

பின்னர், ஏழாம் உற்சவத்தன்று காலை சந்நிதியினின்றும் புறப்பட்டு ஒன்றரை மைல் தூரத்திலுள்ள தேரடி போந்து திருத்தேரில் ஆரோகணித்தருளிய வரதன், இவ்வாண்டில் ஒருநாளல்ல இருநாளல்ல ஏழுநாட்கள்வரை அத்தேரிலேயே எழுந்தருளியிருக்க நேர்ந்துவிட்டது. புறப்பட்ட மறுநாளே தேர் நடுப்பாதையைவிட்டு விலகி ஓரத்தில் சென்று நின்றுவிட்டது; மறுநாள் அவ்விடத்தைவிட்டுச் சில அடிகள் தூரம் பெயர்ந்து சென்றதும், மீண்டும் ஒரு வீட்டின் ஓரத்தில் சென்று சாய்ந்து நின்றுவிட்டது. அவ்விடத்தைவிட்டு அஃது பெயர்ந்து செல்ல, இரண்டு நாட்கள் பற்பலர் எவ்வளவோ முயற்சித்தும் பயனில்லை. அஃது எளிதில் நிலைக்கு வந்து சேராது என்னும் தீர்மானத்தின்மேல், நடுப்பாதையிலேயே அதனை விட்டுவிட்டுப் பெருமாளை மட்டும் சாரங்கட்டி இறக்கிவிடவும் யோசித்துவிட்டனர். இறுதியில் மூன்றாம் நாள் அஃது அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து சென்றது, வரதனது அபார கருணையினாலேயே என்பதில் ஐயமில்லை. இடையில் வந்திருந்த அன்பர்களும் காஞ்சி நகர் வாசிகளும் கொண்ட கவலை கொஞ்சமன்று. அத்தேர் மிகப் பெரியதாயிருந்தும் அதன் வடம் கயிற்றினால் ஆக்கப்பட்டிருந்ததால், அடிக்கடி அறுந்துகொண்டே வந்தது. வம்பு வழக்குகளில் ஆயிரக் கணக்கான பணத்தைச் செலவழிக்கப் பின்வாங்காத காஞ்சிப் பிராமணர்கள், தங்களது பேரபிமானத்திற்கு உரிய வரதனது பெரிய தேருக்குச் சங்கிலிவடம் செய்து வைக்கச் சிந்தை கொள்ளாதது பெரிதும் வருந்தத்தக்கது. மேலும், தற்போது ஆடிசன் பேட்டையில் நிற்கும் வரதன் திருத்தேரில்—அடிப்பாகத்தில்—முதல் வரிசை முழுவதும் காண்போர் மனத்தில் சிற்றின்பக் கிளர்ச்சியை எழுப்பக் கூடியவாறு நிர்வாணமான 'பெண் பதுமைகளே செதுக்கப்பட்டிருப்பது பெரிதும் இரங்கத்தக்கதொரு விநோதமாகும். அத் தேரைச் செய்வித்தவர் யாரோ அறியோம். காண்போர் கருத்தில் பக்தி உணர்ச்சியை எழுப்பத்தக்க தெய்வப் பதுமையே அமைக்கப்பட வேண்டிய இடத்தில், புனிதத் தன்மை





பொருந்திய தெய்வப் பெருமானது திருத்தேரில், கேவலம் சிற்றின்ப உணர்ச்சியைச் சிந்தையில் எழுப்பும் நிர்வாணப் பதுமைகளை அமைத்திருப்பது இழிவு! இழிவு!! பேரிழிவு! தமது சிற்றின்ப உணர்ச்சியைத் தம்மளவில் நிறுத்திக்கொள்ளாது, அன்பர்கள் பலரும் போற்றும் புனிதத் திருத்தேரிலும் அமைத்துவிட்டவர் எவராயினும், அவர் அருளாளரது நிக்ரஹத்திற்கு பாத்திராவரேயன்றி அநுக்ரஹத்திற்கு ஒரு நாளும் உரியராகார் என்பது உறுதி.

எட்டாம் உற்சவத்தன்று நண்பகற்குமேல், வரதன் மண்டபத்தில் எழுந்தருளி யிருக்குங்கால், பெருமான் 'தொட்டி தீர்த்தத்'தில் திருவடி நனைத்தருள்வது வழக்கம். நறுமணந்தரும் பொருள்கள் சேர்க்கப்பட்ட நறுநீர் நிரம்பிய வெள்ளி அண்டாவில், பெருமாளும் உபயநாச்சிமாரும் ஒருவர்பின் ஒருவராக எழுந்தருளி திருவடி நனைத்துச் சென்றபின் சடாரியும் தீர்த்தத்தில் நனைத்து எடுக்கப்பட்ட மறுகணமே, சுற்றிலும் நின்றுகொண்டிருந்தோர் சிறிதளவும் பொறுமையின்றி ஒருவர்மேல் ஒருவராக வீழ்ந்து தாம் தாம் கொண்டு வந்திருந்த செம்புகளை அவ்வண்டாவிற் போட்டு தீர்த்தம் மொகந்துகொண்டு விட்டனர். அனைவரும் கைபோடவே குழப்பம் அதிகமாய்விட்டது. அருகிலிருந்தோர் மட்டும் தீர்த்தம் மொகந்து கொண்டுவிட, பேரார்வத்தோடு எதிரில் காத்துக்கொண்டு நின்ற ஏனைய அன்பர்கள் தீர்த்தம் கிடைக்கப்பெறாது ஏங்கி நின்றனர். தேவர் போற்றும் தேவராஜனது சேவடிபட்ட தூய நற்றீர்த்தம், எங்கணும் சிந்தப்பட்டுப் பலராலும் மிதிக்கப்பட நேர்ந்தது. ஒருதுளி தீர்த்தம் தரையில் சிந்திவிட்டால் மூன்றுநாள் உபவாசம் இருக்கவேண்டுமென்பார் பெரியோர். அவ்வாறு பலாத்காரமாக—ஒழுங்குமுறை யின்றி—மிருகத் தன்மையாக ஒருவரை யொருவர் இடித்துக்கொண்டு சென்றால்தானா தேவராஜனது திருவருள் கிடைக்கும்? அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! அன்று, தீர்த்தம் எடுத்துக்கொண்டோரது பக்தி, நகையாடத் தக்கதொரு விநோதமே யன்றோ? சாற்று முறையன்று தென்கலையார்க்கும் வடகலையார்க்கும் இடையே எழுந்த சிறு சச்சரவு, போலீஸார் பாதுகாப்பின்றேல் பெரிய அடிதடிச் சண்டையாக முடிந்துவிட்டிருக்குமென்பதில் ஐயமில்லை.

இனி உற்சவத்தின் பொருட்டுக் காஞ்சிக்கு வந்த சேவார்த்திகளது செயலும் சிரிப்புக்கு இடமாகவே இருந்தது. சந்நிதிக்கு வந்த சிலர், மூலஸ்தானத்தை யடைந்து "உள்ளே இருக்கும் சாமி என்ன சாமி?"—என என்னை வினவினர். எனக்குச் சிரிப்பு அடக்கமுடிய வில்லை. சுவாமியின் பெயர்கூடத் தெரியாதோர், சந்நிதிக்குள் வருவது,—அதுவும் வரதன் சந்நிதிக்குள் வருவது பெரியதொரு விநோதமேயன்றோ! தலையிற் பாகையும் உடலில் இரட்டைச் சட்டையும் கையிற் பெட்டியும் கொண்டு, சந்நிதிக்குள் நுழையும் 'சேவார்த்திக'ளைக் காணும்போது எவருக்குத்தான் சிரிப்பு உண்டாகாது? இதுகாறும் கூறிவந்தன வெல்லாம் காஞ்சிப் பிரமோற்சவத்தில் எவர்க்கும் வெறுப்பை விளைவிக்க எண்ணி கூறப்பட்டன வன்று. குறைபாடுகளை உணர்ந்து இனியேனும் அவற்றைக் களைந்து, காஞ்சிப் பிரமோற்சவத்தைச் செவ்விதிற் செய்வித்து அருளாளரது கருணைக்கும் அன்பரது மகிழ்வுக்கும் இலக்காக வேண்டும் என்னும் நன்னோக்கத்துடனேயே இக் கட்டுரை எழுத முன் வந்தேன். பிழைபொறுத்து, மெய்யன்பர் செய்ய வேண்டுவன செய்வாராக.

# குடும்பக் கலகம்.

"காரணசித்தன்"

(நாரதரும் தும்புருவும் சந்திக்கிறார்கள்)

தும்புரு:—"நாரத முனீந்திரா நமஸ்காரம்"

நாரதர்:—ஓஹோ! தும்புருவா நீ எங்கிருந்து வருகிறாய்?

தும்புரு:—" அடியேனா—வைகுண்டத்திலிருந்து வருகிறேன். தேவரீர் எவ்விடத்திலிருந்தோ?

நாரதர்:—நான் கைலாசத்திலிருந்து வருகிறேன்.

தும்புரு:—கைலாசத்தின் விசேஷங்கள் என்ன? பரமசிவக் கடவுள் சுகமாயிருக்கிறாரா? குழந்தை கணபதி கொழுக்கட்டைகளை வயிறு நிறையச் சாப்பிடுகிறானா? நந்திக்குப் பசும்புல் ஒழுங்காகக் கிடைத்து வருகிறதா?

நாரதர்:—எல்லாரும் சுகமாகவே இருக்கிறார்கள். ஆனால், பாவம் சிவபெருமானுக்கு மாத்திரம் அடிக்கடி தொல்லைகள் விளைந்து கொண்டே இருக்கின்றன.

தும்புரு:—சிவபெருமானுக்குங் கூடத் தொல்லையா? இதென்ன கதையாயிருக்கிறது? ஐயோ பாவம்! பெரியவர்! புராண புருஷர்!

நாரதர்:—பெரியவரா யிருந்தாலும் சரி, புராண புருஷராயிருந்தாலும் சரி, உலகம் போற்றும் உத்தமராயிருந்தாலும் சரி வருவது வழியில் தங்குமா? காலம் வரும்போது படவேண்டிய பாடு பட்டுத்தானே தீரவேண்டும்!

தும்புரு:—அப்படி என்ன தொல்லைகள் நேர்ந்தன என்பதைக் கொஞ்சம் சொல்லுங்கள் ஆண்டவரே!

நாரதர்,—சொல்லுகிறேன் கேள். அவருக்குச் சமீபத்தில் பெரிய கண்டம் நேர்ந்து கடந்தது.

தும்புரு:—என்ன கண்டம்? அக்கினி கண்டமா, ஜல கண்டமா?

நாரதர்:—அக்கினி கண்டமும் அல்ல, ஜல கண்டமும் அல்ல. விஷ கண்டம்.

தும்புரு:—இது என்ன ஐயா விபரீதம்? விஷ கண்டமா? அவருக்கு யாராவது விஷம் வைத்து விட்டார்களா என்ன? பெண்சாதி வைத்தாளா? பிள்ளைகள் வைத்தார்களா? வேலைக்காரர்கள் வைத்தார்களா? இல்லாவிட்டால் இவருடைய பெருமையைக் கண்டு பொறாமை கொண்டு இந்திராதி தேவர்கள் ஏதேனும் இந்தப் பாழும் வேலையைச் செய்துவிட்டார்களா?

நாரதர்:—யாரும் வைக்கவில்லை. தாமாக விழுங்கிவிட்டார்.

" என்றும் நன்றே செய்க நன்றும் இன்றே செய்க "



தும்புரு:—ஆனால் நடக்க வேண்டிய காரியங்கள் எல்லாம் நடந்துவிட்டனவா என்ன? போய்விட்டாரா?

நாரதர்:—போகவில்லை! அந்தப் பார்வதி தேவியின் கழுத்தில் உள்ள மங்கள சூத்திர மகிமையினால் சாவாமல் பிழைத்திருக்கிறார்.

தும்புரு:—அந்த அம்மாளுடைய தாலி பலமே யல்லாமல் அவருடைய பலம் ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறீர்களா?

நாரதர்:—பிறகு அப்படித்தான் நினைக்கவேண்டி யிருக்கிறது.

தும்புரு:—எப்பொழுது ஸ்வாமிகளே இந்தக் காரியம் நடந்தது? அவருக்கு இந்த விஷம் எங்கிருந்து கிடைத்தது?

நாரதர்:—சமீபத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற் கடலை அமிர்தத்துக்காகக் கடைந்தார்கள். அப்போது ஆலகால விஷம் வெளிப்பட்டது.

தும்புரு:—இதுதானா தாங்கள் சொல்ல வந்தது? அவர் என்ன தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணியா விஷத்தைக் குடித்தார்? லோகோபகாரமாக விஷங் குடித்தார். ஆலகால விஷம் வெளிப்பட்டு உலகத்தை விழுங்கிக் கொண்டிருக்கும்போது அதைக் காப்பாற்ற வேண்டும் என்று தேவர்கள் இறைஞ்சி வேண்டினார்கள். அப்பொழுது அவர் இரக்கங் கொண்டு இந்த விஷத்தைத் திரட்டி உருண்டை சேர்த்துக் கண்டத்தில் வைத்துக் கொண்டாராம். இந்தக் கதையை நான் வைகுண்டத்திலிருக்கும் போது எல்லாரும் பேசிக்கொள்ளக் கேள்வியுற்றேன். இக் கதையை எல்லாம் மாற்றி அவர் விஷங் குடித்ததுபோல நீங்கள் சித்திரமாகச் சொல்லுகிறீர்களே என்ன?

நாரதர்:—பாவம் நீ ஒரு அப்பாவி—கள்ளங் கபடறியாத பைத்தியகார மனுஷன்! ஒரு பெரிய மனுஷன் முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டால், அது வேறு விஷயத்துக்காக அப்படிச் செய்தான் என்றும், மற்றவர்களுக்கு அநுகூலமாக அப்படிச் செய்தான் என்றும், சொல்லுவது அபிமானிகளின் சகஜ குணம். தம்முடைய குடும்பக் கலகங் காரணமாகச் சிவபெருமானுக்கு உயிர் வைத்திருப்பதில் வெறுப்புத் தோன்றி, இறப்பதே மேல் என்று அவர் யோசனை செய்து கொண்டிருக்கும்போது, அதற்குள் தேவர்கள் வந்து ஆலகால விஷத்தை விழுங்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அவரும் இதுதான் தக்க சமயம் என்று தேவர்கள் கேட்டும் கேட்பதற்கு முன் திடுதிடு என்று புறப்பட்டுப் போய் அந்த விஷத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். ஆனால் முரட்டு ஆசாமியானதாலும், கெட்டியான ஜீவன் ஆனதாலும் எப்படியோ தப்பிப் பிழைத்துக் கொண்டார். வேறு ஒருவனாயிருந்தால் இதற்குள் செத்து எட்டு நாளாயிருக்கும்.

தும்புரு:—என்ன? அப்படியா சங்கதி! உலகத்திலே உண்மை வெளியாவதில்லை. தற்கொலை செய்துகொள்ளுவதற்கு அவர் முயற்சி செய்து கொண்டிருக்கும்போது தேவர்கள் குறுக்கிட்டு லோகோபகாரத்துக்கு என்று செய்துவிட்டார்களா? சங்கதி வெகு ரஸமாகவே இருக்கிறது. சரி இது எப்படியோ இருக்கட்டும். குடும்பத்தில் கலகம் என்ன வந்தது? பாகத்தகராறு என்றாலோ

" இணக்க மறிந்து இணங்கு "

இவருக்கு அவ்வளவு நிலைமை இல்லை. அண்ணன் தம்பிகள் கிடையாது. குடியிருப்போ சுடுகாடு. மண்டை ஓடு தவிர ஒரு வட்டிலாவது உண்டா சாப்பிட? புலித்தோலைத் தவிரக் கட்டிக் கொள்வதற்கு ஒரு கந்தற் துணியுங்கூட இல்லை. தலை மயிர் சடைகள் விழுந்துபோக வேண்டியதே யொழிய ஒரு நாளாவது எண்ணெய் போட்டுச் சீவிக் கொள்ளும் ஜோலிக்கே போனதில்லை. பாம்புகளைத் தவிர ஒரு சல்லிக் காசு நகையேனும் இல்லையல்லவா? இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியருக்குக் குடும்பக் கலகம் எப்படி வரும் என்பதில் எனக்குப் பெரிய சந்தேகம்.

*நாரதர்:*—ஓய் பைத்தியமே! உனக்கு உலகமே தெரியாது. கலகங்களுக்குச் செல்வமா காரணம்? அநேக காரணங்கள் இருக்கின்றன.

*தும்புரு :*—அந்தக் காரணங்கள் எவை என்று திருவாய் மலர்ந்தருளல் வேண்டும் ஆண்டவரே!

*நாரதர்:*—சொல்லுகிறேன் கேள்! குழந்தை சுப்பிரமணியனுக்கும் மூத்த பிள்ளை கணபதிக்கும் பொருத்தங் கிடையாது. எப்பொழுதும் சட்டாட்டப் போர்தான் அவர்கள் இரண்டு பேர்களுக்கும்.

*தும்புரு:*—ஏன் அந்தப் போராட்டம்? அண்ணன் தம்பிகளின் பாகத் தக்கா என்ன?

*நாரதர்:*—பாகங்களுக்கு ஆஸ்தி என்ன அங்கே கொட்டிக் கிடக்கிறது. இரண்டு பேருக்கும் சேர்ந்து ஒரு மண்டையோடு கிடைக்காமலா போய்விடப் போகிறது?

*தும்புரு:*—அப்படியானால் இந்த அடிதடி எதற்காக?

*நாரதர்:*—சுப்பிரமணியனுக்கு ஆறு தலை—பன்னிரண்டு கண்கள் இருக்கின்றன. கணபதி, சுப்பிரமணியனுடைய கண்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று கணக்கு எடுத்தானாம். சுப்பிரமணியன் சினங்கொண்டு தாயாரிடம் முறையிட்டானாம். அந்த அம்மை கணபதியை அழைத்துக் கேட்டாள்.



கேட்டபோது கணபதி "அம்மா! என்னுடைய தம்பிக்கை எட்டுச் சாண் நீளம் இருக்கிறது என்று சாண்போட்டுப் பார்த்தான். தவிர எனக்கு ஒரே தந்தமிருக்கிற தென்றும், காதுகள் முறங்களைப் போல இருக்கின்றன வென்றும் கேலி செய்து கைகொட்டிச் சிரித்தான். நான் கொழுக்கட்டைகளைத் தின்று கொண்டிருக்கும் போது சும்மா அதே வேலையாகக் கூர்மையாகப் பார்ப்பது வழக்கம். அவனுடைய கண்ணுப்பட்டு எனக்கு ஒருநாள் வயிற்று வலியுங்கூட வந்துவிட்டது. ஆகையால் நான் அவனுடைய கண்களை கணக்கெடுத்தது உண்மையே" என்று

"மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"



விடைகொடுத்தான். "இது என்னடா சுப்பிரமணியா" என்று கேட்க, சுப்பிரமணியன் இப்படிக் கூறினான்: "என்னுடைய வாகனமான மயிலை இவன் பிடித்துக் கொண்டு பலவந்தமாக அதன் கண்களைப் பிடுங்கினான். அது 'குய்யோ முறையோ' என்று அழுதது. அப்பொழுது நான் இவனை இப்படிச் செய்யலாமா என்று கேட்டுச சண்டை பிடித்தேன், அது முதல் என்மீது அவனுக்குக் கோபம்—இப்படிச் செய்கிறான். "என்னடா கணபதி! அப்படிச் செய்தாயா" என்று பார்வதி கணபதியைக் கேட்க, அவன் "அம்மா! என்னுடைய உடம்பில் நான் ஆபரணங்களாகப் போட்டுக் கொண்டிருக்கும் பாம்புகளின் மீது. சுப்பிரமணியன் தன்னுடைய மயிலைக் கொத்தும்படி ஏவினான். அந்த மயிலானது என் தேகத்தில் இருந்த பாம்புகளை மூக்கினால் கொத்தி விழிகளைப் பிடுங்கிவிட்டது. அதுவுமல்லாமல் என்னுடைய பெருச்சாளி வாகனத்தைக் கண்டு அடிக்கடி விண்ணணம் பேசுவான். அது வீடுகளில் கன்னங்களை வைக்குமாம்! பார்வைக்கு அருவருப்பாயிருக்குமாம். நாற்றம் நிறைந்த ஜல தாரைகளில் குடியிருக்குமாம். தன்னுடைய வாகனம் பல வர்ணங்களோடும் நல்ல தோகையோடும் அழகாய் விளங்குகின்றதாம். இவனுடைய போக்கிரித்தனமான வார்த்தைகளை நான் சகிக்கமாட்டேன் அம்மா" என்று பதில் சொன்னான்.

*தும்புரு:*—இந்த விவகாரத்தைக் கேட்டுப் பார்வதி தேவி என்ன முடிவு சொன்னாள்? பரமசிவக் கடவுள் என்ன கூறினார்?

*நாரதர்:*—பார்வதி தேவி "அப்பனே! உங்கள் வம்பு வழக்குகளை என்னால் தீர்க்க முடியாது. உங்கள் அப்பாவிடம் சொல்லிக் கொள்ளுங்கள்" என்றாள்.

*தும்புரு:*—சிவபெருமான் வழக்கைத் தீர்த்தாரா?

*நாரதர்:*—சிவபெருமான் மக்கள் மீது வைத்திருந்த அன்பினால் யாரையும் ஒன்றும் சொல்ல முடியாமல் சும்மா இருந்தார். குடும்பக் கலகங்கள் எல்லா வீடுகளிலுந்தான் இருக்கின்றன. அவைகளைச் சிவனாலும் தீர்க்க முடியாது, பிரமாவினாலும் தீர்க்க முடியாது, விஷ்ணுவினாலும் தீர்க்க முடியாது.

*தும்புரு:*-அப்படியானால் சிவபெருமான் விஷங் குடித்ததற்குள்ள தகுந்த காரணங்கள் எவையோ, அவைகளை விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

*நாரதர்:*—சொல்லுகிறேன் கேள். பரமசிவக் கடவுளுக்கு கங்கை, கௌரி என்று இரண்டு சம்சாரங்கள் இருப்பது தெரியும் அல்லவா?

*தும்புரு:*—ஆமாம் தெரியும்.

*நாரதர்:*—இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு அம்பலம் என்பது அனுபவத்தில் கண்டுவருவது தானே.

*தும்புரு:*—சக்களத்திகள் இரண்டுபேருக்கும் போராட்டமா என்ன?

*நாரதர்:*—இல்லாமற் போகுமா? ஒரு வீட்டில் நூறு சண்டைகளிருந்தாலும் தீர்க்கலாம்—கவலை இல்லை. சக்களத்திப் போராட்டத்தை யாரால் தீர்க்க முடியும்? கங்கைக்கும் கௌரிக்கும் சதா சர்வகாலமும் சண்டைதான்.

"கிழவன் பேச்சுக் கிண்ணாரக்காரனுக்கு ஏறுமோ?"

தும்புரு:—எதற்காக இந்தப் போரும் கலகமும் உண்டாக வேண்டும்? ஒருத்திக்கு ஐசுவரியம கொடுத்து மற்றவளுக்கு இல்லை என்று மறுத்துவிட்டாரா என்ன?

நாரதர்:—ஐசுவரியத்தைப் பற்றி ஒன்றும் இல்லை. "கங்கையைத் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டீர்கள், அவள் மீது உங்களுக்குப் அதிகப் பிரியம்" என்று கௌரி வழக்காடுவாள். "கௌரிக்குப் பாதியுடம்பைக் கொடுத்துவிட்டீர்கள், அவள்மீது உங்களுக்கு அதிகப் பிரியம்" என்று கங்கை ஏசிப் பேசுவாள். இந்த இரண்டு பேரும் புருஷனைப் பலவிதத்தில் வாட்டி வளைவெடுக்கிறார்கள். சிவபெருமான் இமயமலை மீதிலுள்ள கைலாச உச்சியில் அல்லவா குடியிருப்பு? அந்தக் காரணத்தால் கங்கை, கணவனைப் பார்த்து "நீங்கள் பார்வதியின் பிறந்த வீட்டிலேயே நிரந்தரமாய்க் குடியிருந்து வருவதினாலே உங்களோடு நானும் அடிமையாயிருக்க வேண்டியிருக்கிறது. முழு அடிமைகளாகவே இருக்கிறோம். இங்கே வேண்டாம், வாருங்கள் நாம் இருவரும் புறப்பட்டுப் போய்விடுவோம்" என்று அடிக்கடி நயத்திலும் பயத்திலும் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பாள். "சுவசுரக் கிருஹம் சுவர்க்க துல்யம்" அல்லவா? அதனால் பரமசிவக் கடவுள் வேட்டகமாகிய கைலாசபருவதத்தை விட்டுவிடமாட்டார். இந்த விஷயமாய் கங்கைக்கும் கௌரிக்குங்கூட அடிக்கடி வாக்குவாதம் உண்டாகிவிடும்.



தும்புரு:—சக்களத்திப் போராட்டம் மீறியே நிற்கிறது. பாவம் அவருக்கு மனச் சமாதானமே இருக்காதே.

நாரதர்:—அந்தப் போராட்டம் ஒன்று மாத்திரம் அல்ல. கணபதியின் சரீரத்தில் பாம்புகள் ஆபரணங்களாக இருக்கின்றன. தகப்பனாரைப் போலவே மகனும் இந்த நகைகளை வைத்துக்கொண்டான். சுப்பிரமணியனுடைய வாகனமாகிய மயில் கணபதியின் உடம்பின் மேலிருக்கிற பாம்புகளைப் பிடித்து இம்சை செய்து கொண்டிருக்கும். கணபதி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு வந்து தகப்பனாரிடம் முறையிடுவான். இத்தவிவகாரங்களைத் தீர்க்க முடியாமல் சிவபெருமான் திண்டாடித் தெருவில் நிற்பார். "போகட்டும் நீதான் அந்தப் பாம்பாபரணங்களை எடுத்து விடுகிறதுதானே" என்று நந்தீஸ்வரர் முதலான கைலாச வாசிகள் கணபதியோடு அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பது வழக்கம். ஆனால் கணபதி அவர்கள் பேச்சைக் கேட்கமாட்டான். "உன்னுடைய மயிலை ஜாக்கிரதையாக வைத்துக் கொள் அப்பனே" என்று அவர்கள் சுப்பிரமணியனோடு சொன்னால், அதற்கு அவன் "என்னுடைய மயிலை நான் ஜாக்கிரதையாகவே வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஜந்துக்களுக்குப் புத்தி—பகுத்தறிவு இருக்குமா" என்று மறுமொழி கூறிவிடுவான். இதில் இன்னொரு தகராறு. பார்வதி தேவியின் வாகனம் சிங்கம். கணபதியின் முகம் யானை முகம். அந்தச் சிங்கத்திற்கும் இந்த யானைக்கும் பொருத்

" காவல்தானே பாவையர்க் கழகு "



தங் கிடையாது—ஜென்மப் பகை. அந்தச் சிங்கத்தைக் காணும்போதெல்லாம் இந்த யானை வெருண்டு விலவிலத்து மூச்சுப் பேச்சில்லாமல் ஸ்தம்பித்துப் போய்விடும். இது ஒரு பெரிய ஆபத்தான விஷயமாயிருந்தது. அந்தச் சிங்கத்தைக் காணும்போது எங்காகிலும் கண் காணாமல் ஓடி மறைந்து கொள்ளலாம் என்று கணபதி ஆத்திரப்படுவதுண்டு. ஆனால் அவனுடைய ஆசைப்படியும் ஆத்திரப்படியும் பெருச்சாளி வாகனம் இழுத்துக் கொண்டு செல்லுவதில்லை. சிவபெருமானது தலைமீதுள்ள சந்திரனுக்கும், நெற்றியில் உள்ள நெருப்புக் கண்ணுக்கும் பரஸ்பர விருத்தம்—அணுவளவும் பொருத்தங் கிடையாது. இத்தனை காரணங்களும் ஒன்று கூடித் தொல்லை விளைத்தமையால் சிவபெருமான் இறப்பதே மேல் என்று முடிவுகட்டி, விஷங்குடிக்கத் தொடங்கினார். உண்மைக்குட்டு இவ்வளவுதான். நீ நினைத்துக் கொண்டிருக்கிறது போல லோகோபகாரம்—பரோபகாரம் காரணம் அல்ல.



தும்புரு:—அடடா, என் உடம்பு மயிர்க்குச்செறிகிறது. முப்பத்து முக்கோடி தேவர்களாலே பூஜிக்கப்படுகிற மகானுபாவர் குடும்பக் கலகங் காரணமாக விஷங் குடிக்க வேண்டி நேர்ந்து விட்டதல்லவா?

நாரதர்:—அது இருக்கட்டும். வைகுண்டத்தில் என்னையா விசேஷம்?

தும்புரு:—மகா விஷ்ணுவின் அவஸ்தைகூட இந்த மாதிரியே தான் இருந்துகொண்டிருக்கிறது.

நாரதர்:—அடடே! அதென்ன அந்தக் கதையையும் கொஞ்சம் சொல் பார்க்கலாம். கேட்க வேடிக்கையாகவே இருக்கிறது.

தும்புரு:—சொல்ல என்ன இருக்கிறது? சம்சாரம் லக்ஷ்மிதேவி அல்லவா? லக்ஷ்மி தேவியின் சங்கதிதான் உங்களுக்குத் தெரியுமே! ஓரிடத்தில் தங்கியிருக்கமாட்டாள். காலில் பாத சக்கரம்! புருஷனை விட்டு விட்டுத் தேசமெல்லாம் சுற்றிக் கொண்டிருப்பாள். போவதும் வருவதுந்தான் வேலை. போகிறவள் ஓரிடத்திலாவது கொஞ்ச காலமாவது இருப்பாளா? நிலையில் நில்லாத பெண்டாட்டியோடு காலக்ஷேபம் செய்வது எவ்வளவு கஷ்டமோ அந்த நாராயணமூர்த்தியைத்தான் கேட்கவேண்டும்! அதிலும் பிள்ளை பிறந்திருக்கிறான். ஆஹா! என்ன பிள்ளை ஐயா? மகனுடைய பேரைச் சொன்னவுடன் அப்பன் தலைகுனிய வேண்டியதுதான்.

நாரதர்:—மன்மதனா என்ன?

தும்புரு:—வேறு யார்? அவன் உலகத்திலுள்ள ஜீவகோடிகளுக்கு விளைக்கிற தொல்லை சொல்ல முடியாது. நிற்க விஷ்ணு மூர்த்தியின் இருப்

" ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் "

பிடமோ சமுத்திரம். எந்த வேளையில் பொங்கிக் குடியைக் கெடுக்குமோ யார் கண்டார்கள்? படுக்கை பாம்பு. வாகனம் கருடன். படுக்கையா யிருக்கிற பாம்புக்கும், வாகனமா யிருக்கிற கருடனுக்கும் கடும்பகை. அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் போது அந்தக் கருடன் கொத்திப் பிடுங்கிவிடலாம். இந்தக் காரணங்களால் மகா விஷ்ணுவின் பாடும் திண்டாட்டமாகத்தான் இருக்கிறது.



நாரதர்:—சிவ விஷ்ணுக்கள் அநாதி புருஷர்கள். பழமையான பந்துக்கள். அதனால் அவர்கள் சமமான அவஸ்தைகளில் இருக்கத் தக்கவர்களே!

தும்புரு:—ஆனால் விஷ்ணுமூர்த்தி மாத்திரம் விஷங்குடிக்கவில்லை.

நாரதர்:—குடித்தாலும் குடிக்காவிட்டாலும் குடும்பக் கலகத் தொல்லை மாத்திரம் குறையவில்லை அல்லவா?

தும்புரு:—அது யாரையும் விடாது. இவ்வளவு பெரிய மாகாநுபாவர்களாகிய இவர்களையே பிடித்தாட்டும்போது மனிதர்களை மாத்திரம் விட்டுவிடுமா?

நாரதர்:—சரி! சரி!! இதெல்லாம் நமக்கு எதற்காக? பெரியவிடத்துச் சங்கதி! நாம் இந்திரலோகம் போகலாம் வா.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்துவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.






## விக்கிரகாராதனை

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன்.)



இதுகாறுங் கூறியவாற்றால் கடவுளி னிலக்கணம் அவரை யடையும் நெறிகள் முதலியவற்றைப் பற்றிய கொள்கையே மதமாம் என்பதும், அக் கொள்கைகள் பல்வேறு வகையாயிருத்தலின் மதமும் பல்வேறு வகைப்பட்டதாயிருக்கின்றது என்பதும், ஆயினும் அவ்வெல்லா மதங்களும் கடவுளைத் துதிப்பதில் மாறுபட்ட அபிப்பிராயமுடையனவன்றாம் என்பதும், ஆகவே அவரை வழிபடுதற்குத் தத்தம் வீடுகளில் வசதியாக இடம் ஏற்படுத்திக் கொண்டாலும் யாவர்க்கும் பொதுவாகப் பல விடங்கள் நியமிக்க விரும்பி ஏற்படுத்தப்பட்டவையே ஆலயங்களாம் என்பதும், அவ்வாலயங்களுள் சில விக்கிரகங்களைப் பூசிக்கு மிடங்களாயும் சில விக்கிராகாராதனை யின்றியவையாயு மிருக்கின்றன வென்பதும், விக்கிரகாராதனை விஷயத்தில் அபிப்பிராய பேதம் மிக்கிருப்பதால் விக்கிரகாராதனை செய்வோர் அது நியாயமே யென்றும், அதனைச் செய்யாதோர் அது வெறுக்கத்தக்கதா மென்று அவ்வாறு செய்வோரைப் பரிகசித்தும் பேசுவர் என்பதும், எனினும் விக்கிரகாராதனை செய்வோருக்கும் அது உடன்பாடன்று—விக்கிரகாராதனை சரியன்றென்பதே அவர் தம் முடிவான கொள்கையும்—ஆயினும் தியானத்திற்கு மனோலயம் இன்றியமையாத தாகலின் அதினிமித்தம் ஓர் சாதனமாகவே கொள்ளப்படுகின்றது என்பதும், ஆகலின் சொரூப பூஜை செய்வோர் முக்கியமாக அறிய வேண்டிய விக்கிரகாராதனைக் கிரமம் இன்னதென்பதும், அதற்கு முன்பு சாதனமாகச் சரியை கிரியைகளைக் கைக்கொண்டொழுகுதல் வேண்டும், அவற்றால் மனம் பரிசுத்தமடைந்து எண்ணியவிலக்கை எளிதினெய்தற்கேற்ற பக்குவ நிலையை யெய்து மென்பதும் பிறவும் பெற்றாம்.

இனி விக்கிரகாராதனை தவறன்றா மென்பதையும் சிறிது விளக்குவோம்.

"ஒருநாம மோருருவ மொன்றுமிலார்க் காயிரமாந்,
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று பெரியோர் கடவுளினிலக்கணம் கூறியிருக்கின்றனர். விக்கிரகாராதனைக் காரரால் கூறப்பட்ட இவ்வாக்கியம் அஃதிலாதார் கொள்கையோடு முரண்பாடுடைய தன்றாம். இவ்வாறு ஒரு நாமமும் இல்லாதவரை ஒரு நாமத்தால் அழைப்பதும் குற்றமேயாம் என்பது வெளிப்படையாம். விக்கிரகாராதனை

யை யிழித்துக் கூறுவோர் அவ்வாறு ஒரு பெயரால் அழையாம லிருத்தலில்லை; அழைக்கவே செய்கின்றனர். கடவுளைக் குறித்துப் பிரார்த்தனை செய்யுங் காலத்தும் 'ஆண்டவனே! அடியேன் முறைக் கிரங்கும்; கடைக்கண் பாரும்; என் முறைக்குச் செவிகொடும்' என்கின்றனர். இதனால் அவர்கள் அவருக்குக் கண் காது முதலிய உறுப்புக்களை யமைக்கின்றனர். ஆகவே அவர்கள் ஓர் உருவத்தையே கற்பிக்கின்றார்கள் என்பது மிகையாகாது. நியாயத்தின்படி இதுவும் குற்றமாகவே கருதப்படவேண்டும். அன்றியும், அப் பரம்பொருள் மனோவாக்கிற் கெட்டாதது. மனோவாக்கிற் கெட்டாத வஸ்துவை மனத்திற் பாவித்துத் தியானித்தலும் குற்றமேயாம். இந்திரியங்களுக்கு விஷயமாகாததை மனத்தாற் பாவித்தல் கூடாதென்பது நியமமாம். எனவே, நாமரூபங்களில்லாதவருக்கு நாமரூபங்களைக் கற்பித்தல் குற்றமாகாதெனக் கருதப்படுமாயின் விக்கிரகாராதனையும் குற்றமாகாதெனவே கருதப்பட வேண்டும்.

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் ஒரு காலத்தில் ஓர் அரசன தரண்மனையில் தங்கியிருக்க நேர்ந்தது. அப்பொழுது ஒரு நாள் அரசனும் சுவாமிகளும் ஓர் விசாலமான அறையில் அமர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அருகில் மந்திரி முதலிய அரண்மனை யுத்தியோகஸ்தர்கள் பலர் உட்கார்ந்து அச்சம்பாஷணையைக் கவனித்துக்கொண் டிருந்தனர். சுவாமிகள் அரசனோடு சம்பாஷித்த வண்ணம் அறையிற் சுற்றிலும் மாட்டப்பட்டிருக்கும் படங்களைப் பார்த்துக்கொண்டே வந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்சரின் திருவுருவப் படமொன்று அங்கிருக்கக் கண்டு மிகுந்த பக்தியோடு கைகளைக் கூப்பி ராம கிருஷ்ண! ரகமகிருஷ்ண! என்றார். அரசன் அவரை நோக்கி என்ன சுவாமிகளே! தாங்கள்கூடவா சொரூப பூசை செய்கின்றீர்கள்? சன்னியாசியாகிய தாங்களும் சகுணோ பாசனையை விட்டபாடில்லைபோலிருக்கிறதே! என்றான்.

சுவாமிகள் அப்பொழுது யாதொரு விடையும் கூறாமல் சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே யிருந்தார். சிறிது நேரம் சென்றதும் அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த அவ்வரசனுடைய படத்தைப்பார்த்து சுவாமிகள் அதனை யெடுத்துத் தருமாறு சமீபத்திலிருந்த மந்திரியைக் கேட்டார். மந்திரி அவ்வாறே எடுத்துக் கொடுக்க விவேகானந்தர் அதனைக் கையில் வைத்துக் கொண்டபடியே மந்திரியை நோக்கி ஐயா! இப்படத்தின் மீது எச்சில் துப்பும் என்றார். மந்திரி அங்ஙனஞ் செய்ய வுடன்படுவானா! மயங்கி நின்றான். சுவாமிகள் மற்றொருவனைப் பார்த்துத் துப்புமாறு கேட்டார். அவனும் செய்ய வொருப்படவில்லை. அப்படியே ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டே வந்தார். ஒருவரும் அதற்குச் சம்மதப்படாமல் என்ன இப்படிக் கேட்கின்றீரே யெனத் தயங்கி நின்றனர். இவையனைத்தையும் வியப்போடு கவனித்துக்கொண்டிருந்த அரசன் விவேகானந்தரைப் பார்த்து சுவாமி! எனக்குக் கீழ்ப்பட்டவர்களாகிய இவர்களை என்படத்தில், அதுவும் என்னெதிரிலேயே துப்பச்சொன்னால் அப்படிச்செய்யத் துணிவுண்டாகுமா! என்றார். அதற்குச் சுவாமிகள் இதிலென்ன இருக்கிறது! வெறுங் காகிதமும் சிறிது மையுந்தானே! இதன்மேல் துப்புவதால் யாது குற்றம்? என, அரசன் 'எனினும் இது என் வடிவத்தை தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் படமல்லவா! என் சாயை இதில் இருக்கவில்லையா?' என்றான். சுவாமிகள் 'அரசே! இப்படித்தான் சொரூப வணக்கமு மிருக்கின்றது. நமது மனம் நாமரூபங்களை





விடாது பற்றிக்கொண் டிருக்குமளவும் விக்கிரகாராதனை வேண்டியதாகவேயிருக்கிறது' என்றருளினார்.

மேலும், ஆலயவமைப்பின் தன்மையினையும் ஆலய வழிபாடு சம்பந்தமாக வமைக்கப்பட்டுள்ள விதிகளையும் ஊன்றி நோக்குவோமாயின் அவற்றால் நாம் அடையத்தக்க பயன் இன்னவென்பது புலனாம். நீராடிப் பரிசுத்தமாகச் செல்லுதல் பிராகாரவலம் வருதல் முதலிய விதிகள் தேகாரோக்கியத்தையனுசரித்துச் செய்யப்பட்டனவாம். அன்றியும் ஆலயவமைப்பின் தத்துவங்கள் பல. அவை விரிக்கிற் பெருகும். ஆகவே, நாமரூபங்களைப்பற்றி யுழலும் மனம் விக்கிரகத்தைக் கடவுளாகவே பாவித்துத் தியானித்தல் வாயிலாக அப்பாவனையைத் தவிர மற்றப் பாவனைகளை யெல்லாம் ஒழிக்கும். அப்படியொழிப்பதனால் தத்துவ ஞானம் மனோநாசம் வாசனாக்ஷயம் என்பவை யுண்டாகி அறிவாகவே நிலைத்து நிற்கும். இதுவே விக்கிரகாராதனையின் முக்கிய நோக்கமாம் என்பது கண்டறியத் தக்கதாம்.

இவ்வித நன்னோக்கத்திற்கு மாறாக விருக்குமாயின் அத்தகைய ஆலயவழிபாடு யாதொரு பயனையும் பயத்தலில்லை யென்பது திண்ணமாம். தற்காலம் நாம் அறிந்த வரையில் மேற்கூறிய முறைகள் முற்றிலும் மாறுபட்டு நேர்மாறான முறையே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றதெனக் கூறவேண்டிய நிலைமையிலேயே ஆலய வழிபாடு இருக்கின்றதென்பது மறுக்க முடியாததோருண்மையாகும். எங்கும் வீண் ஆடம்பரங்களும் ஆர்ப்பாட்டங்களுமே மலிந்து கிடக்கின்றன. மனத்தை எவ்வளவு தூரம் விரியச் செய்வது சாத்தியமோ அவ்வளவிற்கும் அங்கே இடமிருக்கக் காணலாம். பணமுள்ளவனுக்கே தெய்வம் என்னும் இழிநிலை யேற்பட்டுவிட்டது. ஏழை பங்காளன் என்னும் பெயர் ஆலயவழிபாட்டு முறையளவில் பொய்த்துவிட்டது. பணமில்லாதவன், அவன் எத்தகைய உத்தம பக்தனாயினும் அடியெடுத்து வைக்கவும் அருகதை யற்றவனாகிறான். எத்தகைய இழிகுணத்தவனாயினும் ஏந்தினகையில் இரண்டணா வைத்துவிட்டால் இராசோபசாரம் பெறுகிறான். பரிசுத்த ஆலயம் வியாபாரத்தலமாகவும் கேளிக்கைச் சாலையாகவும் மாறிவிட்டது. சுருங்கக் கூறுமிடத்து தற்கால ஆலயங்களின் நிலைமை முழுதும் மாறவேண்டும். வட நாட்டில் பண்டரிபுரம் முதலிய க்ஷேத்திரங்களிலிருப்பது போன்ற நிலைமை யேற்படவேண்டும். அப்பொழுது தான் ஆலய வழிபாட்டை யமைத்த பெரியோர்களின் எண்ணம் நிறைவேற்றப்படுவதாகும். இத்தகைய இழிவான நிலையேற்பட்டதுபற்றியே ஒருசாரார் அதனை அறவே யொழிக்கவேண்டுமெனக் கூறுகின்றனர். அக் கூற்று குற்றமுடைய தன்றாம். ஆனால் சீர்திருத்த முயல்வது நன்மையேயொழிய முற்று மொழித்துவிட வேண்டுமென்பது நியாயமாகாது. எடுத்துக்கொண்ட விஷயம் விக்கிரகாராதனையே யாகலின் ஆலயச் சீர்திருத்த விஷயத்திற் பிரவேசியாமல் இத்துடன் நிறுத்திவிடுகின்றோம். எனினும் ஆலயச் சீர்திருத்தம் ஏற்பட்டாலொழிய விக்கிரகாராதனையால் விசேஷ பலன் ஏற்படுமென்று நம்புவது சாத்தியமில்லை. அனைவரும் ஒருமித்து முயன்றால் காரியசித்தி யடையலாம். மதசம்பந்தமான விஷயத்தில் பெரிய தொண்டு செய்தவர்களாவோம் என்பதில் ஐயம் இல்லை. எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.



# ஆரியசித்தாந்தம்

## இல்லற வொழுக்கம்

(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)

(52-ம்-பக்கத் தொடர்ச்சி.)

அன்றியும்—

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்'

என்றார். அதாவது தீமை செய்தாரைத் தமது பொறுமையால் வெல்வதே சிறந்தது என்பதாம்.

"துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்"

என்றார். அதாவது நியாயமில்லாமற் பேசுகிறவர்களுடைய இழிவான சொற்களுக்குக் கோபியாமற் பொறுத்துக்கொள்பவர் அகப்புறப்பற்றுக்களை ஒழித்திருக்கும் துறவிகளைவிடச் சிறந்தவராவர் என்பதாம். ஆதலின் பொறுமை இல்லறத்தார்க்கு மிகச் சிறந்ததாகும். இவற்றைக்கொண்டு கணவனுக்கும் மற்றவர்க்கும் சந்தோஷத்தை உண்டாக்குகிற பெண்ணை இலட்சுமி ஸரஸ்வதி என்னலாமேயன்றிச் சாதாரணமாகப் பேசத்தகாது.

தன் கணவனாற் சம்பாதிக்கப்படும் பொருள் அற்பமாயினும் அதனை இகழாமற்கொண்டு அதற்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும். முன் செய்த கர்மத்துக்குத் தக்கபடி கடவுளாற் கொடுக்கப்பட்டது இவ்வளவே என்று மகிழ்ந்து அதுகொண்டு இல்லறம் புரிதல் வேண்டும்.

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

என்று தேவரும்—

'வருந்தி யழைத்தாலும் வாராதவாரா
பொருந்துவன போமினென்றாற் போகா'

என்று அன்னையாருங் கூறி யிருத்தலால் கர்மவசத்தால் தமக்கெனக் கடவுளால் நியமிக்கப்பட்டதே கிடைக்கும். ஆசைப்படுவதனால் அதிகம் வருவதில்லை யென்பது பிரத்தியட்சமாம். ஆதலால் உள்ளதைக்கொண்டே திருப்தியடையவேண்டும். பேராசைப்படலாகாது. ஆசைப்பட்டால் சிறந்து வாழும் பிறரிடம் பொறாமை யுண்டாகும். அதனால் பகையும் கேடும் உண்டாகும். அதுவன்றித் தரித்திரமும் வந்தடையும்.

---

" மாற்றானுக் கிடங்கொடேல் "



"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்"

என்றதனால், பிறர் பொருளைக்கண்டு பொறாமைப் படுகிறவர்களை இலட்சுமியானவள் மூதேவியினிடம் ஒப்புவித்து விட்டுத் தான் அவர்களைவிட்டு நீங்கிப் போவாள் என்றும்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்றதனால் பொறாமை யென்கிற பாவியானவன் இம்மையிலே ஐசுவரியத்தையும் கெடுத்து, மறுமையில் நரகத்திலும் தள்ளிவிடுவான் என்றும் கூறினார் தேவர்.

பொறாமை யென்பது தரித்திரத்தையும் நரகத்தையும் கொடுப்பதாதலால் அதனைப்பற்றற ஒழித்துவிடவேண்டும். தன் கணவன் சம்பாதித்தளித்த பொருள் ஒன்றானாலும் அதனைக் கோடியாகக் கருதவேண்டும். அப்பொழுது தமக்குக் கீழ்ப்பட்ட பொருள் வரவுடையாரை நோக்கவேண்டும். நோக்குங்கால் தமது பொருள் அதிகமாகக் காணப்படும்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை,
அம்மா பெரிதென் றகமகிழ்க"

என்றார் பிறரும். அப்படி நோக்கினால் பேராசையும் பொறாமையு மொழியும். கணவன் அதிகப்பொருள் தேடாமையாலும் அவன் செய்த செயலாலும் அவனிடத்திற் சினங்கொள்ளக் கூடாது.

'ஆறுவது சினம்' என்று ஔவையார் கூறினார். கணவனிடத்துச் சினங்கொண்டால் மன வொற்றுமை யொழிந்து இல்லறம் கெடும், மறுமையில் நரகத்திற்காளாக நேரிடும். 'கோபம் பாபம் பாபம் சண்டாளம்' என்கிற பழமொழியுமுண்டு. கோபம் தவத்தை யழித்துச் செல்வத்தைக் கெடுத்து நட்பைச் சிதைத்து உறவைப்பிரித்து, விரோதத்தைப் பெருக்கி நரகத்தில் அழுத்தும் இயல்புள்ளது. இது பற்றியே 'நீராக்கோபம் போராய் முடியும்' என்றார் ஔவையார். ஆகையால் தன் வேலைக்காரர், தன்னை யெதிர்த்துப்பேசச் சக்தியில்லாத ஏழைகள் இவர்களிடத்திலும் கோபிக்கலாகாது. தனக்கு மேற்பட்ட சக்தியுடைய பெரியாரைக் கோபிப்பதனால் இம்மையில் பெரியதீங்கு நேரிடும். சமானமானவனிடங் கோபங்கொண்டால் அவன் சரிக்குச் சரியான தீமைகளைச் செய்வான். ஆதலால் அவனிடமும் கோபிக்கலாகாது. எளியவரைக் கோபித்தால் இம்மையில் கெடுதியில்லாவிடினும் மறுமையில் அக்கினி நரகத்தில் விழவேண்டும். ஆதலால் ஒருவரிடமும் கோபங்கொள்ளாமல் அதைப்பற்றற ஒழிக்கவேண்டும். இதனை,

'பெரியவர் தம்மைக்காய்ந்தான் பிறங்கல் கல்வியகோ லொப்பான்
புரிவன புரியப்பட்டுப் புலம்புவனெத்தாற் காய்ந்தான்
எரிநரகத்து வீழ்வான் எளியவர் தம்மைக் காய்ந்தான்
ஒருவர்தம் மிடத்துஞ் சீற்ற முறாமையே நன்று மாதோ'

என்ற பெரியார் வாக்கினு லறிக.

ஆதலின் எவ்வகையினும் கணவனிடத்தும் மற்றவரிடத்தும் சினங்கொள்ளாம லிருக்கவேண்டும். இருந்தால் இம்மையிற் சுகங்கிடைக்கும்;

---

" இஷ்டமுண்டானால் வழியும் உண்டாகும் "

பகைவரும் நண்பராவார்; எல்லாரும் உறவாவார். மறுமையில் சொர்க்க வாழ்வும் கிடைக்கும்; தெய்வமும் அனுக்கிரகம் செய்யும்.

இவ்வாறு விலக்கப்பட்ட குணங்களை யொழித்துவிடவே களங்கமற்ற மனமுண்டாகும். களங்கமற்ற மனத்திலே தெய்வம் பிரகாசிக்கும். உருவமற்ற அந்தத் தெய்வத்தைத் தன் கணவன் சொரூபமாய்ச் சிந்திப்பதிற் பக்தி நிலை பெறும். அப்பொழுது பதிவிரதை யென்னும் பெயருக்குரியளாவள். இவளுக்குப் பதியின் பணிவிடை செய்வதைத்தவிர வேறு விரதங்களேனும் தவங்களேனும் கிடையா.

ஈசுவரனால் தனக்களிக்கப்பட்டதைக்கொண்டு உண்டு உடுத்து மகிழ்ந்து காலங்கழித்து எப்போதும் மங்களகரமாயிருப்பதே அவளுக்கு விரதம். இத் தகையாளையே 'மங்கல மென்ப மனைமாட்சி' என்று தேவர் வியந்துகூறினர். இவளிருக்குங் காலத்தில் ஒரு குறைவு மிராது.

"இல்லதெ னில்லவண் மாண்பான லுள்ளதெ
னில்லவண் மாணாக்கடை"

என்றதனு லறிக.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்",

என்றதனுற் கற்புடைய பெண்ணே பெரிய செல்வமாவாள் என்பது பெறப் பட்டது. இன்னு மவளே சங்கநிதி பதுமநிதி என்கிற நிதிபதியு மாவாள். ஏனெனில் இவ்விருநிதிகளும் இவளுக்கு ஏவற்பணிவிடை செய்யுமாதலால் என்க. இவளே கற்பகமாதி பஞ்சவிருக்ஷங்களும் சிந்தாமணி, காமதேனுக்களு மாவாள். இவள் வசிக்குமிடமே சொர்க்கமாகும்.

இப்படி பக்தியாகிய நிஷ்டையி லிருந்துகொண்டு 'இயல்வது கரவேல்' என்றபடி தம்மா லியன்றவற்றை யில்லையென்னுமல் ஏழைகளுக்குக் கொடுத்து உபசரிக்கவேண்டும். இதுவே ஈகையென்றும் கொடையென்றும் புகழப் படுவது. பொருள் முதலிய இல்லாமல் வருந்தி வந்திரப்பவர்க்குக் கொடுப்பது கொடை யல்லது ஈகை யெனப்படும். இரப்பவர் மனம் வருந்தும்படி இல்லை யென்று கூறுவதாகாது. எது கொடுக்கக்கூடியதோ அதை இல்லை என்னு மற் கொடுக்கவேண்டும். இதனையே 'தானமது விரும்பு' என்று கூறினர். அந்தத் தானம் இல்லாதவர்க்குக் கொடுத்தல், இரந்தோர்க்கீதல், உள்ளவர்க் கீதல், தாசிகள், விகடகவி, வித்தையாடிகள் முதலியோர்க்குக் கொடுத்தல் எனப் பலவகைப்படும்.

உணவிற் கில்லாமற் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறவர்களுக்கும் மானத்துக் கஞ்சி இரக்கத் துணியாமல் இருப்பவர்களுக்கும் கொடுப்பது இல்லோர்க்கீவது, தன்னிடம் வந்து இன்னது வேண்டும் என்று யாசிப்பவர் களுக் கீவது இரந்தோர்க் கீவது எனப்படும். இவை யிரண்டும் இம்மையிற் புகழும் மறுமையிற் சுகமும் கொடுப்பன. உள்ளவர்க் கீதல் பிரதி யுபகாரத்தை விரும்பி யளித்தல். ஏனைய காமத்தாற் கொடுக்கப்படுவன வாதலால் இவை நிஷ்பலன்களாகும். கடவுளின் ஆணையை முன்னிட்டுச் சங்கற்ப மில்லாமல் ஏழைகளுக்குக் கொடுப்பனவெல்லாம் மறுமைப்பயனையும் மோட் சத்தையும் கொடுக்கும். எல்லாந் தானமாய்ப் பயன் கொடுப்பனவாயினும்





அன்னதானத்துக்கு மேற்பட்ட தானமில்லை யென்று நூல்களாலும் நூல்களை யுணர்ந்த சான்றோராலும் கூறப்படுகின்றது.

இதனையே அன்னையார் 'ஐயமிட்டுண்' என்று விளக்கினர்.

"ஆறிடு மேடு மடுவும் போலாஞ் செல்வம்
மாறிடு மேறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறு முயர்ந்து"

என்றதனால் செல்வ நிலையாமையும் அதனால் சோறும் தண்ணீரும் ஏழை களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கொடுத்தால் மனக்களங்கமற்று ஞான நெறி தோன்றுமெனவும் கூறினர் அன்னையார்.

"வறியார்க்கொன் றீவதேயீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

"ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்"

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்பனவற்றால் ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் அன்னமீதலே சிறப்புடையதென்றும் அப்படிக்கொடுப்பது மறுமையி லுதவத்தக்க புதைய லாகுமென்றும் தேவர் கூறி யருளினர்.

இத்தகைய ஆப்த வாக்கியங்களால் ஏழைகட்குத் தருமம் செய் தின் மகிமை அளவுகடந்த தென்பது விளங்கும். இது செய்யாவிட் டால் இல்லறத்தாற் பயன் யாதுமில்லை. தன் சக்திக்குத் தக்கதையே கொடுக்க விதித்தமையால் இது செய்வது எல்லார்க்கும் எளிதாதல் காண்க. இல்லறத் தார் ஏழைகளுக்கு இட்டுண்ணவேண்டுமே தவிரத் தாம் பிறரிடம் யாசிப்பது கூடாது. அது அவர்களுக்கு மிகுதியு மிழிவாம். (தொடரும்.)

உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.

# தமிழ்மொழியின் பெருமை

—(o)—

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே. (பாரதி)

தமிழ் ஜனங்களுக்கு எப்பொழுதும் தங்கள் தாய் மொழியினிடத்து அளவு கடந்த காதல் உண்டு. அவ்வன்பின் மிகுதியால் அவர் அது சம்பந்தமாய்க் கூறும் புகழுரைகளுக்கும் எல்லை கிடையாது. தங்கள் பாஷையே தரணியிலுள்ள சகல பாஷைகளிலும் தலைசிறந்தது என்று சாற்றுவர்.

அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு ஆதாரம் என்ன என்று கேட்பின் பல கூறுவர். அவற்றை நன்கு கவனித்தால் அவை இருவகையாய்ப் பிரிவதை அறியலாம். ஒருவகை புராண சம்பந்தமானவை, மற்றொரு வகை இதிகாச சரித்திர சம்பந்தமானவை.

புராணக் காரணங்களை ஆராய்ந்தோம். அவை உண்மை என்று யாரும் அங்கீகரிக்க முடியாது என்று அறிந்தோம். அதுமட்டுமன்று. உண்மை என்று ஒப்புக்கொண்டாலும் அவை ஒரு பாஷையின் உயர்வை உரைக்கப் போதிய ஆற்றல் படைத்தன அல்ல என்றும் உணர்ந்தோம்.

அதன் பின் தமிழ் மக்கள் கூறும் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களை ஆராயப் புகுந்தோம். அவைகளில் வெகு பிரதானமானவை ஆறு; அவற்றுள் முதற்கண் நாம் விசாரிக்கப் புகுந்தது தமிழ் மொழியின் தோற்றகாலத் தொன்மையாகும்.

தமிழின் தொன்மையை நிலைநாட்டப் போதிய சான்றுகள் பல உள. அவற்றை ஆராய்ந்ததின் பயனாய் தமிழ் பாஷை மிகமிகப் பழமையானதே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்று முடிவுசெய்தோம். நம் முடிவை மேனாட்டு ஆசிரியர்களும் சரியென்றே ஒப்புக்கொள்வதையும் அறிந்தோம்.

இனி அடுத்ததாக ஆராய எடுத்துக் கொண்ட சரித்திர விஷயம் தமிழ் மொழி பயின்றுவந்த நாட்டின் விஸ்தீரணமாகும். தமிழ் பாஷை உலகில் தோன்றிய காலம் அளவிறந்ததாக இருப்பதுபோலவே அது பேசப்பட்டுவந்த நிலமும் அளவில் மிகப் பெரியதாகும். அவ்வளவு பரந்த நிலத்தில் வேறு எந்த



மொழியும் எந்தக் காலத்திலும் பயிலப்பட்டுவந்ததில்லை என்று தமிழ்ப் புகழாளர் கூறுகின்றனர். அவர் கூற்று உண்மைதானா என்று விசாரிப்போம்.

சென்ற வியாசத்தில் இது விஷயமாய்ச் சில கூறினேன். தற்காலம் தமிழ் மொழி வழங்கும் நிலம் தமிழ் ஜில்லாக்கள் அடங்கிய தமிழ்நாடு மட்டுமே .வேறு இடங்களுக்குத் தமிழ் மக்கள் போயிருந்தாலும் அவை அவர்கள் சாஸ்வத வாசஸ்தலமாய் இல்லாதபடியால் தமிழ் பயிலும் நாடாகாது. அதனால் தமிழ் பயிலும் மக்கள் தற்காலத்தில் சற்றேறக்குறைய இரண்டு கோடிப் பேர் மட்டுமே யாவர்.

முற்காலத்தில் தமிழ் பேசப்பட்ட நிலப் பரப்பின் அளவு யாது என்பதைப் பற்றியும் சில மொழிகள் பகர்ந்தேன். இப்பொழுது கைக்குக் கிடைக்கும் பழைய நூல்கள் சிலவே. அவை தோன்றிய பொழுது தமிழ் நாட்டின் வட எல்லை திருவேங்கட மலை, தென் எல்லை கன்னியாகுமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல். இப்பொழுதும் அநேகமாக இதுவே தமிழ் நாட்டின் எல்லைகளாக உள.

ஆகவே பழைய காலத்திலும் தமிழ் மொழி வழங்கப்பட்ட நிலம் இப்பொழுது போல மிகச் சுருங்கியதுதானோ? இப்பொழுது தமிழ் நாட்டில் இரண்டு கோடி மக்கள் வாழ்ந்தால் அப்பொழுது மிகக் குறைந்த தொகையினரே—சுமார் ஒரு கோடிக்குக் குறைவாகவே வாழ்ந்திருக்கவேண்டும் அல்லவா? அப்படியானால் தமிழ் பாஷை பயின்றுவந்த நிலப்பரப்பு மிகப்பெரியது என்று தமிழைப் புகழ்ந்து பாடும் புலவர்கள் கூறுவது தவறாகாதோ?

## குமரிக்குத் தெற்கே

இப்பொழுதுள்ள பழந் தமிழ் நூல்களில் சிலப்பதிகாரம் ஒன்று. அதை இயற்றியருளியவர் இளங்கோவடிகள். அவர் தம் காலத்தில் தமிழ் நாட்டின் எல்லை

வடக்கே நெடியோன் குன்றம்
தெற்கே தொடியோள் கடல்

என்றே கூறுகின்றார். ஆனால் அதைக் கூறுவதோடு அமையவில்லை.

சிலப்பதிகாரத்தில்

வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள

என்ற அடிகளும் காணப்படுகின்றன. அதனால் கன்னியாகுமரி முனை இப்பொழுது இருக்கிறதே அதற்குத் தெற்கே வெகுதூரம்வரை நிலம் இருந்தது என்றும் அந்நிலம் பின்னால் கடலால் கொள்ளப்பட்டதென்றும், அங்ஙனம் கடல் கொள்ளப்பட்ட பின் தமிழ் நாட்டிற்குக் குமரிக் கடல் தெற்கு எல்லையாக அமைந்தது என்றும் அறிகிறோம். கன்னியா குமரிக்குத் தெற்கே நிலம் இருந்தது மட்டுமன்று; அந்நிலத்தில் பல நதிகளும் பல மலைகளும் இருந்தன

வாம். அதனால் அது மிகச் செழிப்பானதாயும், அக்காரணம்பற்றி மாந்தர் பலர் அறிவும் ஆனந்தமும் அடைந்து வாழ்வதற்கு ஏற்றதான செல்வபூமியாயும் இருந்திருக்கவேண்டும் என்று அறியலாகும்.

சிலப்பதிகார நூலுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் என்னும் ஆசிரியர்,

"அக்காலத்து அவர் (இளங்கோவடிகள்) நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூறு காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின் பாலைநாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண காரைநாடும், ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டொழிதலாற் குமரிப் பௌவம் என்றார்"

என்று உரை கூறியுள்ளார். ஆகவே ஆதியில் குமரி முனை கிடையாது. அது இப்பொழுதுள்ள இடத்தில் குமரி நதியே இருந்தது. அதற்கு அப்பால் தெற்கே பல நாடுகள் பல்வளஞ் செறிந்து பரந்துகிடந்தன. அவை எல்லாம் கடலால் விழுங்கப்பட்ட பின்னரே குமரிமுனை என்பது ஏற்படலாயிற்று. குமரி நதிபோய் குமரிக் கடல் தோன்றிற்று.

இளங்கோவடிகள் அறியாது கூறுவர் என்று அலட்சியம் செய்துவிட இயலாது. அவர் சேரநாட்டு அரசிளங்குமரர். அதனால் அவர்க்குத் தம் நாட்டின் எல்லைகளைப் பற்றி நன்கு தெரியும். பல நூல்களைப் படித்திருப்பர், பல பெரியோர்களிடம் கேட்டிருப்பர். பல பழைய அரசசாஸனங்களை ஆராய்ந்துமிருப்பர். அதனால் அவர் கூற்று உண்மையே என்று துணிய நமக்கு உரிமை உண்டு.

அம்மட்டோ? மேலே கூறப்பட்ட செய்யுளில் காணப்படும் பஃறுளி யாறு, குமரி யாறு இரண்டின் சம்பந்தமாக புறநானூறு என்னும் பழந்தமிழ்ச் செய்யுட் தொகுதியினும் சான்றுகள் உள.

எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

இப்புறப்பாட்டு அடிகள் நெட்டிமையார் என்னும் கவிஞர் பாண்டியன் பலயாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் புகழ்ந்து பாடிய பாடலில் காணப்படுவன. அதில் பஃறுளி யாறு வடிம்பலம்ப நின்ற பாண்டியனால் காணப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க.

---

"கடவுள் வழிபாடும் சுதந்தரம் அடையவே"



வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்

என்ற புறப்பாட்டு வரிகளுக்கு உரை கூறுமிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர்

"தெற்கின் கண்ணது உட்குப் பொருந்திய கன்னியாற்றின் தெற்கும்"

என்று கூறியுள்ளதால் தெற்கே குமரி நதி இருந்தமை தெளிவாகும்.

அதுபோலவே பனம்பாரனார் தொல்காப்பியப் பாயிரத்தில்

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று கூறியிருக்கிறார். அதாவது "வடக்கே வேங்கடமும் தெற்கே குமரியாறும் எல்லையாகவுடைய தமிழ் பயிலும் நல்லுலகம்" என்று பொருள்படும். இப்பொருள்படவே இளம்பூரணரும் உரை எழுதியுள்ளார்.

இவற்றிலிருந்து தமிழ் பயின்றுவந்த நாடு முற்காலத்தில் இப்பொழுது போல் குமரி முனையோடு முடிவுறாமல், தெற்கே நெடுந்தூரம் வரை எட்டியிருந்தது என்றும், அங்ஙனம் அக்காலத்தில் அகன்று கிடந்த நாட்டில் பனை நாடு முதலிய நாடுகளும் குமரிக்கோடு, மணிமலை முதலிய மலைகளும், முத்தூர் கபாடபுரம் முதலிய நகரங்களும் பஃறுளியாறு, குமரிநதி முதலிய நதிகளும் இருந்தனவென்றும் அறிகின்றோம். (செங்கோன்றரைச் செலவு என்னும் சிறு நூல் மணிமலை முத்தூர் முதலியவைகளைப் பற்றிக் கூறுகின்றது.)

இங்ஙனம் தெற்கே வெகு தூரம் வியாபித்திருந்த தமிழ் நிலம் பின்னர் குமரி முனை வரைக் கடலால் கொள்ளப்பட்டது என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. மேலே எழுதிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரச் செய்யுளையும், இறையனார் அகப்பொருளில் காணப்படும்

"தலைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப........இடைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டது"

என்னும் வாக்கியங்களையும் நோக்குக.

மேற்கூறியபடி கொடுங்கடல் கொண்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன? எழுநூற்றுக் காவதம் என்று ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரையால் தெரிகின்றது. ஒரு காவதம் என்பது பத்துமைல். ஆகையால் எழுநூறு காவதம் ஏழாயிரம் மைல்களாகும்.

இங்ஙனம் குமரி முனைக்குத் தெற்கே விரிந்து பரந்து கிடந்த நிலத்தின் அளவையும், தற்காலத்தில் குமரிக்குத் தெற்கே காணப்படும் இந்துமகா சமுத்திரத் தீவுகளின் தூரத்தையும் வைத்து பண்டிதர் சூரியநாராயண சாஸ்திரியார்

பழைய காலத்தில் குமரி நாடு நீளத்தில் இக்காலத்திலுள்ள குமரி முனையிலிருந்து கெர்கியூலன் தீவின் தெற்கு வரையிலும், அகலத்தில் மடகாசிகர் தீவுமுதல் சுமாத்திரா ஜாவா முதலியவற்றை உள்ளடக்கிய சந்தாத் தீவுகள் அளவும் விரிந்து கிடந்தது

என்று தீர்மானிக்கின்றார்.

---

"ஒருகாசு பேணின் இருகாசு தேறும்"

> இந்த சமுத்திரம் முன்னொரு காலத்தில் ஒரு பெருங்கண்டமாக இருந்தது. அது சந்தாத் தீவுகளில் துவக்கி ஆசியாவின் கரை வழியாகச் சென்று ஆப்பிரிக்காவின் கீழ்க்கரை வரையில் எட்டியிருந்தது. இப்பெரிய கண்டம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் மனித ஜாதியின் உற்பத்தி ஸ்தானம் அதுவேயாய் இருந்திருக்கலாம்

என்று ஹேக்கல் பண்டிதர் கூறியுள்ளவை சாஸ்திரியார் அபிப்பிராயத்தை வலியுறுத்தும்.

ஆகவே தமிழ்மொழி ஆதியில் தெற்கே வெகு தூரம் வழங்கப்பட்டு வந்தது என்று அறிகின்றோம். அதுபோலவே வடக்கிலும் வெகு தூரம்வரை பயிலப்பட்டு வந்தது என்று கூறமுடியும். அதற்குரிய சான்றுகளை அடுத்த வியாசத்தில் ஆராய்வோம்.


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

தெலுங்குப் பதிப்பு.

—(o)—

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனாம்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0

வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.


"இல்லாதவன் பொல்லாதவன்"

# — குருநானக் —

(ஸ்ரீமான். எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.)

பழையபுராணங்களொன்றில் ஒரு சிறு கதையுண்டு. "சீரழிந்த உலகத்தைச் சிறைமீட்கவும், ஆஸ்திகளைப் பராமரிக்கவும், ஞானவொளியைப் பரப்பவும் ஒரு புதிய சூரியன் உதிக்கப்போகிறான்" என்ற வதந்தியொன்று முன்னம் உலவியது. அக்காலத்திலிருந்த அரசர் முதலான அனேகரும் அதனை உண்மை யென்றே நம்பினர். அக்கதையை உண்மையென நாம் நம்பினாலும் நம்பாவிடினும், அதனுள் பொதிந்துள்ள ஞானசூரியன், யுகங்கள்தோறும் உதிக்கிறான் என்பது முக்காலும் உண்மை. தர்மங் குறைந்து ஒழுக்கம் தொலைந்து, அதர்மம் ஓங்கி, உலகம் தலை கீழாகப் போகும்போதெல்லாம், ஞானசூரியர் பலர் உதித்திருக்கின்றனர்.

அத்தகைய சூரியன் ஒருவன் இந்தியாவின் நிலைமை பரிதபிக்கத் தக்கதாயிருந்த ஒரு காலத்து உதித்து உயிர்வழங்கி யிருக்கிறான். தற்காலம் 'நான்கானா' என்றழைக்கப்பெறும் அவந்தி என்னும் நகரில் சீக்கிய குலதிலகமான குருநானக் என்னும் மகான் பதினைந்தாம் நூற்றாண்டிலே அவதரித்தார். இளமைப்பருவம் முதற்கொண்டே தான் ஏழையென்றும், பிறருக்குப் பணியாளனென்றும் அவர் சொல்லிக்கொள்வார். சிறு பிராயமுதல் பிறருக்கு உதவிசெய்யும் பரோபகார சிந்தை யுள்ளவர் அப்பெரியார்; அவரது நாட்டமோ வரவர மேல்நோக்கியே சென்று வந்தது. அவர் தாம் செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் சீர்தூக்கிப் பார்ப்பார். கடவுளின் வழிபாட்டுக்குச் சாதகமாகுமா? ஜனசமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பயன் படுமா? மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்டுமா? என்பதே அவரது சீர்தூக்கும் கோலாகும்.

சைவசமயகுரவர் நால்வரைப்போலவே குருநானக் தம்மை அடியார்க்கு அடியனென அழைத்துக்கொண்டார். அவரது சிந்தையும் மனமும் எந்தக் காலத்திலும் பரந்தாமன் பொருளைப்பேணி நின்றது. அவரது வாலிப வயதில் ஒரு விசேஷ சம்பவம் நிகழ்ந்ததாக விரித் துரைக்கப்படும். அது பின் வருமாறு:—ஒருநாள் குருநானக் நீராட கங்கைக்குச்சென்று, நீரில் மூழ்கி நின்ற தருணம் தேவகணங்கள் வந்து, அவரை அப்படியே பரந்தாமன் சந்நிதிக்குத் தூக்கிச் சென்றனர். ஸ்நானம் செய்யச்சென்ற குரு வருவார் வருவாரென வழி பார்த்திருந்த பணியாளன், வெகுநேரமாகியும் அவர் வாராததுகண்டு, விரைந்தோடித் தன் தலைவனுக்கு விரித்துரைத்தான். அத்தலைவனும் சில ஆட்களைத்தேடி யனுப்பி ஆராயச் செய்தான். குருஜி எங்குமே காணப்படவில்லை. நிற்க, நானக் என்பாரைப் பரமன் சந்நிதானத்தில்

நிறுத்தியதும் தேவர்கள் மறைந்து விட்டனர். பிறகு அப்பரம்பொருள் அவருக்குச் சாவாமருந்தெனும் தேவாமிர்தம் தந்தருளி, "பக்த! உன்றனது பக்திக்கு மெச்சினேன். எமது பேருளை நீ பரிபூரணமாகக் கிடைக்கப் பெற்றமையால், கிருதார்த்தனானாய்! கவலையொழிக! இன்று முதல் உன்னை உலகப்பற்றறுத்து வாழும் உத்தமகோஷ்டியில் சேர்த்தாயிற்று. உலகங்களுய்தற்பொருட்டு உண்மைப் பொருளை விளக்கவேண்டி, உயிர்க்கும் சுடரொளியாகி நின்று, நின்கடனைச் செவ்வனே கழித்துக் கடிதில் என் கழலிணையின் பக்கம் வருக," என்றேவி மறைந்தனர். அவ்வாணைக் கிணங்கியே குருநானக் தமது ஆயுட்கால முழுவதையும், அடியார்களுக்குத் தொண்டு புரிவதில் அர்ப்பணம் செய்யத் துணிந்து வெளியேறினர்.

## தேச சஞ்சாரம்

தாய் தந்தையர் அவரை யடுத்தடுத்துத் தடுத்தும், அதனை அவர் பொருட்படுத்தவில்லை. தாம் கடைப்பிடித்த உண்மையை எங்கணும் பரவச்செய்யும் பொருட்டும், சத்தியத்தை நிலைநாட்டி, சாந்தியைப் பரவச்செய்து, சமூகச் சீர்கேட்டை நேர்மைப்படுத்தும் கருத்துடனும், அவர் பிறநாடுகளுக்குப் பிரயாணமானார். ஹிந்துவென்றும், முஸ்லிம் என்றும் மதவித்தியாசம் பாராட்டாது, அவர் கோயில் குளங்களுக்குச் சென்று, நித்தியமாய் நின்ற தத்துவப் பொருளின் உண்மையை விளக்கிக் காட்டினார். யோகிகள் நிறைந்த கானகத்தினுட்புக்கு, நியம நிஷ்டையின்றி உடலைப்பேணித் திரியும் கேவலம் ஸ்தூலமான யோகாப்பியாசம் மட்டுமே தனிப்படப் பயனளிக்க வல்லதன்றென்றும் போதித்து வந்தார். இந்துஸ்தானம் முழுவதும் அவர் சுற்றித் திரிந்தார். சிந்துநதி தீரஞ் சார்ந்து, அவர் சாந்தோபதேசஞ் செய்தருளினார். பின்னர் தென்பால் வந்திருந்தார். பிறகு வடக்கே காச்மீரம், காபூல் முதலிய மலைப்பிரதேசங்களுக்குச் சென்றார். காடும் மலையும் கடிதில் கடந்து, சீனதேசத்தையும் சுற்றி வந்தார். துருக்கி தேசத்திற்கும் விருப்பமுடன் ஏகினார். மேற்கெல்லையின் மணிவிளக்காய்த் திகழ்ந்து நின்ற ரோமாபுரியும் அவரது பாதம்படப் பெரும்பாக்கியம் படைத்திருந்தது என்னலாம். அவர்தம் கொள்கைகளின் புத்துணர்ச்சி ஒவ்வோரிடத்தும், அவர்தமக்கு முற்பட்டுச் சென்று உலாவியது.

தாம் சென்ற விடமெல்லாம் தம்மைப்பற்றி அவர் சிறிதும் பெருமையாகப் பேசிக்கொள்வதில்லை. இறந்தவரை உயிர்ப்பித்தல் முதலான அஷ்டமாசித்திகளில் கைவல்யனென்றாவது, அதர்வணவேதத்தின் கரைகண்டவனென்றாவது கூறிப் பயமுறுத்திச் சீடர்களைச் சேர்க்கவில்லை; பெரியோர் தமக்கே உடன் பிறப்பாகும் அடக்கமும் ஒடுக்கமும் ஒருங்கே கொண்டார்; கடவுளின் கருணைக்குப் பாத்திரனாக ஏழைபோல் தாமுமொரு ஏழையென்றும், அவரது பேருளைப் பெறாத படுபாவிகளில், தாமுமொரு பாவியென்றும், அஞ்ஞான இருளையகற்றாத அந்தகரில் தாமுமொரு குருடரென்றும் தாழ்வுடன் கூறித் திரிந்தார். ஆயினும், அவரை யடுத்தவரில் யாவரே, அவரது இன்மொழியின் தீஞ்சுவையைச் செவிமடுக்கும் ஆநந்த மெய்தாதார்? ஒருமுறை செவியேற்றார் அம்முறையே அவரடி பணிவார்!

அவரது முதுமொழிகள் ஒவ்வொன்றும் அமுதம் பொழிவதாயிற்று; வார்த்தைகளொவ்வொன்றும் வாசகமாயிற்று. செப்புவன ஒவ்வொன்றும் செப்பேட்டில் பொறிக்கத் தக்கதே. அவருடன் உரையாடின் அனுபவ



ஞானத்தை யறியலாம். சாந்த நிலையும் இன்பவாழ்வுமே அவருடன் குடிகொண்டிருந்தன. சமய சமரஸமே சதா அவர் போதிப்பது.

"அவரது நற்போதனையைக்கேட்ட பின்னரே எனக்கு மனச்சாந்தி யேற்பட்டது. கடவுளை வழிபடும் நற்சிந்தையும், மதப்பற்று முண்டாயது" என்று ஒருசீடர் அவரைப்பற்றிச் சிலாகித்துக் கூறி யுள்ளார். அவர் திருவாயினின்றும் பிறக்கும் சிறுவாக்கும் பொருளில் பெருவாக்காய்ப் பாந்தியங்கும். அவரது வாய்மொழிக்கே நவசக்தி பிறத்தல் இயற்கை போலும்! அதனால் இவர், தம் பகைவரையும் எளிதில் வெல்லும் திறத்தரானார்.

மற்றும், இவர்தம் வாக்கினுக்கு மிக்க மேன்மையுண்டு. அவரது வாக்குக்கு இயற்கையாலமைந்த வசீகரத் தன்மையால், ஹிந்து, முஸ்லிம் என்ற இருமதத்தினரில் பலரைத் தமக்குச் சீடர்களாகச் சேர்த்துக்கொண்டார். மகம்மதியத் துறவியான மூஜாமிதனென்பான், முதன் முதல் அவருக்குச் சீடனானான். துணிசந்தன் என்னும் செல்வம் நிறைந்த காசிப்பிராமணனொருவன் அவருக்குச் சீடனாகிய பின், தமது லக்ஷக்கணக்கான பொருளனைத்தையும் வேண்டுபவர்க்கெல்லாம் வாரி இறைத்தான். ஷேக்பரீத் என்னும் மற்றொரு முகம்மதிய சகோதரனும் அவருக்கு நண்பனானான். இந்துக்கள், குரு நானக்கை ஈசுவரனது அவதாரமென்றும், முகம்மதியர் அவரை அல்லாவின் பேருட்பிரகாசவள்ளலென்றும் பேசிப் புகல்வாராயினர். மற்று நம் குருஜியோ மௌனம் சாதித்தார். தமது கடமையைச் செலுத்துவதிலேயேதாம் கண்ணோக்கமாயிருந்தார்.

## வேந்தும் துறவியும்

ஒரு சமயம், மொகலாய அரசை நிலை நாட்டின பேபர் சக்கரவர்த்தி நமது குருஜியைப் பார்த்து, "உமக்கு வேண்டிய வரத்தைக்கேள்; யான் இப்பொழுதே உமக்களிக்கக் காத்துளேன்" என்று கூறியபோது, துறவிக்கு வேந்தன் துரும்பெனக் கொண்ட திடசித்தத்தால், "சக்கரவர்த்தியாயினும் என்? அவனிடம் துறவி யொருவன் கையேந்தி நிற்பனேல், அவனைவிட அறிவிலி ஒருவனுமில்லை என்பதே எமது துணிபு. ஏனெனில், என் போன்றோர்க்கு இறைவனே தாதா. அவனே எமது குறைதீர்க்கவல்ல வள்ளலாவான்" என்றார்.

மற்றுமொரு முறை வினவியபோது, அவர் அவ்வேந்தனுக்கு என்ன பதிலளித்தார்? "ஐயா! நீர் கொடையாளி என்கின்றீர். உண்மையில் யான் தேடும் பொருளை நீர் அளிக்க வல்லீரேல், எனக்கும் பெறச் சம்மதமே. அடியேன், கடவுளைக் காணாத காரணத்தால், ஆறாவிரக நோய்ப்பட்டு அகமிக மாழ்குகின்றேன். அடியேற்கு அவர் தம் இணையடியைத் தந்தால் அதுவே எனக்குப் போதும்" எனப் புகன்றார். அரசு என்ன பதி லளிக்கும்?

கடவுளிடத்து ஒருவனுக்கு உண்மையில் பக்தியுண்டென்பது, அவன் ஜீவராசிகளிடத்துக் காட்டும் தயையில், புரியும் கருணையில், செய்யும் உதவியில் அல்லவோ பரிமளிக்கும்?

## சீக்கிய நற்போதம்

குருநானக்கின் நற்போதனைகளின் சூட்சுமமென்ன? ஒரு நற்போதனை சிறந்ததா, இல்லையா என்பது அதன் ஆடம்பரமற்ற தன்மையிலன்றோ விளங்கும்? சிறந்த கொள்கை எப்பொழுதும் எளியதாயும், ஒழுக்கத்தை ஒட்டியும்,

உலக அனுபவத்தைத் தழுவியு மிருக்கும். குருஜியின் போதனையும் இத்தன்மைத்தே; ஆகையால் சாமானிய ஜனங்களும் எளிதில் உணரக்கூடிய போதனையா யிருப்பதோடு, அவை உட்பொருள் விசேஷத்தாலும் மிகச் சிறந்தவற்றுள் சேர்த்துப் போற்றற்பாலனவாகும். 'சத்தியம்' என்பதே அவர் சொல்வாக்கின் சூத்திரம். ஆகையால்தான் அவர் தம் மதக்கொள்கையிலும், போதனைகளிலும் உண்மை வழிபாட்டை வற்புறுத்திக் கூறியுள்ளார்; வெளிப் பார்வைக்குத் தோன்றும் மதச் சின்னங்களை அணிவதால் மட்டுமே ஒருவன் அம்மதத்தின னாகமாட்டா னென்பதே அவர்தம் துணிபு. இதனைப் பசுமரத்தாணிபோல் அக்காலத்திலிருந்த அனைவருக்கும் போதிக்க வேண்டியே அரும்பாடு பட்டார். வழிபடுவதில் "உண்மை"யிருக்க வேண்டும் என்பதே அவரது கொள்கை. எம்மதத்தி னாயினும் உண்மையாக வழிபட்டால் பலன் பெறலாம். ஏனெனின் வழிபடுதல் ஒருவகையில் உள்ளத்தைப் பொறுத்தது. உள்ள நெகிழ்வு தோன்றாதொழியின், மந்திரத்தாலும் தந்திரத்தாலு மாத்திரமே ஒருவன் உண்மைச் சமயத்தவ னாகான் எனத் துணிந்து புறச்சமயிகள் கொண்ட மூடநம்பிக்கையை வேரறக் களைந் தெறிந்தார்.

## மசூதியில் நிகழ்ந்த சம்பவம்

ஒரு நாள் மிக்க அசதியால், மசூதி யொன்றினில் போய்ப் படுத்தார். உடனே குரு நானக் தமது கால்களைக் கோயில் புறத்தே நீட்டியதைக் கண்ட வாயில் காப்பானொருவன் விரைந்தோடிவந்து, காலால் உதைத் தெழுப்பி, அவரைப் பார்த்துக் கோயில் புறமாகக் காலை நீட்டிப் படுத்திருப்பதின் காரணத்தை வினவி, "இது கடவுளின் ஆலயமன்றோ? இவ்விடத்தில் அபசாரப் படலாமா?" என்றதட்டினன். அதற்கு குரு "ஐயா! தயவுசெய்து என்மீது கோபிக்க வேண்டாம். அயர்வால் மெலிந்து நித்திரை போயினேன். தயவு செய்து கடவுளில்லாத இடத்தைக் காட்டினால் அப்பக்கமே காலை நீட்டிப் படுக்கக் காத்துளேன்; எளியனேன் பிழையைப் பொறுத்தருள்க" எனப் பணிவு பொலியப் புகன்றார்.

## காசிப் பிராமணனுக்கு மதியூட்டியது

'காசி நகர் சென்று அங்கிருந்த காலத்து, கர்ப்பக் கிரகத்திலுள்ள கற்சிலையைக் கழுவி நிற்கும் காசிப் பிராமண னொருவனுடன் வாதாடி, "அக் கருங்கல்லைக் கழுவுவதினும், உமது மனக் கல்லைக் கழுவினால் பலனுண்டாகும், ஆத்தும சுத்த மின்றி ஆயிர முறை கல்லைக் கழுவுவதால் காணும் பயன் யாது?" என்றுரைத்துச் சென்றார்.

குரு நானக்குக்கு எக்ஞோபவீததாரணம் நடந்த காலத்தில் ஓமவேதியர், "இது மட்டு மின்றி மற்றொரு பூணூலும் உனக்கு உண்டு. அதையும் நீ தரிக்கவேண்டும்" என்று கூற அதற்கு குருநானக் சொல்வார், "அதனிலும் மேலான நூலொன்றுண்டு. அதுவே உலகத்திலுள்ள ஜீவராசிகளனைத்தையும் கட்டுப்படுத்தும் அன்பெனும் பாசக்கயிறு. இவ்வன்பு இடத்துக்கும், பொருளுக்கும் ஏற்ப தயையென்றும், அருள் என்றும், நட்பு என்றும், பொலியா நிற்கும். இப்பூணூலுக்குக் காருணியமே பஞ்சாம். வாய்மையே அதற்கு வாய்த்த முடி, இப்பாசக் கயிறு இறுகுவதே இல்லை. கெடுவதுமில்லை, எரிவதேயில்லை, மறைவதுமில்லை." ஜன சமூகத்தின் ஒற்றுமை அத்தியாவசியமென குருநானக் பன்முறை போதித்துவந்தார்.



'பாய்' அதாவது, 'சகோதரன்' என்பது சீக்கியர் ஒவ்வொருவரும், போற்றும் பெரும்மதம். ஆண்டி முதல் அரசர் பெருமான் வரையிலுள்ள அனைவரையும் அவர்கள் "பாய்" எனவே அழைப்பர். ஏனெனில் நம்மைப் படைத்த பரமன் ஒருவரே. ஆகையால் அவரே நம் பிறப்புக்குக் காரணம், அவர் வயிற்றில் பிறந்த நாமனைவரும் சகோதாரன்றோ? அதனால் ஜாதி வித்தியாசம் நம் குருவினிடம் கிடையாது. ஏழை எளியவர்களோடும், திக்கற்ற தீனரோடும் தாராளமாய் இவர் கலந்து காலங்கழிப்பார். செல்வர்கள் பெரியோரை வரவேற்பதெல்லாம் அவர் தம் பெருமையைப் பெருக்கிக்கொள்ளுதற்கே என்பது அவரது நம்பிக்கையாகும்.

## சமய சமரஸம்

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா விதுரர் வீட்டில் அமுதுண்ணச் சென்றதுபோல், குருநானக்கும் 'லாலு' என்னும் ஏழைக் குடியானவன் ஒருவனது வீட்டில் உண்டி ஏற்றிருக்கிறார். ஏழை யென்றும், பணக்காரனென்றும், உயர் குலத்தானென்றும், தாழ்ந்த வகுப்பினனென்றும், ஹிந்து வென்றும், முகம்மதியனென்றும், வகுத்துப் பாகுபாடுசெய்யும் மதமே பாவமாகும். அனைவரையும் ஒரு வயிற்றிலுதித்த பல மக்களாகப் பாவித்து அனைத்தையும் காத்தருளல் கடமையாகும். ஜன சமூகத்தின் ஒற்றுமையைக் கெடுக்கவல்ல செய்கையே பாவமாகும் எனப் போதித்துவந்தார். அதனை வலுப்படுத்தப் பிறந்த அம்மகான் இரண்டிற்கும் பொதுவான உண்மைகளை இங்ஙனமே உரைத்துவந்தார். இரு மதத்தினருக்கும் கடவுள் ஒருவரே உண்டென்றும், அவரை வழிபடுவதாயின், சிருஷ்டியிலுள்ள சீவராசிகளிடம் நாம் காட்டும் தயையும் அன்புமே தக்க வழி யாகுமென்றும், தொண்டு புரியும் அடியார்களது குழாமே மதமாகுமென்றும் போதித்துவந்தார். அவர் முகம்மதியரையும் இந்தியரையும் பக்ஷபாத மின்றிப் பார்த்துவந்தார். முகம்மதியரைப்போல் அவர் மசூதிகளில் சென்று கடவுளை வழிபடுவார். இந்தியரைப்போல் கோயில்களுக்குச் சென்று அவ்விடத்தும் கடவுளைத் தொழுவார். அவர் "மக்கம்" சென்றிருந்தபோது அங்கே, "நீ இந்தியனா, முகம்மதியனா" என்று ஒருவர் வினவ, நான் ஹிந்துவுமன்று, முகம்மதியனு மன்று" என்றார். கடவுளை அவ்விரண்டு வழியாலும் அவர் கண்டு கொண்டவராதலால் ஹிந்துவாயினு மென்? முகம்மதியனாயினு மென்? இவ்விரு மதத்தில் மேலானது யாதெனக் கேட்க, "எம்மதம் நல்வழி போதிப்பதோ அம்மதமே எனக்குச் சம்மதம்" என்றார். அல்லாத வழிகளைப் பின்பற்றும் மதத்தினர் அற்றுப்போவ ரென்பதே தமது துணிபு என்றும் தெரிவித்தார். அப்பெருமான் ஜாதி வித்தியாசத்தைக் கடந்த ஞானியாகையால், ஹிந்துவும், முகம்மதியனும் ஒருவராகவே அவருக்குக் காணப்பட்டனர். பாக்தாது நகரத்துக்குச் சென்றிருந்தபோதும், அவரது மதத்தைப்பற்றி வினவ, "கடவுள் ஒருவரே உண்டென்ற மதமே எமது மதம், இதைத் தவிர வேறு மதத்தை யான் தழுவவில்லை. "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசிக்கும்" கருணை வள்ளலான அவரையே யான் கனவிலும் கருதி நிற்பவன்" என்றார்.

"மர்தனா" என்னும் முகம்மதிய னொருவனும் இவருக்குச் சீடனானான். அவன்மீது வைத்த அன்பினால், அவனைப் பன்முறை ஏட்டிலும் போற்றியுள்ளார். ஜாதி வித்தியாசம் பாராட்ட வேண்டுவதில்லை யென்று அவர் தம் சீடர்களுக்கு அடிக்கடி உரைப்பது வழக்கம். அவர்தம்மைத் தோத்திரம்

செய்வாரும் அத்துணையே. எத்தனையோ வீரர் அவர்தம் பக்தராவர். "வீணைக்கண் பிறக்கும் கானங்களை யொப்ப, அப்பரமனது பேரன்பைப் புகழும் பக்த கோடிகளும் பலரே" என்றும் கூறியுள்ளார். மற்றொரு சாதனமும் அவர் காட்டியிருக்கிறார். முதல் சாதனமாவது, சமூகசேவை. அதாவது, அடியார் புரியுந் தொண்டு. இதனை அவர்தம் அனுபவபூர்வமாய்க் காட்டியுள்ளார். பிரசாரத்தின் பொருட்டு நாடுகளனைத்தும் சுற்றித் திரிந்தபோது, ஓரிடத்தில் தக்ஸ் என்னும் பகல் கொள்ளைக்காரரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்தமக்காகத் தாமும் அவருடன் சிறைவாய்ப்பட்டு அவர்தம் தீய குணங்களை யொழிக்கப் பெரும்பாடுபட்டார்.

### சீக்கிய தியாகம்

சேவையின் மேன்மையைக்கு நித்து அவர் தமது சீடர்களுக்குப் பசுமரத்தாணி யடித்தாற்போல் இடித்துக் கூறினதால், அவர்களும் அதனுக் கேற்ப, சமயம் வாய்த்தபோது, தமது உயிரையும் கொடுத்துக் காக்கப் பின்வாங்கவில்லை. சிஷ்யர்களாகும் போதே, "யான் சத்திய மொன்றையே என்றும் நம்புகிறேன். இடையூறு பல நேரிடினும் அதனைக் கைவிடாது காத்தல் என் கடமையாகும். அதற்காக எனது உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணம் செய்யக் காத்திருக்கின்றேன்" என்று விரதம் கொள்ளுகின்றனர். அவர்களுக்கு இறத்தலே உண்மை. இருத்தலே மாயையாம். மற்றொரு சாதனமாவது பக்தி. இது உள்ளநெகிழ்ச்சியின்பாற்பட்டது. தாமரைத் தண்ணீரையே நம்பி நிற்கும் பூவேபோல் நானும் உன்னையே நம்பி நிற்கிறேன். அம்மலர் அலைகளால் மோதப்படினும் அதனைப் பொருட்படுத்தாததுபோல், மனவருத்தம் யாவும் எனக் கிரட்டித்தாலும் அந்நீரேபோல் அதற்கு உயிர் வழங்கி, மற்று அந்நீர் வற்றியக்கால் அம்மலரும் வாடுவதைப்போல் எந்தனுக்கு இன்னுயிரளித்துக் காத்த உன்னை யன்றி வேறு அடைக்கலம் உண்டோ? அவ்வருத்தங்கள் மிகினும், அவையனைத்தும் என்றன் அன்பைப் பெருக்குமேயல்லாது குறைக்க வல்லனவன்று. உனது அன்பு எனக்கில்லை யென்றுணர்வேனுகில், எனதுள்ளம் உருகும், மனம் பதைக்கும் என்செய்வேன்" என்று கதறியிருக்கிறார்.

அவரது வாழ்நாட்களில் நிகழ்ந்த சம்பவத்தை நினைவுக்குக் கொணர்ந்தால், முதன் முதலாக அவருக்கு வாய்த்த சீடர்களில் ஒருவராகப் பிறக்கும் பாக்கியம் கொடுத்துவைக்க இல்லையே என்று யாரும் ஏங்கி மன மிளகுவர். அவரது அமுத மொழிகள் இன்றும் உலகில் நின்று நிலவுகின்றன. அவரது உடலம் மரித்துப்போயினும் அதனுள் பொலிந்த சூத்திரப் பாவை இன்றும் நம்மை ஆட்டிவைக்கின்றது.

இருளே உலகத்தியற்கை. இவ்விருளை யகற்ற ஒளியே நந்தமக்கு இன்றியமையாதது. நாகரிகத்திற்கும் இது ஒரு நற்குறியாகும். ஒளியென்பது ஜீவராசிகளிடம் அன்பு காட்டும் பெரியார் மூலம் புலனாகும் பரம் பொருளின் ஞானமே. அத்தகைய பெரியோர்களில் ஒருவராய்த் திகழ்ந்த நந்தம் குருநானக் கென்போர் ஆயுள்காலமெல்லாம் செலவிட்டு, அளவிறந்த பாடும்பட்டு, நிலைநாட்டிய சீக்கிய மதம் பயனற்றுப் போகவில்லை. மற்றும், உலகம் போற்றும் ஒப்பற்ற தியாகிகளையும், வீரரையும், குருமார்களையும், பக்த சிரோமணிகளையும் பெற்றுப் பொலிகின்றது.

# மாதர் உலகம்



## டாக்டர் பெஸன்ட்டம்மையார்

(ஸ்ரீமதி. ரங்கநாயகி.)

"பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி."

என்ற கவியின் திருவாக்குக்கு எடுத்துக்காட்டாக இலங்குபவர் டாக்டர் அன்னிபெஸன்ட்டம்மையாராவர். இவ்வம்மையார் தற்கால உலகப் பேரறிஞருள் ஒருவராக விளங்குகிறார். பாரத அன்னைக்கு அன்னிபெஸன்ட்டம்மையார் ஆற்றிவரும் திருத்தொண்டின் பெருமை அளவிடற்கரியதாகும். இவ்வம்மையார் கல்விக் கடல்! கலைமகள் அவதாரம்! தத்துவ பொக்கிஷம்! சர்வ மத ஊற்று! ராஜதந்திர ஞான சொரூபம்! இம்மாதர் மணியின் வரலாற்றைச் சுருக்கிக் கீழே கூறுகின்றேன்.

1847-வது ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியில், லண்டனமா நகரில், அன்னிபெஸன்ட்டம்மையார் அவதரித்தருளினர். இவருடைய தந்தையார் ஒரு வைத்தியர். ஆனால் இவர் சாதாரண வைத்தியரைப்போலல்லாமல் தத்துவ சாஸ்திரத்திலும், இலக்கியப்பயிற்சியிலும் மிகவும் புலமை வாய்ந்திருந்தார். பெஸன்ட்டம்மையாரின் அன்னையார் கல்வி யறிவு நிறைந்தவரல்லர். எனினும் அந்த அம்மை தம்முடைய நற்குண நற்செய்கைகளால் எல்லாருடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினர். பெஸன்ட்டம்மையார் தமது சுய சரிதத்தில் தம்முடைய அன்னையாரின் அரும் பெருங் குணங்களை விசேஷமாகப் புகழ்ந்து நன்றி பாராட்டியிருக்கிறார். தாய் தந்தையர் மிகுந்த தனவந்தராக இல்லாதிருந்தமையால் பெஸன்ட்டம்மையார் பெரிய கல்லூரிகளிற் சேர்ந்து கல்வி கற்கக்கூடிய நிலைமை வாய்க்கப் பெறாதிருந்தார். மிஸ் மேரியட் என்பவர் பெஸன்ட்டம்மையாருக்கு முதன் முதலில் கல்வி கற்பித்தார். அந்த அம்மையால் பெஸன்ட்டம்மையாருக்கு ஆங்கில—பிரெஞ்சு—ஜர்மனி மொழிகளில் பயிற்சி உண்டாயிற்று. தம்முடைய ஆசிரியரைப்பற்றி தம் சுய சரிதத்தில் பெஸன்ட்டம்மையார் இவ்வாறு கூறியிருக்கிறார். "அந்த அம்மையாருக்கு நான் செலுத்தவேண்டிய கடமைகள் ஏராளம். அவை

"பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போம்"

சொல்லுக் கடங்கா. எனக்குக் கற்பித்த கல்விக்கும், எனக்கு உண்டாக்கிய கல்வி வேட்கைக்கும் நான் அந்த அம்மையாருக்குத் தலைவணங்கி நன்றி பாராட்டுகிறேன்." மிஸ் மேரியட் அவர்களோடு பெஸன்ட்டம்மையார் பிரான்சு, ஜெர்மனி நாடுகளுக்குச் சென்று அவ்விடங்களிலுள்ள நகரங்களை யெல்லாம் பார்த்தார். பின்னர் இரண்டு ஆண்டுகள் வரை தம்முடைய தாயாரோடு லண்டன் நகரிலேயே வசித்துவந்தார்.

1866-வது ஆண்டில் பெஸன்ட்டம்மையார் ஒரு மிஷனரியைத் திருமணம் செய்து கொண்டார். 1869-வது ஆண்டில் ஒரு மகனையும், அதற்கு அடுத்த ஆண்டில் ஒரு மகளையும் பெற்றார். ஆனால் இவருக்குக் குடும்பவாழ்க்கையில் வர வர வெறுப்புத் தோன்றிக்கொண்டே வந்தது. தவிர, மத விஷயங்களில் சதிபதிகள் இருவருக்குள்ளும் முரண்பட்ட எண்ணங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. அப்போது இங்கிலாந்தில் படித்த வகுப்பாரிடையே அநேகர் நாஸ்திக மதத்தைப் போற்றித் தழுவி வந்தனர். இந்த உலகம் கடவுள் படைப்பு அல்ல, கடவுள் இல்லை என்பனபோன்ற சித்தாந்தங்கள் மிக வேகமாய் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் பரவிக்கொண்டிருந்தன. பெஸன்ட்டம்மையாருக்கும் இக்கொள்கைகள் மிகவும் சுவையுள்ளவையாகத் தோன்றின. அதனால் அக்கொள்கைகளை அவர் மேற்கொண்டு கிறிஸ்துவ சமயத்தின் மீது தமக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்தினார். இவ்வம்மையாரின் கொழுநர் கிறிஸ்துவ மதப் பிரசாரகர். இதனால் பெஸன்ட்டம்மையாரின் அபிப்பிராயங்களைக் குறித்து மிகவும் வருந்தினார்—சினந்து சீறினார். சீறியும் பயன் என்? 1874-வது ஆண்டில் இருவரும் "விவாகரத்து" செய்து கொண்டனர். பின்னர் பெஸன்ட்டம்மையார் தம்முடைய தாயாரோடும், குழந்தைகளோடும் "விஸ்பீ" என்னும் ஊரில் வசித்துவந்தார்.

நாஸ்திக மதத்தின்மீது இவருக்கு நாளுக்கு நாள் பற்று வளர்ச்சிபெற்று வந்தது. எம்மதத்தை நோக்கினும் பொய்ம்மையே நிறைந்திருக்கிறது என்றும், உண்மையைவிட உத்தமமான மதம் வேறு ஒன்று இல்லை என்றும், உண்மை யறிவோடு மனிதன் உலக உற்பத்தியை ஆராயவேண்டும் என்றும், அங்ஙனம் ஆராயுமிடத்துப் படைப்புத் தலைவன் யார்? படைப்பின் உண்மை என்ன? என்பன முதலிய விஷயங்களைப் பற்றி மனிதனால் ஒன்றும் அறிந்துகொள்ள முடிவதில்லை என்றும் பெஸன்ட்டம்மையார் அநேக விடங்களில் போதனை செய்துகொண்டு சங்கங்களின் மூலம் பிரசாரம் செய்துவந்தார். அக்காலத்தில் இவருக்குச் சகாவாக "பிராட்லா" என்னும் ஒரு ஆங்கில அறிஞர் இருந்தார். இவர் அவ்வம்மையாருக்குப் பற்பல விதத்திலும் உதவிபுரிந்துவந்தார். நாஸ்திக மத பிரசாரத்துக்கு இப்பொழுது முக்கியமாக இவ்விருவரே காரண கர்த்தராக விளங்கினர் என்று கூறுவது உயர்வு நவிற்சியாகாது. சமூக ஒழுக்க வழக்கங்களைக் குறித்தும் பெஸன்ட்டம்மையார் பெரிதும் சிந்தை செலுத்திவந்தார். 1877-வது ஆண்டில் கர்ப்பத்தடை (Birth Control)யைப் பற்றி பிராட்லாவும் இவரும் சேர்ந்து ஒரு கட்டுரை வரைந்தனர் இந்தக் காரணத்தால் இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். ஆனால் விசாரணையின் பயனாக விடுதலை பெற்றனர். குழந்தையைப் போற்றி வளர்ப்பதற்குத் தகுதியில்லை என்று தீர்மானிப்பதைவிட ஒரு தாயாருக்கு மானக்கேடும் துன்பமும் வேறு இருக்கமுடியாதல்லவா? அந்த அவமானம் இவருக்கு நேர்ந்தது.

"தோட்டிபோல் உழைத்துத் துரைபோல் சாப்பிடவேண்டும்"



"இத்தகைய, கொள்கையுடைய இவர் குழந்தைகளை வளர்க்கத் தகுதியில்லை." என்று கோர்ட்டார் தீர்மானித்துவிட்டபடியால் இவரிடம் வளர்ந்துகொண்டிருந்த குழந்தைகளைப் பிரித்து இவருடைய கணவரிடம் ஒப்படைத்தார்கள்.

எப்பொழுதும் பெஸன்ட்டம்மையாருக்கு அரசியல் கிளர்ச்சிகளில் ஆர்வம் அதிகம். அதனால் இவர் அயர்லாந்து, பால்கன், எகிப்து முதலிய நாடுகளின் சுதந்தரக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டுரைகள் வரைந்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டுவந்தார். 1875-வது ஆண்டில் பொதுவுடைமை வாதத் (Socialism) தை "கார்ல் மார்க்கன்" என்ற அறிஞர் ஆராய்ந்து வெளியிட்டார். ஆங்கிலேயரின் சமூக வாழ்க்கையில் அநேக ஊழல்களும் அக்கிரமங்களும் நிறைந்திருக்கின்றனவென்றும், பொருளாதார முறையும் இத்தகைய அக்கிரமங்களும் அநியாயங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கிறதென்றும் பெஸன்ட்டம்மையார் ஆராய்ந்துணர்ந்து, இக்குறைகளை நீக்கக் கருதி நாடு முழுவதும் பிரசாரம் செய்யத் தொடங்கினார். பிற்கால ஆங்கிலக் கவிகளில் முதன்மை பெற்று விளங்கிய பெர்னார்டுஷா முதலிய அறிஞர்களால் நிறுவப்பெற்ற "பேபியன் ஸொஸைட்டி" என்னும் ஒரு சபையில் பெஸன்ட்டம்மையார் சேர்ந்தார். அந்தச் சபையின் ஆதரவில் இவர் இங்கிலாந்து தேச முழுவதிலும் பொதுவுடைமைக்கொள்கைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். பெஸன்ட்டம்மையார் எத்துறையிலும் நுழைந்து ஆராய்ச்சி செய்யத்தக்க கூர்ந்த மதிநலம் வாய்க்கப்பெற்றவர். இவ்விஷயத்தில் இவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை என்றே கூறலாம். இதனாலேயே இவர் இவ்வளவு துறைகளிலும் நுழைந்து ஒவ்வொன்றிலும் முதன்மைபெற்று விளங்கினார். நிற்க, 1889-வது ஆண்டில் இவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. "இவ்வாண்டில் எனக்கு ஒரு பெரிய அனுபவம் உண்டாகியிருக்கிறது. அது இத்தகையது என்று என்னால் வருணிக்க முடியாது. எனக்கு பிரமஞானசமாஜ (Theosophical Society) ஸ்தாபகராகிய "மேடம் பிளாவெட்ஸ்கி" அவர்களின் காட்சிப்பேறு கிடைத்தது. உடனே அந்த அம்மையாரின் சிஷ்யை ஆகிவிட்டேன். அவருடைய காட்சியின் மாட்சியால் எனக்கு ஒரு புத்தறிவு தோன்றியிருக்கிறது. பொதுவுடைமை வாதம் கேவலம் பொருளாதாரத்தைப் பொறுத்ததே. இந்தப் பொதுவுடைமை வாதம் எனக்கு இயல்பாயமைந்துள்ள ஆன்மதத்துவ விசாரணையின் வேட்கையை வெளிப்படுத்த முடியாமல் செய்துவருகிறது. பிரமஞான சமாஜத்தில் சேருவதினாலும், அந்தச் சமாஜத்தின் சித்தாந்தங்களை ஆராய்ச்சி செய்வதினாலும் எனது மானசீக வாழ்க்கைக்கு ஒரு நூதன விகாசம் உண்டாயிருக்கிறது" என்று பெஸன்ட்டம்மையார் தமது சுயசரிதத்தில் வரைந்துள்ளார். அன்று முதல் இன்று வரை இவர் தம்முடைய முழு ஆற்றலையும் பிரமஞான சங்க வளர்ச்சிக்கே பயன்படுத்தி வருகிறார். நாஸ்திக மதத்திற்குச் சிறந்த பிரசாரகராகிய பெஸன்ட்டம்மையார் பிரமஞான சங்கத்தில் சேர்ந்துவிட்டபடியால் அறிஞர் பிராட்லா அவர்களுக்குப் பொறுக்கமுடியாத கோபமும் துன்பமும் ஏற்பட்டன. ஆனால் அம்மையாரின் வாழ்வில் சாந்தி உண்டாயிற்று.

(தொடரும்.)

"பிறர் பொருளை இச்சிப்பான் தன்பொருளை இழப்பான்"

# பெண்மைக் கிழைத்துள்ள பெருங்கோடு

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

இதனை யெடுத்துக்காட்டுதல் பண்டித சகோதரரிற் பலருக்கு எதிர்பாராத திகைப்பினை உண்டுபண்ணலாம், ஜன சுதந்தரத்தினைப் பலவகையிலும் பறிப்பதே கடமையாகக் கொண்ட ஓர் ஆட்சி முறையில் தோன்றி வளர்ந்து உழன்று வாழ்நாள் கழிக்கும் பலருக்கு அவ்விழிதகை வாழ்வும் இயல்பாகப் போவதுபோலவே பெண்ணுலகமும் தம்மீது சுமத்தப்பட்ட பழிகண்டு நாணமுறவில்லை. பெண்ணினங்கள் பேரில் பேரன்பு பூண்டு அனுதாபப்படும் ஆடவர் குழாமும் இக்குறையைப் பரிகரிக்க முன்வரவில்லை. இப்படுபழி யாதென்பதைச் சிறிது ஆராய்வோம்.

ஆடவர் மகளிர் ஆகிய இருபாலரினுள் மகளிர் நிறைகாக்கும மனவலி பெரிதும் உடையவராயிருக்க அதற்கு மாறாக மகளிர் மனம் நிலையின்றி உழலக்கூடிய தென்று பொருள்படும்படி சில ஆண்பாற் புலவர்கள் செய்யுள் வடிவில் அமைத்து வைத்துப் போயிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக,

அம்புலி தனிறபெண் பிறந்தவர்க் கெல்லாம் ஆடவ ரிலாமையி னல்லால்
நம்புதற்குளதோ என்றனன் வசிட்டன் கற்றவப் பன்னியே அனையாள்

எனவும்

"ஐம்புலன் களும்போல் ஐவரும் பதிக ளாகவும் இன்னமவே றொருவன்
எம்பெருங் கொழுந னுவதற் குருகும் இறைவனே யெனது பேரிதயம்"

எனவும் வில்லிபாரதம் பழம்பொருந்து சருக்கத்தில் பாஞ்சாலி கூற்றாகவுள்ள செய்யுள் முன்னிற்கிறது.

"ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயமுடைய இன்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார் மேலாகு மனம்"

என்னும் நீதிநெறி விளக்க வெண்பாவும்

"தந்தையாயினும் விழைவிற் றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும்
மைந்தராயினும் மிகவும் வனப்புடையா ரெனிலவர்மேல் மடநலார்தஞ்
சிந்தை நடந்திடும்"

எனும் காசிகாண்டக் குறிப்பும் மட்டில் கண்டு எடுத்துக்கொள்வோம். முதற்கண் வில்லிபாரதத்தில் காணப்படும் பழம் பொருந்து சருக்கமே வடமொ

---

"தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொ



வியாஸபாரதத்தில் காணப்படவில்லை. வேறிடங்களிலும் பாஞ்சாலி அவ்விதம் கூறியதான குறிப்பும் வியாஸபாரதத்தில் இல்லை. இதனை நன்காராய்ந்த பின்னரே யான் வெளியிடத் துணிந்தேன். அப்படியிருந்தும் சிலர் இப்பெரிய மாறுபாடும் உண்மையா யிருக்குமோ என் றையுறுகின்றனர்.

பெண்களை யிழித்துக்கூறும் எண்ணமுடைய ஒரு சிலரின் கற்பனையே இஃதன்றி வேறுண்டோ? வில்லிபுத்தூராழ்வார் கூறியிராவிடினும் மேலே சுட்டிய எண்ணமுடையார் ஒன்றிரண்டு பாக்களைப் புனைந்து இடைச்செருகியிருக்கலாம். இஃதோர் அரிய காரியமன்று.

பெண்களின் தன்மையைப் பெண்களே எடுத்துரைப்பதாக அமைத்ததும் அவர் கொள்கைக்குப் பெருஞ்சான்றாகக் கொண்டதும் அதனிலும் கொடுமை கொடுமை.

அதிலும் அருந்ததியென்னும் கற்புக் கடவுளுக்குச் சமமான பாஞ்சாலியின் வாக்குமூலம் இது என்று மேலும் குறித்திருப்பது அதனிலும் பெரிய துரோகம்.

இரண்டாவதாக,

நீதிநெறி விளக்க வெண்பா இயற்றியவர் மேலே கூறியதாக வழக்கில் ஆளப்படும் வெண்பா, நியதியியற்கைப்படி

"எந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயமுடைய இன்சொல்லான் கேள்எனினும் மாந்தர்க்
கயலார்மேல் ஆகு மனம்."

என்றே மூலத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதுவே எல்லாவகையிலும் பொருத்தம் உடையதாமகும். ஆடவனைவிட ஆண்டில் இளமைபெற்றிருப்பது பெண்ணே யாகும். பெண்ணின் இசைவளத்தினால் உளம்பூரிப்பது ஆடவனின் இயற்கையேயன்றி ஆடவன் இசைவன்மை கேட்டுப் பெண்கள் காதலிப்ப தென்பதும் இயற்கைக்குப் பொருத்தமற்றதாகும்.

ஆண்மகன் மனைவியைத்தவிர வேறு மாதரை நேசிப்பதால் சமூக தண்டனை பெறுதொழிதலினால் எல்லா நலங்களும் நிறைந்த மனைவியிருக்கையினும், அடக்கமின்றிக் கண்டவிடமெல்லாம் மனதைச் செல்லவிடுவது உலக இயற்கையாக நிகழ்கின்றது.

"காந்தையர் கண்கவர் நோக்கத்தான்" என்பது பொருந்துமோ? எனச் சிலர் வாதிக்கலாம். பெண்கள் கண்களைக்கவரும் வனப்பு ஆடவனுக்கேயிருப்பதாகக் கூறுவது மரபென்பதை மறுக்கவில்லை. எனினும் பேரழகு பெற்றவர்கள் ஆடவராயினும், மகளிராயினும் இருபாலர்களின் கண்களுக்கு விருந்தாக விருப்பர் என்பதை எவருமறிவர்.

இதுபற்றியே பேரழகுடையரான ஸ்ரீராமபிரானை வருணிக்கும்போது கவிச்சக்கரவர்த்தி "ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்" என்று சிறப்பித்தது கண்டு தக்க சான்றாகும்.

---

"இளமையிற் கற்றது எப்போதும் நிற்கும்"

இனி சுக்ரீவன் இராமரை முதல் முதலாக எதிர்ப்பட்ட ஞான்று இவர்கள் பேரழகைக் கண்டு திகைப்புற்று

"புண்டரீ கங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டல முதயம் செய்த மரகதக் கிரியனானை"

"நோக்கினல் நெடிதுநோக்கி னெடிவரும் கமலத்தண்ணல்
ஆக்கிய வுலக மெல்லாம் அன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாம் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்தவென்பான்"

என அமையா வியப்புற்றதாகக் கூறப்பட்டிருக்கின்றது. பேரழகுள்ள வடிவங்கள் எவர் மனத்தையும் கவர்வதியல்பு. பெண்களும் விரும்பும் எழில் ஒரு பெண்ணிற்கு அமைந்துளதாயின் அது சிறந்த அழகென்று கொள்ளத் தடையில்லை. ஆதலின் நீதிநெறி வெண்பாவில் கண்ட "காந்தையர் கண்கவர் நோக்கத்தாள்" என்பது மிகவும் அழகி என்றே பொருள் தரும். இத்தகைய வனப்புடையவள் உரிய மனைவியாயிருப்பினும் பிறிதொரு மங்கையை நாடுவது சில ஆடவருக்கே இயல்பாயிருப்பது உலக அநுபவம். இந்திராணியாகிய சசிதேவியிருக்க இந்திரன் வேறு மாதர்களிடம் மனதைச் செலுத்தியதாகவுள்ள உதாரணங்களே இதற்குப் போதியதாகும்.

இனி காசிகாண்டக் குறிப்பும் இடைச் செருகல் எனும் வகையிற் சேர்ந்ததே என்று தெளிதல் வேண்டும். ஏனெனில் அதே காசி காண்டத்தில் மற்றோரிடத்தில்

"நற்றாய் புதல்வி யுடன்றோன்றிய நங்கை யேனும்
உற்றோர் ஒழியிற் றனியெய்தி உறைதலாகா"

என்று கூறியிருப்பதை ஊன்றி நோக்குமிடத்து ஆடவனே புலனடக்கமின்றி மிருகவுணர்ச்சிக்குச் சில சமயம் வர்ஜாவர்ஜமின்றி அடிமையாக நேரிடும் என்பதைக் கருதி எச்சரிப்பதாக விளங்கும். அதையெண்ணி ஆடவன் விலக வேண்டுமெனப் பணித்ததே அச் செய்யுட் கருத்தாகக் கொள்ளல் முறைமை. அவ்வாறும் அன்றெனை எண்ணுவோர் உளராயின் இயற்கைக்கு மாறுபட்ட அனையார் வாதத்தினைச் சஞ்சலமின்றி மறுக்க வேண்டியதே அறிஞர்கடன்.

பொய்யாவாய்மைத் திருவள்ளுவர் திருக்குறளிலாவது, ஓதாதுணர்ந்த மூதாட்டியாரின் அருள்வாக்கிலாவது வெளிவராத ஒன்றை தனிப்பட எப்புலவரே கூறினும் அதை ஆதரிப்பார் அறிவுடையோருமாகார். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடரின் தெய்வீக வாக்கிலாவது இக்குறிப்புளதோ?

"தூமகேதுபுவிக்கெனத் தோன்றிய வாமமேகலை மங்கையர்" என்றது ஒழுக்கம் வழுக்கிய பெண்களைக் குறிப்பிடுமே யன்றி உத்தமப் பெண்களைக் குறிப்பதாகாது. ஆசிரியருக்கது கருத்தல்ல வென்பதற்கு,

"ஆசலம்புரி யைம்பொறிவாளியும், காசலம்பு நகிலவர் கண்ணெனும்,
பூசலம்பும் நெறியின் புறஞ்செலாக் கோசலம்"

என்று அமைத்துள்ள செய்யுளே போதிய உதாரணமாகும். அன்றியும் இருபாலாரின் இயற்கைகளையும் காய்தல் உவத்தலின்றி ஆராய்வோமாயினும் மனவடக்கம் புலனடக்கம் ஆடவரைவிடப் பெண்களிடமே மிகுதியு முண்டென்பதை ஏற்கவேண்டும்.

"ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உள்ளவை"



சரீர வன்மைக்கேற்ப பலாத்கார முயற்சி ஆடவரிடமே இயல்பாய் எழுவதென்பது குற்றவிசாரணைக் குறிப்புகளினாலேயே கண்கூடாகக் காணலாம்.

அன்றியும் கற்பைக் காக்கும் விஷயத்தில் பெரும்பாலும் பெண்களின் பிடிவாதமும், அதற்கு இடையூறு நேருமெனத் தோன்றும்போது அடக்க முடியாது பொங்கியெழும் வன்சினமும் ஆடவரிடம் காண்டலரிதாகும்.

உதாரணமாக ஒன்று கூறுதும். ஏகபத்தினிவிரத சீலராகிய ஒப்புவமையற்ற இராமபிரான் தம்மன நிலையோராது தம் வடிவழகைக்கண்டு விரும்பி வந்த சூர்ப்பநகை என்னும் அரக்கி தன் எண்ணத்தை வெளியிட்டபோது கூடத் தமக்குள் தீயவளென வுணர்ந்தும்

"நிருதர்தம் அருளும் பெற்றேன் நின்னலம் பெற்றேன் நின்னோ
டொருவருஞ் செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே னென்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னா
வரிசிலைவடித்த தோளான் வாயெயி றிலங்க நக்கான்"

என அசதியாடி அவள் நாணின்மைக்கும், துணிவுக்கும் வெளிப்படச் சிரித்தார் எனக் கவியரசர் அழகாக அமைத்துள்ளதே போதியதாகும்.

உத்தமோத்தமராகிய இராமர் வஞ்சக அரக்கியின் இழிகுணங்கண்டுழியும் வஞ்சினம் கூறாது இரக்கம் தோன்ற நகைத்தனர். கற்பருங்கலமாகிய சீதாபிராட்டியோரோ இராவணன் தனிமையிற் போந்து தன் எண்ணத்தை வெளியிட்ட ஒவ்வொரு தருணத்திலும் துரும்பாகவு மதியாது தன்னுயிருக்காபத்து நேருமென்பதையும் கருதாது "புன்மகற்கேட்டி" என்று மிகமிக இழிவாகவும் கடுமையாகவும் பேசி நிந்தித்திருப்பது வெளிப்படை. இவ்விரண்டும் ஆண்மை பெண்மை ஆகிய இரண்டிற்கும் இயற்கை யுதாரணங்களாகும்.

அன்றியும் "கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சம் கற்பின்மேற் கண்டதுண்டோ" என்று பிராட்டியார் கூற்றாகக் கவியரசர் கூறியுள்ளார்.

பெண்களின் கற்பின் வன்மை கருங்கல்லிற்கு முண்டோ? என்பது அதன் கருத்து. மெல்லிய சரீர இயற்கையுடைய பெண்கட்கே மனத்திட்பம் அதிகம் என்பதும், சரீரவன்மை மிக்குடையவர்கட்கே புலனடக்கமுடியாத தன்மையுண்டென்பதும் ஆராய்ச்சியாளர் துணிவு. ஆடவரால் தீங்கு நேரலாமென்று பெண்கள் எண்ணி தனித்தேக அஞ்சுதல் இயல்பேயன்றி பெண்களால் தீங்கு விளையுமென்று ஆண்மகன் அஞ்சி நிற்பது உலகில் இல்லை. பெண்ணியற்கை பெரிதும் தாங்கி நெறி ஒழுகும் உத்தம ஆடவர்களும் உண்டென்பதை மறந்துவிடவில்லை. அவ்வாறே ஆணியற்கை பெரிதும் உடையராகிப் பெண்ணியற்கைக்கு மாறாய் ஒழுகும் இரண்டொரு தூர்த்த குணமுள்ள பெண் வடிவங்களும் உலகில் காண்கின்றோம் என்பதையும் மறுக்கவில்லை. இவர்களைப் பேய் என்றே கொள்ளல் அறம். எனினும் பெரும்பாலாரின் இயற்கைபற்றியே ஈண்டு ஆராய்வதாகும். ஆதலின் ஆண்பாற் புலவரிற் சிலர் ஒருதலைத் தீர்ப்பாகப் பெண்மைக்கே பெருங்கேடு சூழத் துணிந்த அநீதியைக் கண்டிக்கவே இக் கட்டுரை வரைய நேர்ந்தது. இந்

"ஆசை வெட்கம் அறியாது"

நூற்ருண்டில் நம் கண்முன் வாழ்ந்த அறிவிற் பெரியாராகிய வேதநாயகம் பிள்ளையும் பெண்கள் முறையீடாகப் பாடிய கீர்த்தனையொன்றில்

"எங்களையல்லாமல் நீங்கள் உதித்தீரோ
ஏறி யாகாயத் திருந்து குதித்தீரோ"

"அங்கப்பா லுண்ணுமல் தேகம் வளர்த்தீரோ
அடிமையென் றெங்கள் தலையில் விதித்தீரோ"

என்று புனைந்துள்ளார். இவ்வாறு பெண்மையியல்புக் கியலாத பழியை அவ்வினத்தினர் மீதேற்றி இழித்துரைக்கத் துணிந்த ஆடவர்கள் தாமும் தாயின் கருப்பத்திலிருந்தே பிறந்தோம் என்பதை மறந்திருக்கக்கூடுமென்றே மதிக்கவேண்டி யிருக்கிறது. ஆடவர்களில் நெறி காப்போர்களை ஆயிரத்திற் கொருவராக விரல்விட்டு எண்ணலாம். பெண்ணினத்தில் கற்புடையவர்கள் ஆயிரமாயிரமாகக் காணலாம்.

உலக சிரேஷ்டரும் தேசத்தின் தெய்வமும் ஒழுக்கத்தின் உறையுளும், ஸத்தியத்தின் வித்தும், சாந்தியின் சக்தியும், தியாகத்தின் உரைகல்லுமாகிய நமது மகாத்மா காந்தியடிகளார் வரைந்துள்ள சுய சரிதத்திலும் புலனடக்க முடியாத மிருகவுணர்ச்சி ஆடவனிடம் எழுவதியல்பேயன்றிப் பெண்பாலாரிடம் எழுவதில்லை என்று அழுத்தமாகக் கூறியுள்ளார். தவிர விஷய பிரவர்த்திக்கும் ஆடவரே தூண்டுகோலாயுள்ளார் என்றும், பெண்கள் ஒருபோதும் முயற்சியாள ராவதில்லையென்றும் குறித்துள்ளார்; ஸத்தியவேந்தர் ஸத்தியம் கூறுதென் கூறுவர்? இதற்கு நம்மிந்தியநாட்டுப் பெரியாராகிய ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸரது சரிதத்தில் அவர் மணஞ்செய்துகொண்ட சாரதா மணி யென்னும் பெண்கள் நாயகம் பரம ஹம்ஸரிடம் வசித்துவந்த காலத்தில் உலகியல் இன்னதென்றறியாது அவராணைப்படி ஒரே படுக்கையில் துயின்றும் அவரது தெய்விக சக்தியில் அடங்காக் காதல்கொண்டு பணிவிடை செய்து பரம திருப்தியுடனிருந்தார் என்னும் வரலாற்றினும் சிறந்த சான்று வேண்டுவதில்லை. பெண்மையின் பெருமையில் பொருமையுள்ள வேறு சிலர்

"சேலைமேற் சேலைகட்டித் தேவரம்பை யானாலும்
ஓலைமே லெழுத்தாணி யூன்றும் பெண்ணாகாது"

என்றும், "எண்ணறக் கற்று எழுத்தற ஓதினும், பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே" என்றும் தொடுத்துள்ள பழமொழியெல்லாம் வழுமொழிகளேயாகும்.

இம்மொழித் தொடரினை ஊன்றி நோக்குமிடத்தும் பெண்தன்மையின் பெருமை புலனாவதன்றிச் சிறுமை தோன்றவில்லை.

சேலைமேல் சேலைகட்டிய தேவரம்பையைக் காட்டிலும்
ஓலைமேலெழுத்தாணி ஊன்றும் பெண் சிறந்தவள்

என்பதே இதன் பொருள். அழகியைவிட அறிவுடையவள் சிறந்தவள் என்பதை மறுக்க முடியுமோ? ஓலைமே லெழுத்தாணி ஊன்றும் பெண்ணிற்கு ரம்பையும் (இணை) யாகாள் என்று கொள்ளாமல் இழிவாகக் கொள்வோர் சிலர். பேதமை யென்பது மாதர்க்கணிகலம் என்பது ஔவை வாக்கு. அறிந்திருப்பினும் அறியாதவர்போல் அமைதியாக நடந்துகொள்ளும் குணமே பெண்களுக்கு ஆபரணங்களைப்போல் அழகு செய்வதாகும். ஆதலின் அணிகலத்திற் கிணையான இயற்கை யடக்கத்தினைப் படித்தாலும் பெண்கள் கைவிடற் பாலரல்லர். கைவிடுவது அவர்கட்கு அழகு செய்யாதென்பதே கருத்தாகும்.

"அழஅழச் சொல்லுவர் தம்மனிதர், சிரிக்கச் சொல்லுவர் பிறர்"



இஃதன்றி வடமொழி நீதிசாஸ்திரமென்னும் புத்தகத்திலுள்ள சுலோகம் ஒன்றில் பெண்கள் ஆடவரைவிட இருமடங்கு புசிப்பவர்கள் என்றும், அதற்கிரட்டிப்பு அதாவது நான்குபங்கு புத்தி விசேஷம் உடையவர்கள் என்றும், ஸாகஸத்தில் ஆறுபங்கு அதிகம் உடையவர்களென்பதாகவும், சிற்றின்ப இச்சையில் எட்டுப்பங்கு மேம்பட்டவர்கள் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு அநீதி? எத்துணைக்கொடுமை பாருங்கள்! பொதுவாகப் பெண்கள் ஆண்களைவிட மென்மையான சரீரவியற்கை வாய்ந்தவர்கள் என்பது எவருமறிந்ததே. அதற்கேற்ப ஆகாரத்திலும் பெரும்பாலும் குறைந்த அளவே கொள்ளக்கூடியவர்கள் என்பதும் கவனிப்போர்க்கு விளங்கும். புத்தி அதிகம் என்பது பெரும்பான்மையில் ஏற்கக்கூடியதே எனினும் அத்தகைய நுண்ணறிவு சொற்ப ஆகாரம் ஏற்பவர்களிடம் பிரகாசிக்குமேயன்றி பெருந்தீனியுடையாரிடம் பிரகாசியாததோடு மந்தகுணமும் சோம்பலும் மேலோங்கி நிற்பதியல்பு. இதுவுமன்றி கஷ்டம் பொறுத்துச் சலியாதுழைக்கும் உயரிய குணம் பெண்களிடமே பிறவிக்குணமாக உண்டென்று வள்ளுவர் வாக்கும் எழுந்துளது. அதுபற்றியே பெண்ணிற் பெருந் தக்க யா உள? என்று கூறி யருளினர். இம்முறைபற்றி மனதையும், புலனையும் அடக்கும் இயல்புக்குணம் பெண்மைக்கே அழகு செய்து நிற்கின்றது. இயல்பாகவே தமது விருப்பத்தினை வெளியிடாது அடக்கியாளுந் திறமை பெண்களிடமே பிறந்து வளர்ந்து வருகின்றது. தமயந்தி நளன் எதிர்ப்பட்ட ஞான்றும்,

"காவல் கடந்தெங்கள் கன்னிமாடம் புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ
உள்ளவா சொல்லென்றாள்"

என்று அன்பை யகத்தடக்கி அதிகார தோரணையில் அதட்டி யுரப்பி உசாவினள் எனப் புகழேந்தி எடுத்தாண்ட அழகே பெண்மையின் அடக்கத்திற்குப் பேருதாரணமாகும்.

இச்சையை யடக்கவேண்டிய நியதியில் முயற்சிகூடப் பெறாத ஆண்பாலாரில் ஒருவர் இருவர் (மிருகஜாதியிலும் காணமுடியாத) பெண்மைத் தன்மையின் பெருமையை மறைத்துத் தம்மினத்தின் குறைகளைப் பெண்ணினங்கள்மீது ஏற்றிப் பழிமொழி வழங்கத் துணிந்தது குடியேற்ற நாட்டின்கண் உள்ள சில வெள்ளையர்கள் இந்தியரைக் கூலிகள் என்றும் கறுப்பர் என்றும் அழைப்பதற்கே சமானமாக உளதன்றி வேறில்லை. காராட்டை வெள்ளாடென்பதும் உலக வழக்காதலின், இத்தகைய கூற்றுகளைப் பொருட்படுத்தாமல் விடுப்பது நலமெனச் சிலர் கருதலாம். இதை மறுக்காதொழிவது பெருங்கேடென்பதை யுணர்ந்த பெருந்தகைப் பேறிவாளர்கள் உண்மையொளிருமாறு துணைசெய்வார்களாக.

"அல்லல் ஒருகாலம், செல்வம் ஒருகாலம்"

# சாத்தனார் நூற் சிறப்பு.

(வி. பரமசிவன்.)

## காவியமும் கால இயல்பும்

காவியங்களெல்லாம் கால இயல்பையும் மக்கள் நிலையும் உணர்ந்து செய்யப்படல் வேண்டும். இங்ஙனம் செய்யப்படும்பொழுது மொழி, அமைப்பு முதலிய பாகங்கள் மாறுதலடையும். கால நிலையையும் மக்கள் நிலையையும் உணராதோரே இதனை மறுக்க முயல்வர். ஒரே வழக்கம் உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பது பித்தரது கூற்றாகக் கருதப்படும். "மரபு" என்ற செய்யுளுறுப்புக்கு நச்சினார்க்கினியர் நவின்றுள்ள உரை நன்னர்ச் சிந்திக்கற் பாலது.

"காலந்தோறும் இடந்தோறும் வழக்குத் திரிந்தவாற்றுக்கேற்ப வழுப்படாமல் செய்வதோர் முறைமை"

மொழி நடைமாறுவதில் காலவியல் புணர்ந்தோர்க்கு வருத்தம் சிறிதும் இராது. இஃது உலக இயல்பன்றே!

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற விதி எல்லாராலும் உபயோகப்படுத்தப் படுகின்றதே.

## பாரதியின் காவியம்

பாரதியின் பாஞ்சாலி சபதத்தை நோக்குங்கள்! இஃது கம்பர், திருத்தக்கர் முதலிய பழம் புலவர் கைக்கொண்ட முறையில் ஆக்கப்பெற்றிலது. புதுவதொரு முறையைக்கொண்டு செய்யப்பட்டிருக்கின்றது. காரணம் என்னை? மக்கள் நிலையை உணர்ந்தவர் பாரதியார். எனவே அதற்கேற்ப காவியங்களும் அமைதல் வேண்டுமென விழைந்தார். அவரும் அவ்வாறே செய்தார். இதைக் குறைகூறுவாரும் உளரேல் என் செய்வது? பழமை, பழமை எனச் செயலழிவுறுவார் அவர்களே!

## புலவன் கருதிய பொருண்மை

புலவன் தன் மனத்தே தோற்றிக்கொண்டதோர் பொருண்மையைப் பிறர்க்கு அறிவுறுத்த அவாவுகின்றான். அதாவது தான்பெற்ற பயனைப் பிறர்க்கு அளிக்கக் கருதுகின்றான். அப்பொருண்மையைப் புலப்படுத்துவதற்குரிய ஒரு கருவியாகவே கவிகளைக் கொள்ளுகின்றான். அக்கவிகளையும் தன் மனத்தோற்றத்திற்கு ஏற்றதாகவும் அமைத்துக் கொள்ளுகின்றான். அது மட்டும் போதுமா? மக்கள் மனத்திலும் தன் தோற்றம் தோன்றுதல் வேண்டுமல்லவா? அதற்குத் தகுந்த முறையே முக்கியமாகக் கொள்ளுகின்றான்.

"அரைக்காசுக்குப்போன மானம் ஆயிரங்கொடுத்தாலும் வாராது"



ஆனால் இக்காலத்துப் புலவர்கள் எல்லோரும் இங்ஙனமே இருக்கின்றாரெனக் கருதக் கூடவில்லை.

## சாத்தனார் மனத்தே தோற்றிய பொருண்மை

இம்முறையாக நாம் ஆராயும்போது சாத்தனார் தோற்றிக்கொண்ட பொருண்மை யாது? என்ற கேள்வி கேட்கப்படலாம். "மக்கள் மனமொழி மெய்களில் தூயோராகி எவ்வுயிர்க்கும் இரங்கும் இயல்புடையோராய் இருத்தல் வேண்டும்" என்பதே சாத்தனார் மனத்தில் தோற்றிய பொருண்மை. இத்தகைய பொருண்மையை வெளிப்படுத்த சாத்தனார் பாரதியைப்போல் புதிய முறையைக் கொள்ளாததன் காரணம் என்னை? என வினவலாம். இஃது அறிஞரான் வினவப்படும் வினாவாகாது. எனினும் இதற்கு பதில் கூறுதல் நமது கடனே யாம்.

தத்தம் காலநிலையை அறிந்துகொண்டு நூல் செய்தல் வேண்டுமென முன்னர்க் கூறினோம். பாரதியார் வாழ்ந்த காலத்து மக்களுக்கும் சாத்தனார் காலத்து வாழ்ந்த மக்களுக்கும் வேற்றுமை பெரிதுமுண்டு என்பதை அறியாதார் அறிவிலிகளே யாவர். அன்றியும் "மணிமேகலை"யைச் செவ்விதினோதிப் பொருளையும் அழகையு முணர்வார் அக்காலத் திருந்திருப்பரோ எனவும் கேட்கப் படலாம். "பொருளுணர்ந்து" என்ற தொடரைக்கொண்டு அவர்களுக்கு நாம் பதில்கூற முற்படுவோம்.

சாத்தனாரது காலத்திற்றான் பல சான்றோர்கள்—பெரும் புலவர்கள் வாழ்ந்தன ரென்பது ஆராய்ச்சி வல்லுநரது துணிபு. கடைச்சங்க காலத்தில் தோன்றிய பேரிலக்கியங்கள் எத்தனை! இவைகளை யாத்த புலவர்களது அறிவின் விரிவு அவர்களது நூலினாலும் பாக்களினாலுமே உணரப்படும். தமிழறிவு மிகுந்த மக்கள் நிறைந்ததினா லன்றே அத்தகை நூற்களும் எழலாயின! தம் காலத்து மக்கள் பெரும்பாலோர் தமிழறிவு மிகப் பெற்றதினா லன்றோ இருபெருங் காப்பியங்கள் ஒருகாலத் தெழலாயின? அவ்வக் காலத்து வரலாறுகளையும் வழக்கங்களையும் அவ்வக்காலத்துத் தோன்றும் இலக்கிய நூல்களே புலப்படுத்தி விடுமென்பது உணரப்படுமாகில் இத்தகை வினாக்கள் எழுதற்கிடமிராது.

சாத்தனார் தம் முள்ளத்துப் பொருண்மையை வெளிபடுத்தற்கு ஏற்ற முறை இதுவே யாக இருக்கலா மன்றோ? கவி செய்வோரெல்லாம் புதுவது புனைதலே பெருமை தருவது எனும் கொள்கை ஏற்கற் பாலதன்று. இஃது கால நிலைமையை அறியாதாரது செய்தியாகும். தத்தம் கால இயல்புகளைக் கடத்தலும் அவ்வக்காலத்து வழக்காறுகளை வெறுத்தலும் காரணத்தோடு நிகழற்பாலனவாகும். ஒரு சில வழக்கங்கள் உள்ளவாறே கோடற் குரியனவாய் இருக்கலாம். ஒரு சில வழக்கங்கள் உயர்வற்றவென அறிஞரான் கருதப்படலாம். அவற்றை அகற்றிப் பிறவற்றைப் போற்றுதல் பீடுசால் செய்கையே.

மனிதன் மனமொழி மெய்களில் தூயோனாகி உயிர்களிடத்து உலையாத அன்புபூண்டு ஒழுகுதல் வேண்டும் எனும் உணர்வை உண்டாக்குதற்குத்தான்

"கருதாமற் கருமங்கள் முடிக்கவேண்டாம்"

சாத்தனூரான் இக்காப்பியம் செய்யபட்டிருத்தல் வேண்டுமெனக் கொள்வதில் இழுக்கொன்று மிலது. தொல்காப்பியர் கூறுமாறு "புதுவது கிளந்த யாப்பின்" மேலதாக இக்காப்பியம் செய்யப்படவில்லை. நிகழ்ந்ததொரு கதையின் போக்கும் தம் எண்ணமும் ஒன்றுபட்டிருத்தலைச் சேர்ந்தும் இக்காப்பியத்தை இயற்றி யிருக்கலாம் என ஊகித்தற்கும் இடனுண்டு. இனி இக்காப்பியத்தின் அமைப்பை ஆராய்வோம்.

### மணிமேகலையின் முப்பெரும் பகுதிகள்

மணிமேகலையை நாம் மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் கொள்ளலாம். (1) மணிமேகலைக்குத் துறவு எண்ணம் உண்டாகும் பகுதி. (2) துறவின் ஆரம்பப் பகுதி. (3) நோற்றற் பகுதி.

### முதற் பகுதி

மணிமேகலைக்கு பற்றறுத்தல் வேண்டுமெனும் எண்ணம் எப்பொழுது உண்டாகின்ற தென்பதை நோக்குவோம்.

மாதவி மறவண நீத்த அறவண அடிகள்பால் கோவலனுகிய தன் காதலன் உற்ற கடுந்துயரத்தை நிகழ்த்துகின்றாள். நிகழ்த்தவே அப்பெரியார் இவளுக்கு உரைக்கும் உரைகள் ஈண்டுக் கற்கற்பாலனவாகும்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக"

என்பதாகும் அவ்வுரைகள். கோவலனது மாய்வும் அறவண அடிகளது நீதியுமே மாதவியைப் பற்றறுக்கச் செய்தன. மாதவி பற்றறுத்துவிடின் மணிமேகலையைப்பற்றிக் கூறவேண்டுமோ? ஊரலர் உரைத்த காதையில் வயந்தமாலையிடம் மாதவி யுரைக்கும் உரைகளை நோக்கும்பொழுது மணிமேகலை அக்காலம் வரையும் தீத்தொழிற்கு முற்பட்டிலள் என்பது விசதமாகும். அன்றியும்

"மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்ல தியாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாள்"

என மாதவி உரைக்கும் உரைகளிலிருந்து அவளது மனப்பண்பும் கணிகைத் தொழிலின்பால் இப்பொழுதுள்ள வெறுப்பும் கண்ணகிபாலுள்ள காதலும் தெளிவாகின்றன.

மாதவியின் துறவுக்கு கோவலன் கண்ணகி இறப்பும், மணிமேகலையின் துறவுக்கு மாதவியும் காரணமாவர் என்பது இதிலிருந்து ஒருவாற்றானுணரப்படும். மணிமேகலைக்குத் துறவு விதை இவ்விரண்டாம் காதையிலிருந்தே விதைக்கப்படுகின்றது என்பது உய்த்து உணர்வார்க்கே விளங்கும்.

---

"அஞ்சில் விளையாதது ஐம்பதில் விளையுமா"

# உடற் பயிற்சி
## அல்லது
# இருமைக்கும் ஒரு மருந்து.

(பண்டித. ப. பக்கிரிசாமி செட்டியார்.)

அடைதற்கரிய மானிட யாக்கையை எய்திய நாம் சாதிக்க வேண்டிய தென்ன? இப்பிறவியை ஆண்டவன் நமக் களித்ததன் நோக்க மென்ன? அறம், பொருள், இன்பம், வீடு எனும் சதுர்வித புருடார்த்தங்களை அடைதலன்றோ நாம் சாதிக்க வேண்டியது? இறைவனது நோக்கமும் அதுவல்லவா? அறம் புரிவதற்கும், பொரு ளீட்டற்கும், இன்பம் துய்த்தற்கும், இறுதியில் வீடடைவதற்கும் இன்றியமையாதது திட சரீரமாகும். ஆகவே இவ்வுலகத்தில் உயிரோடு வாழுந்தனையும், நோய் வாய்ப்படாமல் திட சரீரியா யிருக்கவேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழி வலியுறுத்துவதே போல் நோயில்லாத வாழ்க்கையைவிட மேலான செல்வம் பிறிதொன்றுண்டோ? எனவே சரீர சுகத்தைத் தருவது எதுவென ஆராயப்புகின் தேகப் பயிற்சி யென்றே தெளிவாகும்.

தேகப் பயிற்சியைத் தேவையான வரையில் அடைந்துவந்தால் அது தேக திடத்தையும், நீங்காத சுகத்தையும் தருமென்பதற் கையமில்லை. கல்வியில் அல்லது செல்வத்தில் மிகுந்தவரா யிருக்கு மொருவர் தேக பலமின்றி நோயால் வாடியிருந்தால் அவரால் ஏற்படும் நன்மை என்ன? வாணாள் சுருங்கி வீணாக வேண்டுமே யன்றி வேறேது பயன்? ஆகவே எவருக்கும் தேகபலம் வேண்டும். தேக வலிவுடையோர் இன்ப வாழ்வில் நிலைத்திருப்பரன்றோ?

### சுகத்தை விரும்புகிறீர்களா?

தேக பலம் பெற தேகப்பயிற்சி செய்ய வேண்டும். தேகப்பயிற்சி என்பது உடலுக்குத் தரும் அப்பியாசம், வேலை யென்று பொருள்படும். வேலை செய்வது எந்த உயிர்க்கு மியல்பு. அவயவங்களைப் படைத்த அனைத்தாய ஜீவன்களும் வேலை செய்வதே விசேஷம். நானாவித விலங்குகளைப் பாருங்கள். உருவத்தில் பருத்த யானை முதல் மண்ணில் உதிக்குங் கடைசி அணுப் பூச்சி புழு வரையில் யாவும் இடைவிடா முயற்சியாலேயே உயிர் வாழ்கின்றன. வலிமை மிக்க சியமேனும் பிரயாசையின்றி வசிக்கின்றதா? இல்லை. அதுவும் ஆடி அலைந்து இரை தேடியே பிழைக்கின்றது. மக்களிற் பெரும்பான்மையோரும் பாடுபட்டு உழைத்தே உயிர் வாழ்கின்றனர். அவ்வாறிருக்க ஏனையோர் ஏன் தேக பலத்திற் காதாரமான தேகப்பயிற்சி செய்யாது சோம்பி ஜீவிக்க வேண்டும்? எதற்காகக் கடவுள் அவயவங்களை அளித்தார்? அவைகளைத் தக்கவாறு உபயோகிக்க வன்றோ? கண்கள் காண்கின்றன. செவிகள்

---

"பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்கவேண்டாம்"

கேட்கின்றன. நாசி சுவாசிக்கின்றது. பிற உறுப்புக்களும் உடம்புமேன் உழைத்தலாகாது? சில உறுப்புக்கள் வேலைசெய்ய, பிற சோம்பி இருக்கலாமா? வறிஞரும், தொழிலாளரும் தங்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வேலை செய்கிறார்களென்றால் தனிகரும் பிறரும் ஏன் தங்கள் தேக சுகத்தைக் கோரித் தேகப்பயிற்சி செய்யக்கூடாது?

## சரீர அமைப்பு.

மாந்தர்க் குள்ளது எண்சாணுடம்பு. இந்த எண்சாணுடம்பில் எத்தனை நரம்புகள்! மூட்டுகள் மடங்கி நிமிரக் கண்டிப்பாய்த் தேகப்பயிற்சி வேண்டும், நரம்புகள் தளரவும், இருதயத்தினின்று இரத்தம் புறப்பட்டுத் தாரைகள் வழியோடி மறுமுறையும் தன்னிடம் வந்து சேரவும் நடக்க வேண்டும். தேகப் பயிற்சி செய்தால் கண்டிப்பாய் மயிர்க்கால் வழியே கெட்ட நீர் வியர்வை மயமாய் வெளிப்படும். இரத்தம் சுத்தமடைந்து உடலாதியந்தமும் தடையின்றி ஓடி உடல் முழுவதற்கும் நன்மையை நல்கும். அதுகாலை கால், தலை நோயில்லை. மற்ற எந்த வியாதியும் ஏற்பட இடமில்லை. சகல உறுப்புக்களும் தத்தம் தொழிலைப் பகற்பொழுதில் பயில்கின்றன. இரவில் அனைத்தும் ஒருங்கே ஓய்வெடுத்துக் கொள்கின்றன. இத்தகைய உடல் எவ்வாறு விளங்கும்? பெருத்துப் பருத்து அளவை மிஞ்சிய பூசம்போலிருக்குமா? இல்லை. கண்கள் பறிக்கும் கட்டழகுடைத்தாய் விளங்கும். இவ்வித சரீரத்தைக் கண்ட பிணியும், பிறவும் பூனையைக் கண்ட எலியாம். இத்தகைய தேகத்தையுடையோன் தன் ஜீவிய காலத்தில் அரிய பெரிய காரியங்கள் பல இயற்றுவான். உடற்பயிற்சியால் வரும் உயரிய பயனை அறியாது மெத்த பலஹீனர்களாகவும், அநேக நூதன வியாதிகளை யுடையவர்களாகவும், அற்ப ஆயுளுடையவர்களாகவும் உள்ளவர்கள் நமது முன்னோர் தங்கள் உடல் உழைப்பால் நல்ல திடகாத்திரம் பெற்று நோயற்ற வாழ்வினராய் நீண்டகாலம் உயிரோடு இருந்தனர் என்பதை உணர்வதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கின்றேன்.

## ஒரு நிகழ்ச்சி.

பண்டையில் நமது பார்த்திபர் ஒருவர் தமது ஓய்வு நேரத்தில் தம் மனைவி மக்களோடு நாடோறும் கொட்டை நூற்றும், பாவோட்டியும் தறியைப்பூட்டி நெய்தும் கச்சைகளைப் பின்னுவார்; நேர்த்தியான பீதாம்பரங்களை நெய்வார்; இன்னும் பலதிற வேலைகளைச் செய்வார். அவர் தம்மாலும் தம் பெண்டு பிள்ளைகளாலும் நெய்யப்பட்ட உடைகளையன்றி அன்னிய உடைகளை உடுத்தார். அவனியாளும் அரசர்க்குக் குறையென்ன? அன்றி இவை கிடைப்பதரிதா? ஒரு குறையும், அரிதுமில்லை. அவ்வாறாயின் ஏனப்படிச் செய்தார். அப் பெரியார் சிருஷ்டியின் தன்மையையும், தேகப்பயிற்சியின் பெருமையையும், அதனால் தமக்கு வரும் சுகத்தையும் ஆய்ந்து அறிந்தவராதலால் அவ்விதம் கடனாற்றினார். ஆனால் கைத்தொழிலை, முக்கியமாய் எதையும் அலட்சியஞ் செய்யும் நம் சகோதரர் யாது சொல்வர்? நெசவுத் தொழில் நிசிதமாயிற்றே. அரசன் எவ்விதம் அத்தொழிலைச் செய்தார்? எவ்வாறு செய்யக் கூடும்? வெட்கம், பேர் அவமானம் என்பர். இவ்விதம் அற்ப அறிவாலேயே நம் நாட்டார் மேனாட்டாருடன் சகல விஷயங்களிலும் பின்னடைந்து கடைசியில் அவர்கட்கடிமை யாயினர்.

---

"ஒரு கடவுட் சோதியே பல்லுயிருள்ளும்"



## படித்தலால் பயனில்லை.

ஆகவே, தேகப்பயிற்சி அவசியம் வேண்டற்பாலது. ஆண் பெண் இருபாலர்க்கும் இன்றியமையாதது. ஒவ்வொருவரும் தேகப்பயிற்சி செய்து பழகினாலன்றி வாழ்க்கையை இன்பமாய் நடத்த இயலாது. முக்கியமாக நம் நாட்டில் கற்றவர்களே தேகதிடமின்றி யிருக்கின்றார்கள். மாணவர்களும் அறிவைக்கொண்டு உழைக்கும் உத்தியோகஸ்தர்களும் பிரதிதினமும் ஒரு மணி நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். அதுவும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் செய்வது சாலச் சிறந்தது.

தேகப்பயிற்சி பலவகையாகும். அது வயதுக்குத் தக்கவாறு மாறுபடல் வேண்டும். சிறுவர் ஆடுதல், ஓடுதல், குதித்தல் முதலானவற்றில் பழகவேண்டும். வாலிபர் பந்தாடுதல் கசரத்து செய்தல், தண்டால், பஸ்கி போடுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்ய வேண்டும். வயோதிகர் நடத்தல், வண்டியேறிச் சவாரி செய்தல் முதலியவற்றில் பயிற்சி செய்ய வேண்டும். இதனால் சிறுவர் முதல் விருத்தர் வரை அனைவர்க்கும் தேகப்பயிற்சி வேண்டுமென்பது அவசியமாகிறது. எதையும் படித்தலால் பயனில்லை. படித்தபடி நடந்து அதனால் வரும் பயனை அடையவேண்டிய தவசியம். ஆகவே அனைவரும் தேகப்பயிற்சி செய்து சுகவாழ்வு பெறுவாராக.

### பணம் பற்றிய பழமொழி பத்து

1. இல்லாதவனே பொல்லாதவனே
2. ஈட்டி எட்டினமட்டும் பாயும், பணம் பாதாள மட்டும் பாயும்
3. கைப்பொருள் அற்றால் கட்டிய மனைவியும் பாராள்
4. கையிலுண்டானாலோ காத்திருப்பார் ஆயிரம்பேர்
5. கையில் இல்லாதவன் கள்வன்
6. பணமில்லாதவன் பிணம்
7. பணம் என்ன செய்யும் அது பத்து விதமும் செய்யும்
8. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்
9. பணம் பந்தியிலே குணம் (குலம்) குப்பையிலே
10. மரத்தை இலைகாக்கும், மானத்தைப் பணங்காக்கும்

இ. கா.

---

"தருமத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்"




## "பெரும் பாக்கியம்"

ஒரு ராஜா தம்முடைய அரசாட்சிக்கு உட்பட்ட கிராமங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு ஊருக்கு வந்தார். அந்த ஊர்ப் பெரிய மனிதர்கள் எல்லாரும் வந்து ராஜ தரிசனம் செய்து அவரோடு க்ஷேமாதிசயங்களைக் குறித்துச் சம்பாஷணை செய்தார்கள். சாமானிய ஜனங்களுக்கு ராஜ தரிசனம் சித்திக்கவில்லை. இந்தச்சந்தர்ப்பத்தில் ஒரு ஏழையான நொண்டி அவ்வூரார் எல்லாரிடமும் போய் உங்களுக்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது! ராஜா தாமே வலியவந்து என்னோடு பேசினார்" என்றான். எல்லாருக்கும் அளவு கடந்த ஆச்சரியம் உண்டாகிவிட்டது. அவர்களுள்



ஒருவன்:—"ராஜா உன்னோடு என்ன பேசினார்."

நொண்டி:—"ராஜா தனியாகக் குதிரைச் சவாரி செய்துகொண்டு வரும் போது நான் வழி நடுவில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அப்போது அவர் என்னைப் பார்த்து

"அடே! அறிவில்லாத மட்டிக் கழுதே! இடி குட்டிச் சுவரே! வழியை விட்டு விலகிப்போவாயா மாட்டாயா? என்று அதி உக்கிரத்தோடு கேட்டார். நான் "சித்தம்" என்று விலகினேன். இதுதான் அவர் என்னோடு பேசியது."

***

ஜானகி:—"உன் வீட்டுக்காரருக்கு எந்தப் பதார்த்தத்தின்மேல் மிகுந்த விருப்பம்?'

ருக்மணி:—"என்ன வீட்டில் இல்லையோ, அதன்மேல்தான் அளவு கடந்த பிரியம்"

---

"அகோர தபசி விபரீத சோரன்"



## "மஞ்சள் நீராடல்"

ஒரு வீட்டில் ஒரு கலியாணம் ஐந்து நாள்வரை வெகு விமரிசையாக நடை பெற்றது. கடைசியில் ஒருவருக்கொருவர் மஞ்சள் நீராடத் தொடங்கினர். அவர்களில் ஒரு "புத்திசாலி" தன்னுடைய அக்காள் மீதில் மஞ்சள் நீரை ஊற்றிவிட்டான்.



அக்காள்:—(தம்பியைப் பார்த்து) "இதென்னடா தம்பீ! என்மீது மஞ்சள் நீரை ஊற்றிவிட்டாயே, பார்த்தவர்கள் என்ன சொல்லுவார்கள்?"

தம்பி:-(அக்காளைப் பார்த்து) "ஐயோ! அக்கா நீயா? அம்மாள் என்று நினைத்து உன்மேல் ஊற்றிவிட்டேன்."

***

## "ஜம்பம்"

ஒரு குடியானவனுடைய வீட்டுக்கு அவனுடைய சொந்தக்காரன் ஒருவன் வந்தான்.



சொந்தக்காரன்:——(குடியானவனைப் பார்த்து) "உங்களுக்குப் பசு மாடுகள் ஏதேனும் உண்டா?"

குடியானவன்:—" எனக்கும் சுப்பே கவுண்டனுக்கும் சேர்ந்து ஆயிரம் மாடுகள் இருக்கின்றன."

சொந்தக்காரன்:—(மிகவும் வியப்புடன் அழுத்தமாய் வற்புறுத்தி) அவைகளில் உங்களுக்கு எவ்வளவு, அவருக்கு எவ்வளவு?"

குடியானவன்:—"கவுண்டர் பசுக்கள் தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது. என்னுடையது ஒரு வரட்டுப் பசு."

***

தகப்பனார்:—"உனக்கு, தம்பி பிறந்தால் சந்தோஷமா தங்கை பிறந்தால் சந்தோஷமா?"

பையன்:—"சின்ன நாய்க்குட்டி"

***

"நான் உனக்கு ஒரு முத்தங் கொடுக்கவேணும் என்று விரும்புகிறேன், என்ன வேணும்?"

"க்ளோரோபாரம்"

---

"இருதாரம் ஒருநாளும் தேடவேண்டாம்"

## "அன்னதானம்"



ஒரு ராஜாவின் அன்ன சத்திரத்தில், சாப்பாடு கிடையாமல், பசிக் கொடுமையால் வாடி வருந்திய அநேகர் வந்து சோறு சோறு சோறு என்று கூச்சல் போட்டுப் பறந்தார்கள். சிலர் மூன்று நாட்களாகப் பட்டினி என்றார்கள். சிலர் அன்று மாத்திரம் சாப்பிடவில்லை என்றார்கள். இந்த முறைகளை யெல்லாம் நன்றாகக் கேட்ட பிறகு "மகா புத்திமா"னை ராஜா சத்திர மணியகாரனுக்குக் கட்டளையிடுகிறார்:—"மூன்று நாட்களாகப் பட்டினி உள்ளவர்கள் இன்னும் ஒருநாளைக்காவது சகித்துக்கொண்டிருப்பார்கள். இன்று முழுதும் சாப்பாடு இல்லாமல் இருக்கிறவர்களுக்கு முதலில் சாப்பாடு போடு."

***

உனக்கு எதில் பிரியம் அதிகம்? காரசாமானு—இனிப்பு பக்ஷணங்களா?

"அது வேறொரு விஷயத்தைப் பொறுத்திருக்கிறது"

"எந்த விஷயத்தை?"

"நம்மிருவரில் யார் பணங் கொடுப்பது என்ற விஷயத்தை"

***

இச்சகம் பேசி.—"அது என்னமோ உங்களிடத்தில் ஒரு வசீகரம் இருக்கிறது—என் மனதை இழுத்து விடுகிறது,"

மற்றவர்:—சரிதான் நான் பணக்காரன் என்று சொல்லுவது சுத்தப் பொய்—கொஞ்சமும் உண்மை அல்ல."

***

மேஸ்திரி:-"அங்கே எத்தனைபேர் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள்?"

தொழிலாளி:—"ஏழுபேர்"

மேஸ்திரி:—"சரி—பாதிப்பேரை இங்கே வரச்சொல்லு."

லி. ரா.

---

## வறுமையால் வரும் இழிவு

"துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வள்; தந்தைதாய்
சோகமுற வசை கூறுவார்;
துன்பமொடு மனமெலியும்; மேனி வேற்றுருவமாம்;
தொலையாத கவலை வளரும்;
உதிக்கின்ற புத்தி மழுங்கிவிடும்; கல்விபோம்;
உதரத்தில் அதிக பசியாம்;
உறவின் முறை யாருமொரு வார்த்தை சொல்லார்; சொன்ன
உத்தரமு மொருவர் கேளார்;
விதிக்கின்ற உலகத்தில் எல்லோரும்
இகழுவார்;........................."

## சொற்பிதிர் எண்—2.

1. ம்ரட்ஜிசதிடாத்ரி செ
2. தார்முருபெசங்ப்
3. ஞ்சனிசவன்விவிர்சிதேஷ
4. ன்ன்ங்இஇசிக்பகரன்கயவா கைழ்யி
5. னிதஆபாஆதிங்லஷானகிர் போ
6. ககம்ணபூனஷ
7. ல்கைரீவநதம்னசவவய
8. னமகமோகக்மாம்ணி
9. ம்மாராதவங்த்சக்ஹரயண
10. சிசவிகிணருஞஷ்
11. ல்படி பொசகாபிப்ரவசி

### விடைகொடுக்கும் நேயர்க்குரிய விதிகள்.

1. மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்துகளை முறைப்படுத்தினால் அர்த்த முள்ள வார்த்தையாகும். 2. மேற்கண்ட பிதிரின் விடைகள் செப்டம்பர்மீ 30-ந் தேதிக்குள் வந்து சேரவேண்டும்; 3. 'ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு மாத்திரந்தான் இந்தப் போட்டியில் இடம் உண்டு. விடை அனுப்பும்போது சந்தா எண் குறித்து எழுதவேண்டும். 4. முழுதும் சரியான விடை கொடுப்பவருக்கு பாக்கெட் கடிகாரம் ஒன்று இனாமாக அளிக்கப்படும். 5. செப்டம்பர்மீ 30-ந் தேதியில் முதன் முதலாகப் பிரிக்கப்படும் சரியான விடைக்கே பரிசு கொடுக்கப்படும். 6. சொற்பிதிரைக் குறித்து யாதொரு கடிதப் போக்கு வரவும் வைத்துக் கொள்ள முடியாது. 7. சொற்பிதிர் மானேஜருடைய தீர்ப்பே முடிவானதாகும். 8. விடைகளை அடியிற் காணும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு:—இம்மாத "ஆனந்தபோதினி"யில் வெளிவந்துள்ள விளம்பரங்களிலேயே மேற்கூறிய வார்த்தைகள் இருக்கின்றன.

மானேஜர், (சொற்பிதிர்)

ஆனந்தபோதினி ஆபீஸ், சென்னை.

ஆனி மாதம் வெளியிட்ட சொற்பிதிர் எண் 1-க்குச் சரியான விடை கொடுத்தவர்களின் சந்தா எண்ணும், பரிசுபெற்றவரின் பெயரும் புரட்டாசி மாத "ஆனந்தபோதினி"யில் வெளிவரும்.




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(15-ம் ஞூ 78-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

### 16 - வது அத்தியாயம்

ஆனந்த லிங் ஒரு நொடியில் விஷயத்தின் நிலைமையை யறிந்து கொண்டான்.

கற்பகம் போட்ட கூச்சலால் அடுத்த அறையிலிருந்த கிட்டுவும் மற்றவர்களும் ஓடி வந்தார்கள். கிட்டு "பிச்சா என்ன சங்கதி" யென்றான். பிச்சன் "எனக்கொன்றும் தெரியவில்லை. நான் இங்கு வந்தபோது இவ்வாலிபனும் கற்பகமும் குசுகுசுவென்று பேசிக்கொண் டிருந்தார்கள்" என்றான்.

கிட்டு ஆனந்த லிங்கை நோக்கி, "உன்னைப்பற்றி நீ யென்ன சமாதானம் கூறுகிறாய்" என்றான்.

ஆனந்தலிங் பதில் கூறுவதற்குள் கற்பகம் "இவர் என்னைக் காணவந்தார்" என்றாள்.

பிச்சன் "இது அற்பமான கட்டுக்கதை. இக்கதை செல்லாது" என்று முரட்டுத்தனமாய்க் கூறிவிட்டு, மங்கம்மாளை நோக்கி நீ கற்பகத்தைப் பார்த்துக் கொள். நாங்கள் இவனைப்பற்றி கவனிக்கிறோம்" என்றான்.

மங்கம்மாள் கோபத்தோடு கற்பகத்தை நோக்கி "நீ என்கூட வா!" என்று கூறிவிட்டு, கதவின் பின்னால் பாதி மறைந்து நின்ற மனோன்மணியின் தாயாரை நோக்கி "நீயும் வா" வென்றாள். கற்பகம் சட்டென்று தாண்டி ஆனந்த லிங்கின் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, "நான் வரமாட்டேன். நீங்கள் இவருக்கு ஒரு தீங்கும் செய்யலாகாது" என்றாள்.

மங்கம்மாள்:—"அடி மூடமே. பேசாமல் என்கூட வா"வென்று கூறிக் கொண்டே அவள் தோள்மேல் கைவைத்துக் கொண்டு, "நாடகம் நடிப்பதற்கு இதுவல்ல சமயம்; பேசாமல் வா" வென்றாள்.

கற்பகம் ஆனந்தலிங்கைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். தான் ஆசைகொண்ட இவ்வழகிய வாலிபத் துப்பறிபவனுக்கு இத்துஷ்டர்கள் தீங்கு செய்துவிடுவார்கள் என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும்.

ஆனந்தலிங்குக்கோ தாம் தனியா யிருந்தால் எப்படியேனும் தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பகம் உண்டு. ஆகையால் அவன் "நீ யுன் தாயோடு

"உடலினை உறுதி செய்"



செல். நான் க்ஷேமமாய்த் தப்பித்துக்கொண்டு போய்விடுவேன். நாளைக்குக் குறித்த விடத்தில் என்னைச் சந்தி" என்று இரகசியமாய்க் கூறினான்.

கற்பகம் அவ்வாறே தன் தாயோடும் மனோன்மணியின் தாயோடும், துயரத்தோடு சென்றாள். ஆனந்தலிங்கின் முகக்குறியால் அவளுக்குச் சற்று தைரியமுண்டாயினும், அவளுக்குள் பயம் நீங்கவில்லை.

அவள் சென்றதே ஆனந்தலிங் பிச்சனை நோக்கிச் சாந்தமாகவே, "உன் கையிலிருக்கும் துப்பாக்கியைப் பற்றி ஜாக்கிரதையா யிரு. ஏனெனில் அது திடீரென்று வெடித்துவிடக் கூடும். வெடித்தால் யாருக்கேனும் துன்பமுண்டாக்கும். அந்த யார் என்பது இச்சமயம் நானேயாகும்" என்றான்.

பிச்சன்:—"சற்றுநேரம் உன் வாயைமூடு. உனக்கு அது வேண்டியதாகவே யிருக்கும்" என்றான்.

அதற்குள் கிட்டு:-"வாலிபனே! அந்த அறைக்குள் செல்" என்று, கையால் குள்ளன் இருக்கும் அறையைச் சுட்டிக் காட்டினான்.

ஆனந்தலிங் மனதில் அதையே எதிர் பார்த்துக்கொண் டிருந்தான். ஏனெனில் இதுகாறும் பிச்சன் துப்பாக்கி தனக்கு நேராய் நீட்டப்பட்டிருக்கிறது. இப்போதோ தான் நடந்து செல்லலாம். அவன் நினைத்தபடியே பிச்சன் உடனே துப்பாக்கியைத் தாழ்த்திக்கொண்டான்.

அதுவே யவன் தப்பிப்போக நல்ல சமயம். ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்ததும் பிச்சன் கழுத்தைப் பிடித்துத் தூக்கி அறையில் எதிர் மூலையில் அவனை யெறிந்தான். இந்த ஆச்சரியச் செயலைக்கண்டு மற்றபேர் அடைந்த பிரமிப்பிலிருந்து தெளிவதற்குள் அவன் கள்ள வழியில் நுழைந்து அதன் கதவை மறுபக்கம் மூடிக்கொண்டு அடுத்த அறையில் நுழைந்து மறுநிமிடம் வீதியில் பிரவேசித்தான்.

முதலில் நிதானித்துக் கற்பகத்திற்கு ஏதாவது கெடுதி செய்கிறார்களாவென்று தெரிந்துகொள்ளவும், குள்ளன் அறையில் என்ன சம்பாஷணை நடக்கிற தென்பதையும் அறிய விரும்பினான். ஆனால் மறுபடியும் சிந்தித்துக் கற்பகத்திற்கு ஒரு தீங்கும் நேராதென்று மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு சென்றான். சற்று நேரத்திற்குள் தன்னை யாரோ பின்தொடர்ந்து வருகிறார்களென்றும், அதுவும் குள்ளனே யென்றும் தெரிந்துகொண்டான். ஆயினும் சற்று நேரத்திற்குள் அவனை யேமாற்றிவிட்டுத் தானும் இராஜவேலும் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தான்.

இதற்கிடையில் இராஜவேல் மிக்க திகிலோடும் கலவரத்தோடும் இவன் வரவை யெதிர் பார்த்துக்கொண் டிருக்கிறான். அவன் ஆனந்தலிங்கைக் கண்டதே மிக்க சந்தோஷ மடைந்து "ஆ! வந்துவிட்டாயா? நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். என் மனதிலிருந்த திகிலும் குழப்பமும் ஒழிந்தன. ஏனெனில் இந்த இராக்காலத்தில் என்ன கெடுதி சம்பவித்திருந்தாலும் இருக்கலாம். நமது விரோதிகளோ எத்தகைய பாதகத்திற்கும் அஞ்சாப் படுபாவிகள்" என்றான்.

ஆனந்தலிங்:—நீ என்னைப்பற்றி எள்ளளவும் கவலை கொள்ளவேண்டாம். நான் எந்த நிமிஷத்திலும் சுட்டுவிடப்பட்டாலும் படுவேன். கத்தியால் பின்னால் குத்தப்பட்டாலும் படுவேன். என்னுயிர் எனக்குச் சொந்த

"உதவி புரிக! சண்டை யிடேல்"

மானதல்ல. ஆயினும் அது அனுவசியமாகவாவது, அஜாக்கிரதையாலாவது போக்கடிக்கப்பட மாட்டாது. யாருடைய நன்மையின் பொருட்டாகவாவதே இழக்கப்படும் என்பது நிச்சயம். இப்போது நீ நித்திரை போய்விடாமல் எனக்காகக் காத்திருப்பதைப் பற்றி சந்தோஷ மடைகிறேன். ஏனெனில் உன்னிடம் பேசவேண்டிய விஷயங்களிருக்கின்றன" வென்றான்.

இராஜவேல் ஆவலோடு "இந்த கேஸைப்பற்றியா?" என்றான்.

ஆனந்:—ஆம். மனோன்மணியின் தாயார் மணம்புரிந்து கொள்ளுமுன் அவள் சரித்திரத்தைப் பற்றி யுனக்கேதாவது தெரியுமா?

இராஜவேல்:—எனக்கதிகமாய்த் தெரியாது. இப்போது அவள் பெயர் சாமு அம்மாள் என்றிருந்தாலும் அவள் கன்னிகையா யிருக்கையில் அவள் பெயர் சுந்தரம்மாளென்றும், நமது நாட்டின் தென்பாகத்தில் இருக்கும் தேவகிரி என்ற நகரில் வசித்துக்கொண் டிருந்தாளென்றும் மட்டும் எனக்குத் தெரியும்.

ஆனந்:—தேவகிரி எங்கே யிருக்கிறது?

இராஜ:—எனக்குச் சரியாய்த் தெரியாது. ஆனால் கறுப்பேரிக்குச் சமீபத்தில் என்று கேள்வி.

ஆனந்:—சரி நீ மனோன்மணிக்காக என் கட்டளைப்படி கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொள்வாயா? நாளை காலையே தேவகிரிக்குப் புறப்படுவாயா?

இராஜ:—ஆகா! ஒரு தடையுமின்றி.

ஆனந்:—நான் உனக்கு ஒரு மாறுவேட மணிகிறேன். நீ வேறு பெயர் வைத்துக்கொண்டு அங்கு சென்று ஜெயராமன் என்பவனை மணம் புரிந்து கொண்ட சுந்தரம்மாளும் இப்போது உலகநாதம் பிள்ளையின் மனைவியா யிருக்கும் சுந்தரம்மாள் என்பவளுமாகிய ஒரு மாதைப்பற்றி விசாரிக்க வேண்டும். ஆனால் நீ விசாரிப்பதைப்பற்றி யாருக்கும் அது அவளுடைய கெடுதிக்கென்று சந்தேகம் உண்டாகலாகாது. அதோடு நீ அங்கு சென்றது கோடைகால வாசத்திற்காக ஒரு பிரபுவிற்கு இடம் பார்க்கச் சென்றதா யிருக்கவேண்டுமே யன்றி இந்த வேலைக்கே வந்ததாக யாரும் ஐயுறும்படி நடந்துகொள்ளலாகாது. நான் கூறுகிறவை யாவும் நன்றாய் உன் மனதிற்கு விளங்குகிறதா? நீ மிக்க எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும்.

இராஜ:—நான் அவ்வாறே நடந்து கொள்வேன். ஆயினும் நீ தெரிந்து கொள்ள வேண்டியது இன்ன விஷயம் என்று தெரிந்தால் நான் சுலபமாய்க் கண்டு பிடித்து விடுவேனல்லவா?

ஆனந்:—"ஆம்; உண்மையே. ஆனால் உன் மனதில் முன்னாடியே கொண்டிருக்கும் அபிப்பிராயத்தோடு விசாரிப்பதை விட நீ ஒன்றும் தெரியாமலேபோய் அறிந்துவருகிற சங்கதியே நம்பத் தகுந்தது. ஜெயராமனைப் பற்றி எ[illegible] [illegible]னும் விடாமல் சேகரித்துக்கொள். முக்கியமாய்க் கிழவர்களையே விசாரி. அவர்களுக்குத்தான் பழைய சங்கதிகள் நன்றாய்த் தெரியும். அதோடு அவர்கள் [illegible] ஒன்றைப்பற்றிக் கேட்டால் தங்களுக்குத் தெரிந்த கதை முழுமையும் சாங்கோபாங்கமாய் அளந்துவிடுவார்கள்" என்றான்.

"அறநெறி நிற்றல் அமர வாழ்வாகும்"
எழும்பூ






**ஏககாலத்தில் மூன்று குழந்தைகள்:—**

ஆலப்பிழைக்கருகிலுள்ள கோட்டப்புறம் என்னுமிடத்தில் ஒரு முஸ்லிம் மாதுக்கு ஏககாலத்தில் மூன்று குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பிறந்தன. அம்மூன்று குழந்தைகளும் சௌக்கியமாக இருக்கின்றனவாம்.

***

**சங்கீதம் பாடும் மரங்கள்:—**

விசேஷமாக மரங்கள் எல்லாம் ஒவ்வொரு வகையில் பயன்படக் கூடியனவாகவே இருக்கின்றன. சில மரங்களே சங்கீதக்கருவிகள் செய்வதற்கு உபயோகப்படுகின்றன. அவை எவை என்று அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பியானு வாத்தியக் கருவியின் அடிப்பலகை எலுமிச்சை மரத்தாலானது. மற்றும் இங்கிலாந்தில் காணப்படும் வொயிட்பீம், மேபிள் என்னும் பூவரசுபோன்ற மரம் முதலியவை சங்கீதக் கருவிகளுக்கு உபயோகப்படுகின்றன. ஆபிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் கிடைக்கும் கருங்காலி மரமும் அதிக பிரயோசனப்படும். இவைகளெல்லாம் பாடக்கூடிய மரங்கள்.

***

**நாயின் அபூர்வ அறிவு :—**

இங்கிலாந்தில் ஒருவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அந்நாயினிடம் அவருக்கும் அவரது மனைவிக்கும் பற்று அதிகம். ஒரு நாள் எஜமானி தலை வலியால் அவஸ்தைப்பட்டுக் கொண் டிருந்ததைக் கண்ட அந்நாய் முன்பு தனக்குக் கொடுக்கப்பட்ட மருந்து வைக்கப்பட்டிருந்த அலமாரியைத் திறக்க முயன்றுகொண் டிருந்தபோது அதைக் கண்ட எஜமான் நாய்க்கு மருந்து வேண்டுமோ என்று நினைத்து ஒரு குளிகையை எடுத்துக் கொடுத்தார். அது அக் குளிகையைக் கொண்டுபோய் தன் எஜமானியிடம் கொடுத்து அவள் மடியில் படுத்துக் கொண்டது.

***

**ஊமை பேசிய ஆச்சரியம்:—**

பர்மிங்ஹாமிலுள்ள மாஜி சோல்ஜரான எர்னஸ்ட் சுலிவான் என்பவர் சென்ற ஐரோப்பா யுத்தத்தின்போது தனக்கு ஏற்பட்ட காயத்தால் ஊமையானார். பல டாக்டர்கள் சொஸ்தம் செய்ய முயன்றும் முடியவில்லை. ஆனால் அவர் சமீபத்தில் தம்மனைவியுடன் சினிமா பார்க்கச் சென்றபோது அங்கு யுத்த படக்காட்சியொன்று காட்டப்பட்டதில் அவர் இரத்தக் கொதிப்புகண்டு ஆத்திரமடைந்தார். அவர் ஆத்திரமடைந்ததைக் கண்ட அவர் மனைவி அவரைச் சினிமாவிலிருந்தும் வெளியே அழைத்துக்கொண்டு வீட்டுக்கு நடத்திச் செல்கையில், அம்மனைவி ஒரு மோட்டாரில் அகப்பட்டுக்கொள்ள இருந்தபோது அவர் திடீரென மனைவியின் கையைப் பிடித்து 'கவனித்துப் போ' எனக் கூச்சலிட்டார். அது முதல் அவர் சர்வசாதாரணமாகப் பேசி வருகிறார்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

ப்ரமோதூதஸு புரட்டாசிமூ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1930ஸு செப்டம்பர்மூ—அக்டோபர்மூ

| புரட்டாசி | செப்டம்பர் / 1930ஸு அக்டோபர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | [சங்கர யோக |
| 1 | 17 | புதன் | நவ15-13 | திரு20-5 | சித்60 | ஷடசீதி புண்யகாலம்,ஹா |
| 2 | 18 | வியா | தச9-13 | புன15-48 | அமி60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 3 | 19 | வெ | ஏகா2-0 | பூச10-20 | மர60 | சர்வ மத்வ ஏகாதசி, யதி |
| | | | து53-53 | | | மஹாளய, ஜய துவாதசி |
| 4 | 20 | சனி | திர45-20 | ஆயி4-8 | மர4-8அமி | அவமாகம், மகத் திரயோ |
| | | | | மக57-23 | | தசி, 15க்குள் மழை |
